1130
1-24

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 FEB 1924
MADRAS

உ

கடவுள் துணை.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரமகாத்மியம்

ஸ்ரீமான்,

சி. அண்ணாசாமி அய்யர்

அவர்களால்,

வசனரூபமாய் செய்தது.

சிதம்பரம், மேலக்கோபுரவாசல்,

புத்தக வியாபாரம்,

பி. பாலசுப்பிரமணியம் பிள்ளை

விருப்பத்தின்படி,

சென்னை-சௌக்கார்ப்பேட்டை

பூ-ரா-அப்பாதுரை முதலியார்

பிரசுரிக்கப்பட்டது.

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1923. [அணா-6.

16 FEB 1924

284 538
623

181065

உ

சிவ கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

16 FEB 1924

# விஷய சூசிகை.


| அத்தியாயம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | நைமிசாரண்ணிய வாசிகளான முனிவர்களின் சிறப்பும் அவர்கள் சூதமகரிஷியை வணங்கிச் சிதம்பர மகிமையைக் கேட்டலுங் கூறியது. | 1 |
| 2. | பரமசிவம் நந்திதேவருக்கு உரைத்த சிதம்பர மகிமையைச் சூதமகரிஷி நைமிசாரண்ணிய ரிஷிகட்குக் கூறுகின்றார் | 4 |
| 3. | ஸ்தலமகிமையும், மூர்த்திமகிமையும் உரைத்தது | 6 |
| 4. | தீர்த்தமகிமை யுரைத்தது. | 8 |
| 5. | திருஸகஸ்ர முனீசுவரர்களின் மகிமையுரைத்தது. | 10 |
| 6. | மாத்தியந்தினமகரிஷி உற்பத்தியும், அவர் சிதம்பரக்ஷேத்திரம் அடைந்தது முரைத்தது. | 12 |
| 7. | க்ஷேத்திர மகிமைக்குத் திருஷ்டாந்தமாக வால்கலியின் கதையையுரைத்தது. | 15 |
| 8. | புல்கஸன்கதை யுரைத்தது. | 19 |
| 9. | மாத்தியந்தின முனிவருக்கு வியாக்கிரபாத ரென்னும் பெயர் கிடைத்தலையுங் குறித்தது. | 23 |
| 10. | உபமன்னியுஉற்பத்தியும், அவர்க்காகத் திருப்பாற்கடல் வருதலும் உரைத்தது. | 26 |
| 11. | ஆதிசேடன் விஷ்ணுமூர்த்தியால், ஆனந்தத்தாண்டவ மகிமையை வினவியது | 31 |
| 12. | பரமேசுவரர் பிக்ஷாடனவுருவந்தரித்துத்தேவதாருவனத்தை யடைந்தது. | 33 |
| 13. | | 36 |
| 14. | ஆதிசேடன் ஆனந்தத் தாண்டவஞ் செய்தலைக் கூறியது. | 41 |
| 15. | பரமேசுவரன் ஆதிசேடனுக்கு அனுக்கிரகித்துப் பதஞ்சலியென்னும் பெயர்கொடுத்தலைக் கூறியது. | 44 |


181065

அத்தியாயம். விஷயம். பக்கம்.

16. பதஞ்சலிபகவான் சிதம்பரக்ஷேத்திர மடைந்து வியாக்கிரபாதருடன் நடனதாண்டவ தரிசனத்திற்குக் காத்திருத்தலைக் கூறியது. 48

17. பதஞ்சலி வியாக்கிரபாதருக்கு பரமேசுவரர் ஆனந்தத் தாண்டவதரிசனங் கொடுத்தலைக் கூறியது. 57

18. பதஞ்சலி வியாக்கிரபாதர் நடராஜமூர்த்தியை வரங்கேட்டலைக் கூறியது. 55

19. பிரமா யாகஞ்செய்ய அந்தர்வேதிக்குத் தேவர்களையும், திருஸகவிர முனீசுவரர்களையும் அழைத்துப் போதலைக் கூறியது. 60

20. சிம்மவர்மன் சரித்திரம் உரைத்தது. 62

21. சிம்மவர்மன் தில்லவனம் அடைதலைக் கூறியது. 65

22. சிம்மவர்மன் ஹிரண்ணியவர்மனென்றும் பெயர்பெறுதலைக் கூறியது. 68

23. ஹிரண்ணியவர்மன் வியாக்கிரபாதருடன் சிதம்பரத்தில் வசித்தலைக் கூறியது. 70

24. வசிஷ்டர் ஹிரண்ணியவர்மனை கௌடதேசத்திற்கு அழைத்துப்போதலைக் கூறியது. 73

25. வியாக்கிரபாதர் ஹிரண்ணியவர்மனுக்கு மகுடஞ்சூட்டி ஆலயப்பிரதிஷ்டை செய்வித்தலைக் கூறியது. 77

26. ஹிரண்ணியவர்மன் நடேசமூர்த்திக்கு உற்சவாதிகள் நடத்தலைக் கூறியது. 81

விஷய சூசிகை முற்றிற்று.

உ

சிவகணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.



# சிதம்பரமகாத்மியம்.

முதலாவது அத்தியாயம்.

## நைமிசாரண்ணிய வாசிகளான முனிவர்களின் சிறப்பும் அவர்கள் சூதமகரிஷியை வணங்கிச் சிதம்பர மகிமையைக்கேட்டலுங் கூறியது.

யஸ்மாத்ஸர்வம்ஸமுத்பந்நம் சராசரமிதம்ஜகத்
இதந்நமோநடேஸாய தஸ்மைகாருண்யமூர்த்யே.

தபோயோக்கியமான சர்வசம்பத்துக்களுடன் கூடிவிளங்குகின்ற நைமிசாரண்ணியத்தில் ஒருவராலுஞ் செய்யற்கரிய தவத்தை உறுதியுடன் செய்கின்றவர்களாயும், சர்வலோகங்களுக்கும்ஆதிகாரணமாய் சம்சாரத்திலுண்டாகும் பயத்தை நிவர்த்தித்து நித்யாநந்தத்தைக் கொடுப்பதாயிருக்கும் பரப்பிரமத்தை விசாரணையாலும் தியானத்தாலும், யோகத்தாலும், தபசினாலும், ஞானத்தாலும்உள்ளபடியுணர்ந்தவர்களாயும், கப்பிரமானநடையும், சாந்தமுள்ளகுணமும், சந்தோஷசித்தமும், சப்பூர்ணதேஜசும், குரோதமற்றமனமும் கோதகன்றதவமும் பொருந்தியுள்ளவர்களாயும், சகல இச்சைகளையும்விட்டவர்களாயினும், மோக்ஷயிச்சையில் மிக்கவர்களாயும், சிவபூசைசெய்வதைத்தவிர இதரகாரியத்தில் பிரவிர்த்தி அற்றவர்களா

யும், தவத்தாலும், புராண சிரவணத்தாலும், சாஸ்திரவிசாரணையா லும், அளவிறந்தகாலங்களை அரைக்ஷணமாய்க் கழிக்கின்றவர்களா யும், தங்கள்திருஷ்டிவிசேடத்தால் உலகங்களைப் பரிசுத்தஞ்செய்கி றவர்களாயும், ஆனந்தமாகிய விதைக்கு மூலமாயும், பொறுமையா கியசமுத்திரத்திற்குச் சந்திரர்களாயும், பாவமாகி காட்டிற்கு அக் கினியாயும், புண்ணியமாகிய விதைமுளைப்பதற்கு நல்லபூமியாயும், ஜன்மமாகியதுக்கத்தை நீக்குதற்கு இடைவிடாத பிரமத்தியானஞ் செய்கிறவர்களாயும், ஜடாவற்கலங்களைத் தரித்துக்கொண்டுசீலர்க ளாய் அக்கினிஹோத்திராதிகளைப்புரிபவர்களாயும், இந்திரியங்களை அடக்கித்தத்துவஞானத்தைஉலகத்திற்கு உபதேசிப்பவர்களாயும், அகண்டமான ஆனந்த விபவத்தையே தங்கட்குரிய சம்பத்தாய்க் கொண்டவர்களாயும் இருக்கின்ற மகரிஷிப்பிரபந்தக்களைப் பார்ப் பதற்குவேதவியாசமுனிவரின் தபோபலம்போன்றசூதகமகாரிஷி வந்தனர். முந்தினவர்கட்கெல்லாம் முந்தினவராயும் மகாத்மாவாயு மிருக்கிறசூதமகாரிஷியின் வரவைக்கண்ட நைமிசாரண்யவாசிகளா னரிஷீஸ்வரர்கள் கரைகாணாத ஆனந்தசமுத்திரத்தில் முழுகியமன துள்ளவர்களாய் எதிர்கொண்டழைந்து விசேட மரியாதையுடன் ஆசனத்திலெழுந்தருளச்செய்து அர்க்கியபாத்தியஆசமனீயமதுபர் க்காதிகளால்உபசரித்துப் பலமுறை வந்தித்து அவரனுமதியின்பே ரில்கைகூப்பிக் சந்நிதியிலுட்கார்ந்து அவர் வரவாகிய மகோற்சவ உற்சாக சித்தர்களாய் மலர்ந்த முகத்தோடு விளங்கும்உயர்ந்தசூத மகாரிஷியை மிகுந்த வணக்கத்தோடு கேட்கத்தொடங்கினார்கள்.

சகலபுராண மர்மதர்மங்களை உள்ளபடியுணர்ந்து அறிவிலுயர் ந்த சூதமகரிஷியே! இரண்டாவது சூரியனைப்போன்ற தேவரீரால் இவ்வுலகம் பரிசுத்தமாகச் செய்யப்பட்டிருக்கின்றது லோகானுக் கிரக கர்த்தாவாகிய வியாஸாசாரியர் சகலபுராணங்களுக்கும் அழி வில்லாதஆதாரமாகத்தம்மைப்படைத்திருக்கின்றனர் தேவரீர்முக மாய் நெடுநாளைக்கு முன்னர் உலகின்கண்ணுள்ள மூர்த்தி,ஸ்தலம், தீர்த்தம், இவைகளின் மகாத்மியங்களைக் கேட்கப்பெற்றோம். அவ ற்றுள் உயர்ந்ததாய்ப் பிறவியால்வரும் பாபராசிகளைப் போக்கிப் புண்ணியத்தைவிருத்திசெய்வதாய்ப்புத்திமுத்திகளைஎளிதிற்கொடு ப்பதாயிருக்கின்ற புண்ணிய ஸ்தலமாய் விளங்கும் புண்டரீகபுரமெ ன்னும் சிதம்பரமகாத்மியத்தை இன்னமுந்தேவரீர்முகமாய்விஸ் தரித்துக்கேட்க அபேட்சிக்கின்றோம். வியாஸாசாரியுன் முக்யசிஷ் யராயும், புராணபக்தருள் சிரேஷ்டராயும் விளங்குகின்றதேவரீரே

தயைகூர்ந்து; உரைத்தருளல்வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். பிரமநிஷ்டர்களாகிய மகரிஷிகளின் வேண்டுகோளைக்கேட்டவியாஸாசாரியரின் சிஷ்யரத்தினமாகிய சூதமகாரிஷி அளவிறந்தமகிழ்ச்சியடைந்து ஜகத்துக்கு ஆதிகாரணமாய் ஆதியந்தரகிதராய்ப் புருஷோத்தமராய்ப் புருஷார்த்தங்களை அளிப்பவராய்விளங்குந்தமது குருமூர்த்தந்தியானித்து வந்தித்து ஆனந்தபரவசராய்ச் சொல்லத் தொடங்கினர்.

சிவஞானச்செல்வம்வாய்த்த தபோதனர்காள்! எந்தக்ஷேத்திர மகிமைகள் வேதாகமங்களால் அளவிட்டறியக்கூடாமல் இருக்கின்றனவோ, எது கோடிஜன்மங்கள் ஜனிப்பினும் நினைத்தற்குத்துர்லபமோ அப்படிப்பட்ட க்ஷேத்திர மகிமையைக் கேட்கத்தொடங்கினீர்கள். உங்கள்புத்தியேபுத்தி! உங்கள் பக்தியேபக்தி! உங்கள்பாக்கியமேபாக்கியம்! நீங்கள் வினவிய க்ஷேத்திரமகிமையைச் சுவர்க்க மத்திய பாதாளமென்னும் மூவுலகோரில் யாவரறிவார்கள். பரமசிவத்தின் உண்மையை உள்ளபடியுணர்ந்த ஐங்கரக்கடவுளும், பிரணவார்த்தந்தெரிந்த அறுமுகக்கடவுளும், நான்மறையோதும்நான்முகத்தேவும், யோகநித்திரைசெய்யும் லட்சுமிநாதனும், லட்சுமிநாதனை பத்திவிசேடத்தால் தாங்கும் ஆதிசேடபகவானும், தேஜசில் உயர்ந்தசூரியதேவனும், புத்தியிற்பெரியதேவகுருவும், நீதிசாஸ்திரந்தெரிந்த சுக்கிராசாரியரும், திக்குகளை இரக்ஷிக்குந் திக்குப்பாலகர்களுஞ்சிறிதும் அறியமாட்டார்கள் எனில், யான் அறிதற்குஉரியனோ? பிரமரூபமாய் விளங்குஞ் சிதம்பர க்ஷேத்திரமானதுவேதாகமங்களின்ரகசியப்பொருளாயும், பரமசிவத்தின் ஆனந்தத்தாண்டவத்திற்கு விஸ்தாரமாகியமூலஸ்தானமாகவும் இருப்பதால், அதின் மகாத்மியத்தை யாவராலும் அறிதற்கு அசக்கியமாயிருக்கின்றது.

அந்தச்சிதம்பர மகிமையைச் சர்வலோக நாயகராகிய சாம்ப பரமேசுவரர் அறிவரேயன்றி மற்றொருவரும் அறியமாட்டார்கள். இதைநான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன், அன்றியும் எந்தத்தேஜசின்பிரபாவத்தாற் பிரமவிஷ்ணு முதலிய பிரபஞ்சங்கள் விளங்கிவருகின்றனவோ, அந்தத்தேஜசே சிதம்பர க்ஷேத்திரத்தில்சிற்சபையின்கண் அனவரதத்தாண்டவஞ் செய்தருளுகின்றது. அதற்குச்சமீபத்தில், மகாதேவியாய், ஆனந்தத்தாண்டவ சாக்ஷிணியாய், ஆனந்தப்பெருக்கைப் பரமசிவத்துக்குச் சதாகொடுப்பவளாய்ச்சகலபுவனங்களின் உற்பத்திஸ்திதி லயங்களுக்குக்காரணியாய், பரமானந்த

மாகிய சந்திரோதயத்திற்கு இராத்திரியாய்; அன்பர்களுக்கருட்பா
லிக்குங் கருணைநிறைந்து ததும்புங் கடாக்ஷ வீக்ஷணமுள்ளவளாய்.
தன்புன்சிரிப்பாகிய முத்துத்தீபத்தால் உலகங்களைப் பிரகாசிக்கச்
செய்கிறவளாய் இருக்கின்றசிவகாமசுந்தரியென்று அருமைத்திருப்
பெயர்தரித்துவிளங்கும் ஞானசக்தியும், அச்சக்தியைவாமபாதத்தி
ற்கொண்டமர்ந்தருளும் சிற்சபைவாழீசனும் அச்சிதம்பர மகிமை
யைஒருவாறு அறியுந்தரத்தாரோ அல்லவோ அறிகின்றிலேன், பதி
னெண்புராணங்கள்சொல்லும் க்ஷேத்திரங்களுக்குள்உயர்ந்ததாய்க்
கேட்போர்களின் பாவங்களைப் போக்கடித்து முத்திகளை எளிதில்
அளிக்கத்தகுந்ததாய் இருக்கின்ற சிதம்பரமகாத்மியத்தைப்பூர்வம்
சிவபக்தசிரோமணியாகிய நந்திதேவர் உமாகாந்தராகியபரமேசுவர
ரின்முகமாய்க் கேட்கப்பெற்றுச் சிவஞான சாம்பவராகிய சனற்
குமார முனிவருக்கு உபதேசித்தனர். சனற்குமாரமுனிவர்வேதவி
த்தாகிய வியாசமகாரிஷிக்கு அனுக்கிரகித்தனர். வியாசபகவானால்
அதிரகசியமாயும், உத்தமோத்தமமாயும் விளங்குகின்ற அந்தக்ஷே
த்திர மகிமையை எனக்கு அருளப்பெற்றனன். ஓதபோதனர்களே!
கேட்பதற்கினியதும் சோபான பரம்பரையால்க் கிடைத்ததுமான
அந்தஅற்புத மகாத்மியத்தை உங்களுக்கு நான் தெரிந்தவரையிற்
சொல்லுகின்றேன். சிரத்தையுடன் அந்தக்ஷேத்திரமகிமையைக்கே
ட்டு ஆனந்தமாகிய மணம்வீசும் அம்புஜம்போன்ற அழகியகுஞ்சித
பாதத்தைத்தெரிசித்தவர்கள் திவ்விய ஞானம் வாழ்த்துமோக்ஷ
சுகத்தை அடைகிறார்கள். அசிரத்தையுடன் கேட்டவர்களும்தாங்கள்
செய்த பாவங்களினின்றும் விடுபடுகிறார்கள். என்று சூதாசாரியர்
முனிவர்களுக்குக் கட்டளையிட்டுச் சிவபெருமான் நந்திதேவருக்கு
அருளியபடி சிதம்பரமகிமையைச் சொல்லத்தொடங்கினார்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## இரண்டாவது அத்தியாயம்.

### பரமசிவம் நந்திதேவருக்கு உரைத்த சிதம்பரமகிமையைச் சூதமகரிஷி நைமிசாரண்ணிய ரிஷிகட்குக்கூறுகின்றார்.

திருக்கயிலாச பர்வதத்திற்கு சிரோரத்தினமாய் விளங்கும்
பரமேசுவரரைச் சிவகணத்தலைவரான நந்திகேசுவரர் நமஸ்கரித்து
மிகுந்த அன்புடன் வினவுகின்றார். சராசர ரூபமாகிய இவ்வுலக
த்திற் பரிபூரணமாய்க் கருணையுடன் விளையாடிக் கொண்டிருப்பவர்
தேவரீரைத்தவிர வேறுயாவரிருக்கின்றார்கள், பெரியதினும்பெரிய்

தாய் சிறியதினுஞ்சிறியதாய்முத்தொழிலுக்கும் முதற்காரணமாகிய தேவரீரையன்றி ஒரு சிறுதுரும்பும் அசையவல்லதோ தேவரீரின் அவ்வியாஜ கருணைப்பிரபாவத்தால் அகண்ட சுகப்பேற்றை உலகங்கள் அடைகின்றன எந்தக்காலத்தில் இப்பசுக்களாகிய ஜீவர்களுக்குத் தேவரீருடைய சரணாரவிந்தசேவை கிடைக்கின்றதோ அக்காலத்திற்றான் பிறவியென்னும் பந்தத்தினின்று விடுபடுகின்றார்கள். கடினமான தவத்தாலும், கால்வருந்த ஓடிஆடுந்தீர்த்தாடனங்களாலும், வாய்வருந்தச்செய்யும்ஜபங்களாலும், கண்புகையேறப்புரியும் ஹோமாதி கர்மங்களாலும், காயத்தை இளைக்கப்பண்ணும் உபவாசங்களாலும், வெகுநாட் படித்துஞ் சந்தேக விபரீதங்கள்ஆறாத வேதாகமசாஸ்திர இதிகாசபுராணங்களாலும், எந்தச்சுகங்கிடைக்கமாட்டாதோ அந்த நிரதிசயானந்தப் பெருஞ்சுகத்தைத் தேவரீர் சரணசேவையின் புண்ணியப்பிரபாவம் ஒருக்ஷணத்திற் கொடுக்கச் சக்தியுள்ளதாயிருக்கின்றது.

தத்துவாதீதமான தேவரீரின் பாதசேவையால் உலகத்தார் துக்கமற்றவர்களாக ஆகின்றார்கள். எந்த இடங்களிற்சுகரூபமான சரணசேவை கிடைக்கின்றதோ அந்த இடங்களில் சகலசித்திகளும் உண்டாகின்றன. பதினான்கு லோகங்களுக்குள் உத்தமமான சிவக்ஷேத்திரங்கள் அநேகம் இருக்கின்றன அவற்றுட் புண்டரீகபுரம் உத்தமோத்தமமென் றனுக்கிரகித்திருக்கின்றீர். அதின்மகாத்மியத்தைத் தேவரீர்முகமாய் விஸ்தரித்துக்கேட்க மிகவும் அபேக்ஷிக்கின்றேன்தயைகூர்ந்துஉரைத்தருளல்வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். பிரார்த்தித்த நந்திதேவரைக்கருணைமலர்ந்த முகத்தோடுவிளங்கும் பார்வதிபதியானபரமேசுவரர் பார்த்துமிகுந்தபிரியத்துடன் சொல்லுகின்றனர். மதியிலுயர்ந்த கணசிரேஷ்டனே! நீ அன்புடன் கேட்கப்பெற்ற சிதம்பர மகாத்மியத்தை விஸ்தாரமாய்ச் சொல்லுகின்றோம். அந்தஅற்புதமகாத்மியத்தை உள்ளபடிசொல்வதற்குநாமும் அதை உண்மைதங்கிய பக்தியுடன் கேட்பதற்கு நீயுந்தவிர வேறு யாவரிருக்கின்றார்கள். நிர்மலமாயும் அதிரகசியமாயு மிருக்கின்ற எமதுரூபத்தை யாவரறிவார்களோ அவர்கள்கூட அச்சிதம்பரமகிமையை அறியுந்தரத்தரல்லர். சிதம்பரம் என நினைத்தமாத்திரத்திற் கோடிஜன்மங்களிற்செய்த மகாபாப சமூகங்களை ஒழித்து வீடளிக்கும் புண்ணிய விசேடம்பொருந்திய அத்தலத்தின் அற்புதப்பெருமையைவர்ணித்துரைக்கஎமக்கும் அசக்கியமெனஎண்ணுகின்றோம் பதினான்குபுவனங்களிலுள்ள எமதுக்ஷேத்திரங்களுள் உயர்ந்ததாய்

எமது பிரேமைக்கு இருப்பிடமாய் ஒருயோசனை அகலமுள்ளதாய் எம்மையுணர்ந்த பேரறிவாளர் வசிப்பதாய் எமபயத்தை நிவர்த்தி பண்ணுவதாய் விளங்கும் சிதம்பரமானது எமது கயிலாசத்தைப் பார்க்கிலும் அதிகமேன்மையுள்ளது. அத்தலத்தின்எழுநிலையமைந் தநான்குகோபுரங்களும் எமது உருவங்களே. அன்றியும்; புண்ணிய ராசிகளாகிற கொடிகள் வளர்தற்குப் பூந்தோட்டமாயும், வித்தை களாகிற மங்கைகள் வசிக்கும் உப்பரிகையாயும்,பாபரூபமாகிற கலிக்குக் காளராத்திரியாயு மிருக்கிற சிதம்பரதலத்தில் ஓர் நிமிஷ காலஞ் சிரத்தையுடன் எவர்கள் வசிக்கப் பெற்றார்களோஅவர்கள் தான் தாண்டற்கரிய சமுசாரசமுத்திரத்தைச் சுலபமாய்த்தாண்டு கிறவர்கள். அவர்கள் தான்பிறந்தபயனையடைந்தவர்கள். அவர்களே எமது பிரியத்திற்குரியவர்கள் ஜன்மமாகிய வினையை விட்டவர்கள். உலகத்தைப்பரிசுத்தஞ்செய்தற்குக்காரணமானவர்கள். அவர்களே எம்மை அனந்தராயும், அபரிச்சேத்தியராயும், லோகாதாரராயும். பிரபுவாயும், நித்தியராயும் ஞானதிருஷ்டியால் உள்ளபடி பார்க்கிற வர்கள். இவ்வாறுபார்க்கும்ஞானவான்கள் எம்மாலும்புகழ்தற்குரி யவர்கள் மேலான சுத்தஜன்மம் வாய்ந்த அவர்களின் வைபவம் வாக்கினாற் சொல்லி முடியமாட்டாது. அச்சிதம்பரக்ஷேத்திரத்தில் ஒருக்ஷணநேரம் வசித்தவர்கள் எமது ரூபமான கயிலாசத்திலெப் போதும் வசித்தவர்களாகின்றார்கள்.

இரண்டாவது அத்தியாயம்-முற்றிற்று.

---

மூன்றாவது அத்தியாயம்.

## ஸ்தலமகிமையும், மூர்த்திமகிமையும் உரைத்தது.

புண்டரீகபுர மென்னுஞ் சிதம்பர ஸ்தலமானது வசிப்பவர் களின் பாவங்களைப்போக்குவதில் அக்கினியைப் போன்றதாய்,ஞா னவான்களான ரிஷிசிரேஷ்டர்களால் வந்திக்கப்பட்டதாய், அனை வர்க்கும் இகபரங்களைஈதற்குரியதாய்,பிரமவிஷ்ணுகணபதி முதலிய தேவர்களாற் சேவிக்கப்பட்டதாய், புண்ணியத்திற்கு எல்லையாய், வேதாகமங்கள் நெடுநாள் முயன்றும் நாடற்கரியதாய், மாயையாம் பந்தத்தை யொழித்துயர்ந்த சிலஞானிகளாலறிவதற்குரியதாய், ஓர் நிமிஷம் வசிக்கும் புண்ணிய விசேடத்தால் அசுபகரமான ஜெனன மரணங்களை நீக்கிச் சுபகரமான சர்வசித்திகளையுங் கொடுப்பதாய், ஜீவகோடிகட்கு நித்தியானந்தத்தை விளைவிப்பதாய்க், கோடிசூரி யர்கள் உதித்ததுபோன்ற சிவதேஜசு நிறைந்துள்ளதாய்க், குறை

வற்ற சம்பத்தை உடைத்தாயுமிருக்கின்ற எமது பிரேமைக்கு வாசஸ்தானமான சிதம்பரக்ஷேத்திரம் அதுஎல்லாக்ஷேத்திரங்களுக்கும் முந்தியெம்மாற்சிருட்டிக்கப்பட்டது எக்காலத்தும் யாவராலும் அழிவற்றது. விசேடமகிமைதங்கிய உயர்வைப்பெற்றது.

எம்மையுள்ளபடி யுணர்ந்த தத்துவ ஞானிகளாலும் பார்வதி தேவியோடு கூடியஎம்மாலும் புகழப்பட்டது. இவ்விதப் பெருமை பூண்ட விராட்டின் ஹிருதயாரவிந்தமாகிய அந்த க்ஷேத்திரத்தில் பக்தர்களுக்கு சுத்தபோத சுகத்தை யளிப்பதற்காக நாம் ஆனந்தத்தாண்டவஞ்செய்து வருகின்றோம். எமது இடதுபாகத்தை யலங்காரஞ்செய்து வருகின்ற லோகமாதாவான பவானி எமது ஆனந்தப் பெருக்காற் செய்யும் நிர்த்தனத்தை உள்ளபடியேநோக்கிச் சுகிக்கின்றனள். விக்கினங்களாகிற இருட்டிற்குச் சூரியனைப் போன்ற விக்கினேசுவரனும் மிகுந்த அன்புடன் நேத்திரசலனமின்றிப் பார்த்துக்களிக்கின்றனன். பிரம, விஷ்ணு, இந்திரன், லட்சுமி, சரஸ்வதிமுதலிய தேவர்களும் பக்திசெய்து தெரிசிக்கின்றார்கள்மத்தியந்தனரின் புத்திரராய் ஞானநேத்திரத்துடன் விளங்கும் வியாக்கிரபாதனும், பூமியைத் தாங்கியசிரமும் வியாகரண முடிவிலோங்கியமனமும் பொருந்திய பதஞ்சலியும் வேதாகமங்களின் உண்மையைஉள்ளவாறுணர்ந்த மூவாயிரமுனிவர்களும், நிட்சித்தமுள்ள ஹேமவர்ம சக்கிரவர்த்தியும், எமது ஆனந்தத் தாண்டவத்தைஅன்புடன் தெரிசிக்கப் போகின்றார்கள்.

எவர்கள் எமது ஆனந்தத் தாண்டவத்தைத் தெரிசிக்க வில்லையோ அவர்கள் புழுக்களினுந் தாழ்ந்த ஜன்மத்தை யடைந்தவர்கள். தெரிசனஞ்செய்யாதவர்களின் புண்ணியக்கூட்டங்களும்பாவங்களாகவே ஆகிவிடும். எமது அருளினாற் கிடைக்குந் திவ்வியநேத்திரத்தால் எமது ஆனந்தத்தாண்டவ தெரிசனையைச் செய்வார்கள். வேதாகமங்களினுட்பொருளை யுணராது பக்தியீனர்களாயும் சப்தார்த்தவாதப் பிராந்தர்களாயுந்திரிகின்ற அவிவேகிகளுக்கு எமது நிர்த்தனதரிசனங் கிடைக்கமாட்டாது

குறைவற்றதாகிய எமது நிர்த்தன விபவத்தைப் பார்த்தவர்கள் போகத்தைக் கொடுக்கிற சுவர்க்கத்தை யாகத்தால் இச்சிக்கமாட்டார்கள். சித்கனமாயும் மிகுந்த சுகமாயும், அழிவற்றதாயும், விசேடமேன்மை பொருந்தியதாயுமிருக்கிற சாயுச்சிய முக்தியைக்கூட மனதினால் ஓர்பொழுதும் இச்சிக்கமாட்டார்கள். கண்களுக்கு மங்களகரமாகிய எமது ஆனந்தத் தாண்டவத்தை எவன் பாக்க

வில்லையோ அவன் பாவிகட்குள் தலைமையானவன், பயனற்ற ஜன்மத்தையுடையவன், அறிவில்லாதவன், தர்மமில்லாதவன், முத்திக்கு விரோதமாகிய பாசங்களாற் கட்டுண்டு அனேகந் தாழ்ந்த ஜன்மங்களிற் பிறந்தவருத்தமடைபவன் இதைப்பற்றிவிசேடம்இனிஎன்ன சொல்லப்போகின்றேன். அளவிறந்தமகிமையமைந்தஅத்தலத்தின் பிரபாவ விலாசத்திலுள்ள சூக்ஷ்மத்தைச் சொல்லுகின்றேன். புண்ணிய விசேடத்தாற்செய்த உக்கிரமான தவந்தோர்க்குக் கிடைப்பதற்கரிய முத்திசுகத்தை எமது சிதம்பரத்தில் வசிப்பவர் அடைகிறார்கள். ஆனந்த ரூபமான நித்திய தாண்டவத்திற்கு விஸ்தாரமான அரங்கமாயிருக்கின்ற அப்புண்டரீகபுரம் எம்மால்நிர்மாணஞ் செய்யப்பட்டிருக்கின்றது என்று விஸ்தாரமாக இம்மகத்துவத்தை ப்பூர்வம் அன்பு மிகுந்த நந்திதேவருக்குப் பரமேசுவரர் அனுக்கிரகித்தனர் அந்தத் திவ்விய மகத்துவத்தைச் சிவஞான சுகம் வாய்த்ததபோதனர்காள்! நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன் மிகுந்த பக்தியுடன் உகந்து கேளுங்கள், நிரதிசயானந்தமான மோக்ஷசுகத்தை வேண்டுபவர்கள் சிதம்பரக்ஷேத்திரமடைந்துஞானசக்தியுடன் ஆனந்தத்தாண்டவஞ்செய்யும் மகாதேவனைத்தரிசித்துநியமத்துடன்வசித்தலைத்தவிர வேறுசாதனங்கள் இல்லை என்றுஉரைத்துப்பரமசிவம் நந்தி தேவருக்கு உரைத்த தீர்த்த மகிமையைச் சொல்லத் தொடங்கினர்.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## நான்காவது அத்தியாயம்.

## தீர்த்தமகிமையுரைத்தது.

அன்புமிகுந்த நந்திதேவனே!

புண்டரீகபுரத்தில் ஆத்மாநந்தத்தைப் பிரகாசஞ் செய்துக் கொண்டு நிர்த்தனம்புரியு மெம்மை இடைவிடாது அனந்தவல்லியான சிற்சக்தி பார்த்துக்கொண்டே யிருக்கிறாள். அந்த க்ஷேத்திரத்தில் எம்மைத் தெரிசிக்கும் பக்தர்களுக்கு நிமிஷந்தோறும் அனுக்கிரஹஞ் செய்துவருகின்றேம், அவ்விடத்தில் ஒருக்கால் நம்மைப்பார்த்த ஜீவர்கள் தாங்கள்செய்த பாபங்களினின்றும்விடுபடுகிறார்கள் அத்தலத்திற் செய்யப்படும் ஹோமம் தானம் ஜெபம் முதலியவைகள் சிறிதாயினும் அளவிறந்த புண்ணிய பலனைக் கொடுக்கத்தக்கவைகளாம். அந்த க்ஷேத்திரத்தில் சிவகங்கை யென்று. பேர்புனைந்து விளங்கும் அற்புத மகிமையுள்ள ஓர்

தடாகமிருக்கின்றது கோடிஜன்மார்ஜிதமான பாவசமூகங்களைத் தனது மகாத்மிய புண்ணிய சிரவணத்தினாற் போக்க வல்லமையுள்ள அச்சிவகங்கையின் தென்கரையில் நாம் ஆனந்தத்தாண்டவஞ்செய்துவருகின்றோம். அத்தீர்த்தம் உலகின்கண்ணுள்ள எல்லாப்புனிததீர்த்தங்களிலும் மிகப்புனிதமுடையது புண்ணியத்தை விருத்திசெய்து வீடளித்தற்குப் பெரிய காரணமானது தங்கமயமான பங்கயமலர்ந்து எந்தும் மணம் வீசும் அத்தீர்த்தத்தில் பக்தியில்லாது விளையாட்டாகவாயினும் அருந்தல் குளித்தல் ஸ்நான முதலியவைகள் செய்தவரைப்பார்த்த எமனுடைய இருதயம் நடுங்குகின்றது. அவர்களுடைய வரவை நினைத்து எமதுவுலகம் விசாலத்தை அபேக்ஷிக்கின்றது புண்ணிய நிறைந்த அத்தீர்த்தத்தில் ஒருக்கால் ஸ்நானஞ்செய்தவன் பிறகு எத்தலத்தில் எவ்விதமாயிருப்பினும் எமது லோகத்தையடைகின்றனன். அதில்ஸ்நானஞ்செய்து சிற்றம்பலத்தில்நர்த்தனஞ்செய்யும் எம்மைத்தெரிசித்துச் சிவபஞ்சாக்ஷாத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்தவன் சகல பாபங்களினின்றும் விடுபட்டு எமதுரூபத்தையடைகின்றனன். மேக்ஷசங்கரமணத்தில் ஸ்நானஞ்செய்தவர்கள் உடனே மகா பாவங்களினின்றும் விடுபடுகிறார்கள் ஆனிமாசபிரவேசத்திலும் அந்தமாசத்திய கிருஷ்ணபக்ஷ அஷ்டமியிலும், ஸ்நானஞ்செய்தவர்கள் அளவிறந்த சிவபுண்ணியங்களை அடைகின்றார்கள். துலாமாசத்தில் உத்திரநக்ஷத்திரத்தில்ஸ்நானஞ்செய்தவர்கள் ஜனனமரணத்தினின்று நீங்குகிறார்கள். தைமாசத்தில் புஷ்ப நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ்செய்தவர்கள் தேவர்கட்கெல்லாம் தலைவனாவார்கள். பங்குனிமாசத்தில் உத்திர நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ்செய்தவர்களெமது சாரூப்பியத்தை யடைகிறார்கள். வெள்ளிக்கிழமையில் ஸ்நானம் பண்ணினவர்களின் புண்ணிய விசேடத்தை எம்மாலுஞ் சொல்லமுடியாது மாசிமாசம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியில் ஸ்நானஞ்செய்து பிதுருகுலங்களில் நூறுகுலங்களை மோக்ஷத்திற் சேர்க்கிறார்கள். ஆவணிமாசத்தில் ஸ்நானஞ்செய்து தர்ப்பணஞ்செய்தவர்கள் 21-குலங்களைத்திருப்திசெய்விக்கிறார்கள் மார்கழிமாசத்தில் சுக்கிலபக்ஷத்திலாவது கிருஷ்ணபக்ஷத்திலாவது பிதுருக்களை உத்தேசித்து அச்சிவகங்கைக்கரையில் சிரார்த்தஞ்செய்தவர்கள் 7-குலங்களைத் தாரணஞ்செய்விக்கிறார்கள் சந்திரசூரியர்களுடைய கிரஹணகாலங்களிலும், திருவாதிரை நக்ஷத்திரத்திலும் ஸ்நானஞ்செய்து சிரார்த்தம் புரிபவர்கள் கதியற்றவர்களாய்ப் பசியாலுந் தாகத்தாலும் வருந்துகிறவர்களான தமது குல பிதுருக்க

ளைப் பிரமகற்பம் வரையில் நித்திய திருப்தர்களாகச் செய்கிறார்கள். அப்புண்ணிய தடாகக்கரையில் பிராமணபோஜனஞ் செய்து வைப்பவர்கள் தனது வம்சங்களுடன் எமது சாயுச்சியத்தை யடைகிறார்கள்.

கணேத்தமனான நந்திதேவனே! இவ்வித மகிமைபொருந்திய சிவகங்கையை உடைத்தான எமது சிதம்பரத்தில்வசிக்கும்படிபிராமணோத்தமர்களுக்குஞ் சிவஞானிக்கும் கிருகங்கள், மடங்கள் கட்டிக்கொடுப்பவர்கள் சம்சார பயத்தினின்று நீங்கி எமது சாரூபத்தையடைகிறார்கள். அநேககோடி ஜன்மங்களில் செய்த புண்ணியங்களிருந்தாலன்றிச் சிதம்பரக்ஷேத்திரவாசங் கிடைக்கமாட்டாது. அந்த க்ஷேத்திரம் மனிதர்களின் பாவ நிவர்த்திக்காகவே ஆதியில் எம்மால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது அதனால் அதற்குமேலாகிய க்ஷேத்திரம் எவ்வுலகங்களிலுமில்லை. அந்த க்ஷேத்திரத்திற்கு முக்கிய காரணமானவர்களாயும் அமிர்தம்போன்ற குணத்தை உடைத்தானவர்களாயுமிருக்கிற திருஸஹஸ்ரமுனீசுவரர்களின் மகாத்மியத்தைச் சொல்லுகின்றேன்.

நான்காவது அத்தியாயம்-முற்றிற்று.

---

ஐந்தாவது அத்தியாயம்.

## திருஸகஸ்ரமுனீசுவரர்களின் மகிமையுரைத்தது.

மதுரமானவாக்கினால் சரஸ்வதியைப் போன்றவர்களும், சுத்த ஜன்மத்தைப் பெற்றவர்களும், வேதாத்தியயனஞ் செய்வதிற் பிரமதேவருக்குச் சமானமானவர்களும், தக்ஷிணைகளோடு கூடிச் செய்யும் யாகங்களால் தேவதைகளைத் திருப்திசெய்விப்பவர்களும், வஞ்சனையில்லாத மனதுடன் எமதுபூஜையைச் செய்பவர்களும், சடையிற் சந்திரனும், நெற்றியில் நேத்திரமும், வாமபாகத்திற் பார்வதியும் இலாது எம்மைப்போல் விளங்குகிறவர்களும், கிருபாகடாக்ஷத்தில் லட்சுமியையும், சித்தத்தில் சாந்தத்தையும், தேகத்திற்காந்தியையும் எப்போதும் உடைத்தானவர்களும், பாக்கியசாலிகளாகிய தங்களைத் தெரிசிப்பவரின் பாவங்களைப் போக்குகிறவர்களும், சத்திய சங்கற்பவான்களும், அக்கினியைப்போல் ஜொலிக்கின்றவர்களும், தர்மமாகிற பர்வதத்தின் சிகரத்தை யடைந்தவர்களும், பாவமாகிய இருட்கூட்டங்கட்கு சூரியர்களும் நிர்பீஜ யோகானுஷ்டானஞ்செய்வதினால் நிர்மல ஞானத்தை யளிப்பவர்களும், எமது

சுபரூபத்தை இடைவிடாது மனதில் நோக்கிக்கொண்டு அளவி றந்த ஆனந்தத்தை அநுபவிப்பவர்களும், நிர்மலமான வாக்கி னால் உச்சரிக்கும் அக்ஷரங்களால் காரணமின்றி மனிதர்களின் பாவங்களை சமூலநாசஞ் செய்பவர்களும், வித்தைகளாகிற யுவதி கட்கு நாயகர்களும், சாஸ்திரங்களாகிற சமுத்திரங்கட்குச் சந்தி ரர்களும், ஆகமங்களாகிற பூந்தோட்டங்கட்குக் குயில்களும், அதிதி பூஜைக்கு யோக்கியர்களும், ஷட்கருமங்களை நியமத்துடன் செய் பவர்களும் சத்தியம், ஆசாரம், சுத்தி இவைகளையே உருவமாகக் கொண்டவர்களுமான திருஸஹஸ்ர முனீஸ்வரர்களுள் நாமும் ஒரு வராகயிருந்து அவர்களோடுகலந்து வசித்துச் சந்தோஷமடைகின் றோம், அவர்கள்தான் எமது வைபவத்தை அறிவார்கள். அவர்க ளுடைய உத்தம வைபவத்தைச் சிறிது நாமறியமாட்டோம், அவர் களது கிருபாதிருஷ்டியின் வீக்ஷணமானது வெகுகாலஞ் செய்யுந் தபோபலனைக் கொடுக்கின்றது அவர்களை நினைத்தமாத்திரத்திற் பாவங்களெல்லாம் விலகிவிடுகின்றன. அவர்கள் தங்கள் சக்திவிசே டத்தால்சிதம்பர க்ஷேத்திரத்தை இரக்ஷிக்கிறார்கள். வாக்குக்குளட் டாத சிதம்பர மகிமையை அவர்கள்தான் அறிவார்கள். மாயார கிதர்களாயும், பெருமை பொருந்திய எமது அநுக்கிரகத்திற்கு உரியவர்களாயும் விளங்கும் அவர்களே எமதுசக்தியைஉள்ளங்கை நெல்லிக்சனிபோலே அறிபவர்கள். சமல சம்பத்துகட்குங் காரண மாகிய விபூதியின் மகாத்மியத்தையும், தாரணவிதியையும், எமது பூஜையின் நியமங்களையும், அதின் விபவத்தையும், நிர்மலமான சித் தத்தால் அறிகிறார்கள் ஒப்பில்லாத மகிமைபொருந்திய அம்மூல லிங்கத்தில் நாம்வசிக்கும்ரகசியத்தை அவர்கள்தான் அறிவார்கள், சகல சம்பத்துகளுக்குக் காரணமாயுங் குறைவற்றதாயு மிருக்கிற க்ஷமைக்குத் தங்கள் தங்கள் சித்தங்களை வசிக்குமிடமாகச் செய் துக்கொண்டு சுகிக்கின்றார்கள். விபூதியால் அலங்கரிக்கப் பட்ட அவர்களின் திருமேனி தெரிசனமே யாவர்க்குஞ் சிரமமன்றிக்கி டைத்ததவமாகும். அவர்களின் தெரிசனமே கால்வருந்திச்செய் யாத தீர்த்தாடனம் அவர்களின் தெரிசனமே சகலசிவக்ஷேத்திர வாசம். இவை உண்மையேயாம். இந்தப்படி எவர்கள் அவர்களை எண்ணுகிறார்களோ அவர்கள் எனக்குப் பிரியத்தை உண்டுபண்ணு கிறார்கள். அப்புண்ணிய முனிவர்களின் சந்தோஷத்திற்காகவே கனகசபையில் ஆனந்தநடனஞ்செய்து வருகின்றோம். விளையாட்டி லும் வேதாகமங்களின் பழக்கமுள்ளவர்களும் என்னையேகதியாக அடைந்தவர்களுமான அவர்களுக்குச்சமமாகச் சொல்லுதற்கு எம்

மைத்தவிர இம்மூவுலகங்களிலும் மற்றெவ்வுலகங்களிலும் ஒருவருமில்லை வெட்கத்தினலாவாது பயத்தினலாவது காமத்தாலாவது மோகத்தாலாவது கோபத்தாலாவது எதிர்ச்சையாலாவது எவன் எம்முடைய தாண்டவ தரிசனஞ் செய்கிறனே அவன்எமது தெரிசனமாத்திரத்தில் முத்தியை யடைகிறன் பாவனபக்தியுடன் தெரிசிப்பவரின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ எமது ஆனந்தத்தாண்டவத்தை அந்த க்ஷேத்திரவாசிகளான திருஸஹஸ்ர முனீசுவரர்கள்தான் முழுதும் அறிவார்கள் என்று ஐயுருவாய் அன்பு பூண்டொழுகும் அற்புத நந்திதேவருக்குச் சந்திரசூடான பரமசிவம் திருவாய்மலர்ந்தருளியபடி நைமிசாரண்ணிய வாசிகளான தபோதனர்களே! உங்களுக்குநான் அனுக்கிரகித்தேனென்று சூதமகாரிஷி அருளிச்செய்தனர்.

ஐந்தாவது அத்தியாயம்-முற்றிற்று.

---

## ஆறளது அத்தியாயம்.

## மாத்தியந்தின மகரிஷி உற்பத்தியும், அவர் சிதம்பரக்ஷேத்திரம் அடைந்தது முரைத்தது.

இவ்வாறுகூறிய சூதமகரிஷியை நோக்கி நைமிசாரண்ணியவாசிகளான ரிஷிசிரேஷ்டர்கள் கேட்கத்தொடங்கினர்கள். சிவபக்தசிரோமணியாகிய மாத்தியந்தினர் முற்காலத்தில்சுவசிதமாகத் தபசுசெய்தனர் அடைதற்கரிய வியாக்கிரபாதத்தை எதற்காக எப்படியடைந்தனர். பரமேசுவரரால் கிடைத்தற்கரிய ஆனந்தத்தாண்டவ தரிசனம் எவ்வாருகக் கிடைக்கப்பெற்றனர். அந்த அற்புத சரித்திரங்களை விஸ்தாரமாகக் கேட்க அபேக்ஷிக்கின்றேன் தயைகூர்ந்து உரைத்தருளல்வேண்டும் என்றுபிரார்த்தித்ததபோதனர்களைச்சூதமகரிஷி கண்குளிரப்பார்த்து மனங்குளிரச்சொல்லத்தொடங்கினர். தவத்திலுயர்ந்த ரிஷிகளுக்குள் முந்தினவராயும், சதாபிரமநிஷ்டையும், தர்மம், தயை, தபசு, சாந்தி, சத்தியம் இவைகட்கு உற்பத்திஸ்தானமாயும், தன்னுடைய தபோவிசேடத்தாற்பெரிதாகியபூமண்டலத்தைப் பரிசுத்தஞ்செய்பவராய் மத்தியந்தினரென்று மகிமையமைந்த திருநாமமுடையவராயும் மகரிஷி ஒருவரிருந்தனர். அம்மகரிஷியினிடத்தில்உலகத்திலுள்ள ஜீவகோடிகளின்துக்கங்களைநீக்கிச் சிவஞானச் செல்வமுடையவர்க ளாக்கும்படி அக்கினியினிடத்தில் அக்கினிஜனித்ததுபோல் தேஜோவானுன ஒருபுத்திரன்பிறந்தான்

தாம்செய்ததவமெல்லாஞ்சேர்ந்திலொருருவெடுத்ததைப்போன்றஅக் குழந்தையை அன்புடன்நோக்கி அப்புத்திரசிகாமணிக்கு ஜாதகர்ம ஞ்செய்து மாத்தியந்தினரென்று திருப்பெயர் தரித்துக் குலத்திற் குரிய அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம் முதலிய சுபகர் மங்களைச் சிறந்துந் தவறாது அந்தந்தக் காலங்களிற் செய்து முடித் தனர். பின்பு அங்கபதக்கிரமங்களோடு கூடிய வேதங்கள் முத லிய பதினான்கு வித்தைகளையும் எளிதிற் கற்பித்தருளினர். ஜனன மரண துக்கமாகிய பாசத்தை யறுத்தற்குக் காரணமாயும்சைவதே ஜோமயமாயும் பெருமைபொருந்தி விளங்கும். ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை எப்போதுஞ் செபம்பண்ணும்படி யதாவிதியா யுபதேசித்து இனி எந்தவிடத்தில் எந்தமூர்த்தியை உத்தேசித்துத்தவஞ்செய்து ஆத்ம லாபத்தை யடைதற்கு உனக்கு எண்ணமோ, அதை யுரைப்பாயா கில் அதற்குவேண்டிய மார்க்கங்களைச் சுலபமாகச் சொல்லுகின் றேனென்றனர். இவ்வாறு கூறிய அருமைத் தந்தையை அன்புடன் வந்தித்து அவர் கருணையைச் சிந்தித்து அஞ்சலி பந்தனஞ்செய்து மிகுந்த வணக்கத்துடன் கேட்கத் தொடங்கினர். என்னை ஜனிப்பி த்து எல்லா வித்தைகளினையு முணர்த்திய உண்மைக் குருவே! எத் தவம் உலகத்தோர்க்குச் செய்பற்குரியதும், சர்வசித்திகளையுங் கொடுத்தற்குரியதும், மிகப்பெரியதும் சம்சாரமாகிய சமுத்திரத் தினின்றுங் கரையேற்றுவதும், துக்கத்தினின்றும் நீக்கி இடை விடாத ஆனந்தத்தை யளிப்பதும், அம்பிகாபதியாகிய பரமசிவத் தை பூஜிப்பதுமாய் இருக்கின்றதோ, அந்த நிர்மலதவத்தை விஸ் தாரமாக எனக்குஉரைத்தருளல்வேண்டும்என்று பிரார்த்தித்தனர் பிரார்த்தித்த புத்திரமணியின் அற்புதத் திருவார்த்தையைக்கேட்ட பிதாவாகிய மத்தியந்தினர் சொல்லுகின்றார். புத்தியிலுயர்ந்த புதல் வனே! பனிநிறைந்த ஹேமந்தகாலத்திலும் குளிர்மிகுந்தசிசிரகால த்திலும், மழை மலிந்தவருஷகாலத்திலும் மன்மதனது கர்வத்திற்கு இடமாகிய வசந்தகாலத்திலும், கொடிய வெப்பமிகுந்த கிரீஷ்ம காலத்திலும், சூரியகிரஹணமுதலியவைகள்மிகுதியாயுள்ள இராத்தி ரிகளிலும், ஆழ்ந்தசலமத்தியிலுமுயர்ந்தபர்வதசிகரங்களிலும், மேன் மையான சிவக்ஷேத்திரங்களிலும், சண்ணுழையாதடர்ந்த காடுகளி லும், குளிர்மிகுந்த நதிக்கரைகளிலும், தளிர்நிறைந்த மரத்தினிழல் களிலும், மலர்ந்த புஷ்பங்களாலும், குவிந்த அரும்புகளாலும்நிறை ந்தகிளைகள்பொருந்தியமரங்கள்நெருங்கியசோலைகளிலும், தவத்திற் குயோக்கியமாயும் மனதிற்குச் சிலாக்கியமாயுமிருக்கின்ற அன்னிய

தேசங்களிலும் சிச்சல சித்தர்களாய்த் தவஞ்செய்துக்கொண்டு கிழங்கு, வேர், பழங்கள், மரத்திற் பழுத்துதிர்ந்த சாக்குகள் ஜலம்காற்று இவைகளை ஜீவதாரணார்த்தம் ஆகாரஞ்செய்துவியவகாரம் விடுத்து பிர்மதியான பரனுயிருக்கின்ற தபோதனர்கட்குப் பிரமலோக பிராப்தமான பதவிமட்டுங் கிடைக்குமேயன்றி புனராவர்த்தி ஜன்மமற்றதான சிவசாயுச்சியங் கிடைக்கமாட்டாது. சிவசாயுச்சியத்தை இச்சிப்பையேயாகில் உமாகாந்தரான பரமசிவத்தின் சரணாவிந்தத்தைப் பூஜித்தல்வேண்டும். அப்பூஜையைப் பக்தியுடன்செய்வையேயாகில் அதுபாசபந்தங்களை நீக்கி அழிவற்றதாய் ஆனந்தமாய்விளங்கும் பரமுத்தியைக்கொடுக்கும். இதரமான தபசுகளிலொன்றும்நீ செய்யவேண்டுவதில்லையென்றுகூறி தந்தையின் அமுதந்ததும்பும் அரியவசனத்தைச் சிவபூசைசெய்வதற்கேயமைந்ததிருமேனியையும் பரமசிவத்தின் திவ்விய சரித்திரங்களைக்கேட்பதிற்சிரத்தையும் பாவிப்பதில்இனிமையும்பொருந்திவிளங்கும் பெரியமதியினையுடைய மைந்தனாகியமாத்தியந்தினர் அகமலர்ந்துகேட்டுமுகமலர்ந்து விண்ணப்பஞ்செய்கின்றனர். சந்திரனைச்சடையிற்புனைந்தும் அபாரக்கருணையைத் தமக்குரிய வடிவமாயமைந்தும் விளங்குகின்றபரமேசுவரன் இந்தவுலகத்தினுள் எந்தக்ஷேத்திரத்திற் பூசித்தால் எளிதில் பிரத்தியக்ஷமாகுவரோ அந்தவுத்தமக்ஷேத்திரத்தையெனக்குஉரைத்தருளல்வேண்டும். அந்த க்ஷேத்திரத்தில் எனதுஜன்மநிவர்த்தியின் பொருட்டுத் தேவரீர் அனுக்கிரகித்தபடி தவஞ்செய்யச்செல்லுகிறேனென்னலும், பிதாவாகிய மத்தியந்தனர் தனது அருமைப்புதல்வனைப்பார்த்துச் சந்தோஷித்துச் சொல்லுகின்றனர் சிறிய வயதிலேயே பெரிய தவத்தில் மதியைப்பதித்த மைந்தனே! எல்லாப் பிரபஞ்சங்களுந் தயாநிதியான சிவபெருமானுடையசந்நிதியாகும். அவரைவிட்டுவிலகிய ஜகத்தானது ஓரிடத்துமில்லை. அவரைத்தவிர்த்து இவ்வுலகத்தை வேறாக நினைப்பவர்கள் சித்தபக்குமில்லாதவர்களாய் அனேகஜன்மங்களிற்பிறந்து அஞ்ஞானிகளாய்ப்போய் விடுகிறார்கள். அவர்களே விருதாவானஜன்மத்தை அடைந்தவர்கள். கீடத்துக்கு ஒப்பானவர்கள். பாபவிருத்திற்குக் காரணமானவர்கள். எங்கும் நிறைந்த பரமசிவம் எங்கும் நிறைந்திருப்பினும் அவ்விதமாய்ப் பாவித்த லருமையாதல் கொண்டு தமது கருணைப்பெருக்கால் சரீரமுழுதும் வியாபித்திருக்கின்ற ஆத்மாவிற்கு இருப்பிடமொன் றிருத்தல்போல இவ்வுலகின்கண் ஓர் அற்புத க்ஷேத்திரத்தில் இடைவிடாது சான்னியத்தியமாய் விளங்கிக்கொண்டிருக்கி-

ன்றனர். அந்தத்தலமானது தேவர் முனிவர் மனிதர் முதலிய வர் எல்லோராலும் பூசித்துத் துதிக்கப் பட்டிருக்கின்றது. அம் மகிமை தங்கிய தலத்தை யுனக்கு உணர்த்துகிறோம் நவகண்டமா ய்ப் பகுக்கப்பட்டும், குலபர்வதங்களாற் சூழ்ந்த லோகாதாரமான மகாமேருவாற் றரிக்கப்பட்டும், நவரத்தினங்கள் நிறைந்த சமுத் திரங்களாற் சூழப்பட்டும், புண்ணியமாகிய விதை முளைப்பதற்கு ரிய இடமாய் ஏற்பட்டு மிருக்கின்ற இப்பூமியின் எல்லை கைலாச பதியே நூறாண்டுரைக்கினுஞ்சிறிதும் முடிவுபெறமாட்டாது. அவ் வளவு விஸ்தார விசேடம் பொருந்திய புண்ணிய பூமியில் வசிக்கும் மகாத்மாக்களுக்கு முத்தியை அளிக்கும்வண்ணம் அளவிறந்த வடி வமும் நாமமுந்தரித்து அளவிறந்தபுண்ணிய க்ஷேத்திரங்களில் இரு பாசக்தியுடன் பரமேசுவரர் எண்ணிறந்தவிளையாடல்களைச் செய்தரு ளினர். அத்தகையதலங்கள் எலற்றுளும் உயர்ந்ததாய் வேதாகமங் களில் உத்தமமென்று கூறியதாய் தவத்தைவிருத்தி செய்வதாய்தில் லைவனமென்று பிரசித்திபெற்றதாயுள்ள ஒரு திவ்வியதலமிருக்கின் றது. அதனடுவே ஆலடியின் பாதாளலோகத்தின்கீழ் தேஜோமய மான சிவபூமியினின்றுந் தோன்றி மூலஸ்தானேசுவரரென்று பேர் புனைந்து விளங்கும் சுவயம்புலிங்கமே உனது அன்பு மிகுந்த பூஜை யைக்கொண்டருள்பவர் என்று வாசகதீக்ஷை செய்தருளினர்.

ஆறாவது அத்தியாயம்-முற்றிற்று.

## க்ஷேத்திரமகிமைக்குத் திருஷ்டாந்தமாக வால்கலியின் கதையை யுரைத்தது.

இவ்வாறு அனுக்கிரகம்பெற்றுப் பக்திபெருகிய மனத்துடன் நிற்கும் புத்திரனைப் பிதாவாகிய மத்தியந்தின மகரிஷி பார்த்து அந்த க்ஷேத்திரமகிமையால் தேவேந்திரன் அசுரர்களை ஜெயித்துத் துன்பமேங்கி இன்பமடைந்த திவ்விய சரித்திரத்தை யுரைக்கின் றேன் சிரத்தையுடன் கேட்பாயாகவென்று பின்னுஞ் சொல்லத் தொடங்கினர்.

தேவகந்தர்வ ராக்ஷதர்களாலுஞ் செயித்தற்கரிய உரத்தையுஞ் சிவன் கொடுத்தவரத்தையும் வால்கலியென்று பிரசித்தமான பெய ரையும் பெற்றுவிளங்கியஅசுரனொருவன்இருந்தனன். அவனுடைய பராக்கிரம விசேடத்தாற் பூமண்டலமுழுமையும் செயித்துஏகச்சக் கிராதிபதியாய் அரசுசெலுத்தி வருகிறபோது தேவலோகத்தையும்

செயித்தற்கு எண்ணங்கொண்டு தன்னுடைய நால்வகைசைன்னியங்களுடன்புறப்பட்டுச் சுவர்கலோகஞ்சென்று இந்திரனை யுத்தத்திற்கழைக்க அவனுந்தனது அமரசைன்னியங்களுடன்வந்து அசுரேசனை எதிர்த்தனன். இருவரும் அஸ்திரசஸ்திரங்களால் அதிகஆக்ரோஷத்துடன் இரவுபகல்தோன்றாமல் பதினாயிரம்வருடம் யுத்தஞ்செய்தார்கள். அந்தயுத்தத்திலுண்டான ரத்தப்பிரவாகத்தால் பூமண்டலமுழுமையுஞ் சேறாகியது. இறந்த சைன்னியங்களுடைய அஸ்திகளெல்லாம்மேருமந்தரமுதலிய பர்வதங்கள்போற்குவிந்துவிட்டன. சைன்னியங்களையிழந்தும் அசுரேசுரனும் அமரேசனுந்தங்கள்சவுரியங்களை இழக்காமல் பின்னும் ஓராயிரம் வருடம் யுத்தஞ்செய்து கடைசியில் வால்கலி பராக்கிரமத்திற்கு இந்திரன் எதிர்நிற்கச்சக்தியற்றவனாய்அபஜயத்தையும்எஞ்சியசைன்னியத்தையும்கைக்கொண்டு இனிலோகநாதனான லட்சுமிகாந்தனைத்தவிர வேறுரக்ஷகர் ஒருவருமில்லையென்று பயந்தமனத்துடன்கூடிய இந்திரன்மிகுந்தவேகத்தோடு சுவேதத்துவீபத்தை யடைந்து பாற்கடல் மத்தியில் ஆதிசேஷதம்பத்தில் பூமகளாகிய மின்னல்விளங்க யோகநித்திரைசெய்யுங் கருமுகில்வண்ணனைப் பெருமுகில்வாகனன் கண்டு நமஸ்கரித்து ஆயிரங்கண்கள்பெற்ற பலனைப்பெற்றேமென்று கண்குளிரப்பார்த்து வேதமந்திரங்களால் நாவாரஸ்தோத்திரஞ்செய்து மிகுந்த சந்தோஷத்துடன் கைகட்டிநிற்குஞ் சதமகனுடைய தீனவசனத்தைக் கேட்டபரவாசுதேவன் திடீரெனயோகநித்திரையையும்சேஷதல்பத்தையும் விட்டெழுந்து கருணைக்கண்மலர்ந்து பிரியத்துடன்நோக்கி ஹே இந்திராணி மணாளா! நீயும் உன்னைச்சூழ்ந்த தேவர்களுஞ்சுகமா? நீங்கள்உங்கள் அதிகாரங்களைக்கிரமமாகச்செலுத்திவருகின்றீர்களா என்று குசலப்பிரசினஞ்செய்து நீஇப்போது உனது சுவர்க்கலோகத்தைவிடுத்துவாடியமுகமுந்தேடியமனமுமுடையவனாய்உன் பரிவாரங்களுடன் இவ்விடம் வந்ததற்குக்காரணம் என்னையென்று நாரணன் கேட்டலும், அமிர்தவருஷம் பொழிந்ததுபோன்ற அவரருமைத்திருவார்த்தையை அமரேசன்கேட்டுசெவியாரப்பருகிநாவாரச்சொல்லுகின்றனன். தேவர்கள் நடுங்கும்படியான பலத்தையும் பெரியவரத்தையுங் கரியகண்டனாகிப் பரமசிவத்தின் கிருபையினாற் பெற்ற வால்கலி யென்னும் அசுரனால் என்வலியை இழந்துஅபஜயமடைந்தனன். அவனுடைய துவஜம் தேவரீரது கிருபைக்குரிய எனது லோகத்திலாடுகின்றது, அதைநினைத்த என்மனம்வாடுகின்றது, ஐயத்தை வேண்டி மூவுலகளந்த சாளத்தைத் தேடுகின்றது,

அசுரபயத்தைநீக்கி எனையாண்டருளல்வேண்டும். துஷ்டனான மது
வைக்கொன்றமதுசூதனா! இரணியாக்ஷஇரணியகசிபுமுதலிய அசுரர்
களை அலக்ஷியமாயழித்தஅரிவாசுதேவாவென்று பிரார்த்தித்தனன்
பிரார்த்தித்தஇந்திரனுடைய தீனவசனத்தைதீனதயாளுவாகியகண்
ணன்கேட்டுப் புன்னகைசெய்து சொல்லுகின்றனர். நீ உரைத்த
வால்கலியென்னும் அசுரன் பரமசிவத்தை நோக்கி நெடுநாள்தவம்
புரிந்துபெறுதற்கரியவரத்தையும் பலத்தையும்பெற்று ஐப்த்திற்குரி
யனாயிருக்கின்றான். அவனைச் சமயம்பார்தது நாம் ஸம்ஹரிக்கின்
றோம. நீயும்பூலோகத்திற்சென்று உமாகாந்தரான பரமேசுவரனைக்
குறித்துச்சீக்கிரத்தில் சித்தியைத் தருவதானபுண்ணிய க்ஷேத்திரத்
தில் உறுதியான தவத்தைச் செய்தாலன்றி அசுரேசனுடைய பலங்
குறைந்து வதமாகமாட்டான் ஆதலால் விரைவில்தவஞ்செய்தற்குச்
செல்லுகவென்றதும், இந்திரன சொல்லுகின்றனன். சுவாமி! உல
கின்கண்ணுள்ள சிவக்ஷேத்திரங்களில் எதுஉயர்ந்தது, எதில்தவஞ்
செய்தால் சீக்கிரத்தில் சிததியைத்தரும், அதை அனுக்கிரகித்தல்
வேண்டுமென்று பிரார்த்தித்தலும், ஹேஇந்திரா! சர்வசித்திகளுக்
குக்காரணமாய் ஆரணங்களுரைத்ததுவாய் க்ஷேத்திரம், தீர்த்தம்,
மூர்த்தி மூன்றினாலுஞ்சிறந்து ஓங்கியதாய், தில்லவனமென்றுபெய
ரைத் தாங்கியதாய்உள்ள ஒருதிவ்வியக்ஷேத்திரமிருக்கின்றது. அந்
தக்ஷேத்திரத்தில் உலகத்தின் நன்மைக்காகவும் பார்வதிபின்நயனங்
கண்டுகளித்து மகோற்சவத்தை அடைவதற்காகவும் ஸர்வாத்மா
வானபரமேசுவரர் ஆனந்த்த்தாண்டவஞ் செய்துவருகின்றனர். அந்
தக்ஷேத்திரத்தில்நீ விரைவிற்சென்று அசுரவதார்த்தம் அருமையா
ன தவத்தை உறுதியாகச் செய்தல்வேண்டுமென்று ஜனார்த்தனனு
ரைத்தனர். ஜனார்த்தரின் இனந்தங்கிய இனியவசனத்தைக்கேட்ட
இந்திரன் சொல்லுகின்றனன். என்னை ரக்ஷிக்குங்கருணைநிறைந்தகே
சவத் தெய்வமே! தேவரீர்கூறியவண்ணந் தில்லவனஞ்சென்று தவ
ஞ்செய்தற்குஎன்மனஞ்செல்லினுங்காலெழவில்லையே அசுரனாலடை
ந்த பீதிசிறிதும் என்னைவிட்டு நீங்காதிருக்க நானெவ்விதமாய்த்தவ
ஞ்செய்யப்போகின்றேன். தேவரீரைவிட்டு ஓரிடத்திலும்போகேன்
ஜகத்ரக்ஷகரான தேவரீர் தயைகூர்ந்து எனக்குத்துணையாக என்னு
டன்கூடத் தில்வவனம் வந்து அசுரனால் எனக்கு யாதொரு துன்ப
முமில்லாமல் ரக்ஷித்தருளுவீரேல் தவஞ்செய்தற்கு என்மனஞ் சலி
யாதிருக்கும், யானும் சிவானுக்கிரகத்தால் சத்துருவை ஜெயித்துச்
சுகிப்பேனென்று வேண்டலும், ஹேசதமகா! நாம்கூறியபடி தவஞ்
செய்தற்குச் சீக்கிரம் நீ செல்லல்வேண்டும். நாமும் வந்திருந்து

ரக்ஷிக்கின்றோம் என்று அச்சுதன் அருளிச்செய்ததை அமரேசன் ஆனந்தத்துடன் கேட்டு விடைபெற்றுக்கொண்டு தன்னைச் சூழ்ந்த தேவர்களுடன் தில்லவனம்வந்து தவத்திற்காக ஆசிரமம் அமைத்துக்கொண்டுபரமசிவத்தைநோக்கிபருந்தவம்புரியத்தொடங்கினன். தேவர்களு மவ்வாறே தனித்தனி ஆசிரமம் இயற்றிக்கொண்டுதவஞ் செய்தார்கள். சரணமடைந்தோரை ரக்ஷிக்கும் அவ்வியாஜகருணாமூர்த்தியாகிய விஷ்ணுவும் ஆனந்தத் தாண்டவதெரிசனம் பார்ப்பதற்கு இயற்கையாகவே அபேக்ஷயிருப்பினும் இந்திரனுக்குச் சொல்லியபடிபோய்க் காத்தலேவியாஜமாக வைத்துக்கொண்டு உடனே தாம்வாசஞ்செய்யுந் திருப்பாற்கடலைத் தமது பாயலாகிய ஆதிசேஷனுடன் தில்லவனஞ் செல்லும்படி ஆக்ஞாபித்து லோகமாதாவான லக்ஷ்மீசமேதராய்த் தாமும் தில்லவனம்வந்து தேவர்கள் துதிக்க மகாதேவரிடம் ஆனந்தத்தாண்டவ தெரிசனத்தை யோக நித்திரை செய்துக்கொண்டு மிகுந்த களிப்புடன் வசித்தனர்.

இவ்வாறு நெடுநாட் சென்றதின்பின் தபசு செய்துக்கொண்டிருக்கும் இந்திரனுடைய க்ஷேமத்தைக் கருதினவரும் சிதம்பர மகிமையைத் தானே தவஞ்செய்து பரமேசுவரரால் வாசஸ்பதியென்று பேர்பெற்றிருந்தவரும் தாம் ஆனந்தத்தாண்டவ போதத்திலிருப்பதினால் விஷ்ணுவைக்கொண்டே தம்மைத் தெரிசிப்போர்கட்குச் சர்வசத்திகளையுங் கொடுக்கும்படி பரமசிவம் அனுக்கிரகித்திருக்கு முண்மையை உணர்ந்தவருமான தேவகுரு இந்திரனுக்கருகில் வந்து, ஓ ஸஹஸ்ராக்ஷனே! நீ இந்தப் புண்ணியக்ஷேத்திரத்தில் தவஞ்செய்த பிரபாவத்தால் அசுரர்கள் பலங்குறைந்துவிட்டார்கள். அவர்கள் வதமாவதற்கு சீக்கிரசித்திகரமாகியவொருவிரதத்தை அநுஷ்டித்தல் வேண்டும். அந்த விரதம்உத்தமமானது. அசுர வைரியாகிய விஷ்ணுவைக் குறித்துச் செய்யவேண்டுவது. அசூன்ய சயனமென்று பெயருள்ளது அதை பத்தியிடன் இந்தக் கிருஷ்ண பக்ஷ துவிதியையிற் றொடங்கி விஷ்ணுவை விக்கிரகரூபமாய்ப்பிரதிஷ்டை செய்து அபிஷேகித்து மாதவாவென மாதவி முதலியபுஷ்பங்களால்அர்ச்சித்து இனிமையான நைவேதனங்களும்வாசனையுள்ள தூபதீபங்களும்கொடுத்து ஸ்தோத்திரஞ்செய்து நான்குமாதம்பூஜித்துக் கார்த்திகை மாதத்தில் உத்தான ஏகாதசி தினத்தில்ஸ்ரீஹரியின் பூஜையை முடித்து மறுதினத்தில் பிரமரிஷிகளுக்குதிருப்தியான போசனஞ்செய்வித்துவிரதத்தைசமாப்திசெய்குவையேல்,பகைவனைமுடித்து ஆகண்டலனாக கிரீடந்தரித்து வாழ்வாயென்றுரைத்த

ருளினர். இவ்வாறு குருவுரைத்த வாக்கியமே சிவனளித்த பாக்கிய மென்று நினைத்து யோக்கியமான மனதுடன் கூடிய இந்திரன்சிலாக்கியமான விரதத்தை யதாவிதியாகத் தொடங்கிச் சிரத்தையுடன் பூர்த்திசெய்து பினபு அசுரேசனை எதிர்த்து யுத்தஞ்செய்துசிதம்பரக்ஷேத்திரத்திற் செய்த தவத்தினருமையாலும், விரதத்தின் பெருமையாலும், அசுரேசனை ஜயித்து மிகுந்த களிப்புடன் சுவர்க்கலோகஞ்சென்று சுகித்திருந்தனன். கேட்டனையோ! அகம்விடுத்துத்தவந்தொடுத்துச்செல்லும் மதியையடுத்த மைந்தனே! மிகுந்தபாவியான ஒருநீசன் அந்தக்ஷேத்திரத்தில் வசித்து இருந்து மோக்ஷமடைந்த திவ்விய சரித்திரத்தையுஞ் சொல்லுகின்றேன் கேளென்றுசொல்லத்தொடங்கினர்.

ஏழாவது-அத்தியாயம்-முற்றிற்று.

---

எட்டாவது அத்தியாயம்.

## புல்கஸன்கதை யுரைத்தது.

நெடுநாளைக்கு முன்னர் புல்கஸன் என்று பேருள்ள ஒரு நீசனிருந்தனன். அவன் பிராணிகளிடத்தில் தயவில்லாதவனாய் கததி முதலிய ஆயுதங்களால பிராமணர்களை வதைத்தும், வழிப்போக்கர்களைச் சிதைத்தும், அவர்கள்பொருளைப்பறித்தும், வனஞ்சென்றவழிசஞ்சரித்தும், பாவிகளும் அஞ்சும்படி துன்மார்க்கங்களைச் செய்துவருகையில் அவனிடத்திற் பொருளபேக்ஷைக்காகச் சிநேகஞ்செய்கிறவனாய், ஜாதியிலுயர்ந்தும் மற்றைய ஒழுக்கங்களிற் சமதையானவனாயுள்ள ஒருபிராமணன் அவனது தொழிலுக்கு அனுகூலியாய்ச்சென்றும், அதிற்கிடைத்த தனங்களில் பங்குவைத்துவாங்கியுங் காலங்கழித்து வந்தனன். வருநாளையில் வேதியனுக்கு வேண்டியமட்டுந் திரவியம் நிறம்பி விட்டமையால் மித்திரனை புல்கஸனிடத்தில் இரக்கம் ஜனித்துச் சொல்லுகின்றனன். எனதுஅன்புள்ள புலகஸனே! நீ இத்தனைநாளாய் ஜீவகாருண்ணியமில்லாததொழில்செய்து பாபரூபமான தனத்தைத்தேடி இக்கனத்தவுடலை வளர்த்ததினுல் என்னசுகத்தைக் கண்டாய்! பெரியோர்கள் வெறுக்கும்படியான கொலை முதலிய எண்ணிறந்த பாவங்களை நெடுநாட் புரிந்தும், ஓர் நிமிஷநேரமேனும் இரக்கமின்றி இருக்கின்றனையே என்றுரைத்த இதவசனத்தைக் கேட்டவுடன் பூர்வபுண்ணியவிசேடத்தால்நல்லறிவுசிறிது ஜனித்து, ஆ இதுவரையில் நமதுயிருக்காகப் பல உயிர்களை வதைத்துஇவ்வுயிரை வளர்த்ததன்றி என்னபலனைக்கண்டோம்

என்று தனக்குத்தானே நினைத்துப் பயந்த மனதுடன் கூடியபுல்கஸன் நயந்துரைத்த மறையவனைப் பார்த்துச் சொல்லுகின்றனன். என்னை நற்கதியிற்சேர்க்க நண்பராகவந்த அந்தணரே! நான் ஒருவராலும் செய்யற்கரிய பெரிய பாவங்கள் எவ்வளவோ அவ்வளவுஞ் செய்திருக்கின்றேன் அப்பாவங்களைப்போக்குதற்குரியவழிகளொன்றும்நிர்மூடனான எனக்குத்தெரியவில்லை இதற்குஎன்னசெய்குவேன் குலத்திலுயர்ந்த தாமே ஒருபாயஞ்சொல்லி !என்பாவங்களை ஒழித்துக் காத்தருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தனன். பிரார்த்தித்த புல்கஸனுடைய வசனத்தைக்கேட்ட மறையவன் சொல்லுகின்றனன் எபுல்கஸா! நீயுரைத்த வார்த்தை மிகுந்தநன்மையைக்கொடுப்பதாய்உயர்ந்த பதவியிற்சேர்த்தற்குரித்தாயிருக்கின்றது. உன்பாவங்களனைத்தையும் போக்கி மோக்ஷசுகத்தை தரத்தகுந்த உபாயமான மார்க்கம் ஒன்றிருக்கின்றது. அது என்னையெனில் உலகின்கண்ணுள்ள சிவக்ஷேத்திரங்களுக்குள் மேலானதாய் என்றுமுள்ளதாய்தேவர் கந்தர்வசித்தவித்தியாதரர் ரிஷிகள்முதலிய பேர்களாற்பூசித்து வந்திக்கப்பட்டதாய் அம்பிகாபதியான பரமசிவம் தெரிசிப்பவர்களின் பாவங்களைநீக்கி தமதுசரணாரவிந்தத்தில் சேர்த்துக்கொள்வதற்காகவே ஆனந்தத்தாண்டவம்செய்தருளுகின்ற திவ்யவனமென்று ஓரிடமிருக்கின்றது. நீஅதிற்சென்று காலையில் ஸ்நானஞ்செய்துசிரதையுடன் தூரத்தில் நின்றுசிற்சபையைவணங்கி நீசம்பாதித்ததனமெல்லாம் சிவஞானிகளுக்கும் சம்சாரிகளாயிருக்கின்றவர்கட்கும் சிவபக்தர்களுக்கும்கொடுத்து அந்த க்ஷேத்திரத்தில் வசிப்பவர்கட்குச் சோரபயமுதலியதுகள் இல்லாமல் பாதுகாத்து ரக்ஷித்துவருவையாகில் உன்பாவமெல்லாம்நீங்கி மேலாகஓங்குவையென்றுசொல்லினன். அந்த ஆப்தவசனத்தைக்கேட்டபுல்கஸன் சந்தோஷித்தனாய் உடனே எழுந்திருந்து தான்சம்பாதித்த தனங்களைக் கைக்கொண்டுமறையவனுடன் தில்லவனஞ்சென்று தயைபுகுந்த சித்தமுடன் குணமிகுந்த சிவபக்தர்கள் யோகிகள் அத்தலத்தில்வசிக்குமேழைகண்முதலியபலருக்குந் திருப்தியுண்டாகும்படி கொடுத்தும் தூரத்தில்நின்று சிற்சபையை நினைத்து வணங்கியும் ஸ்தூலலிங்கமானகோபுரங்களை தெரிசித்தும் பஞ்சகுரோசத்திற்குவெளியில்வசித்தும் க்ஷேத்திரரக்ஷணையைக்குறைவில்லாது செய்துக்கொண்டும் பலநாளிருந்து ஊழ்வினையைமுடிய ஓர்நாளிறந்தனன். சிதம்பரக்ஷேத்திரத்தில் சரீரவியோகமான புண்ணியவிசேடத்தால் மறுஜன்மத்தில்பரமசிவத்தைப் பூசித்து அருகில் நின்று தெரிசித்துச்சுகித்தற்குரிய சுகிர்தமான பிராம்மண குலத்தில் ஜனித்த உயர்ந்ததான

பக்திஞான வைராக்கியங்களைப் பொருந்தி வாழ்ந்து அந்தரத்தில் அம்பிகாபதியின் அற்புத அருளால் அண்டர்க்கும் அரிய அழகிய சச்சிதானந்த லட்சணமான முத்தியையடைந்தனன்கூடவந்திருந்த மித்திரனான புத்தியுள்ள பிராமணனும் சிவகெங்கையில்ஸ்நானம்செய்து யதாவிதியாய்ப் பரமசிவனை நெடுங்காலம் பூசித்துச்சிற்சபேசரின் அனுக்கிரகத்தால் நற்பதவிசேர்ந்தனன். கேட்டனையோ! சிவத்தைக்குறித்த தவத்தைப்பதித்த மனத்தைம்படைத்தமைந்தனே என்று பிதாவாகிய மத்தியந்தினர் புத்திரனாகிய மாத்யந்தனருக்கு சிதம்பரக்ஷேத்திரம் சீக்கிரம் சித்தியைக் கொடுக்கத்தகுந்ததென்பதை இரண்டுகதையால்விளக்கித் தன்னருமைப்புதல்வனைக்கண்குளிரப்பார்த்து சர்வசித்திகளுக்குங்காரணமாய் மங்களகரமானஎல்லாச்சுகங்களையுங் கொடுப்பதாய் விளங்குகின்ற விபூதியை தமதுதிவ்வியஅஸ்தத்தாலெடுத்துமைந்தனிடநெற்றியில்தரித்துஆசீர்வதித்துக் கட்டியணைத்து உச்சிமோந்து என்கண்மணியே! இனி நீ தவத்திற்குச்சென்று சிவானுக்கிரகச் செல்வம் பெற்று வரக்கடவாயென்று அனுக்கிரகித்தனர். உடனே புத்திரராகிய மாத்தியந்தினர் தனது அன்புள்ளமாதாவையும் அறிவுள்ளபிதாவையும் பிரதக்ஷணம்செய்துநமஸ்கரித்தி அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பரமசிவசரணாரவிந்ததியானத்துடன் தில்லவனத்தை நோக்கித்தீவிரமாய்ப் புறப்பட்டனர். அந்த தில்லவனமானது சமுத்திரராஜன்அலைகளாகியகரங்களால் நக்ஷத்திரம்போன்ற வெண்முத்துக்களைவாரியிறைப்பதினால் பர்வதம்போற் குவிந்த முத்துக்குவியல்கள் பொருந்திய சிங்கம்-யானை-புலி-கரடி-செந்நாயிமுதலியதுஷ்ட ஜெந்துக்கள்நிறைந்தும் தே-மா-பலா-சம்பகம்-வேங்கை-பாதிரி-வில்வம்முதலியமரங்கள் வளர்ந்தோங்கியும் கார்காலமேகமானது அசைவற்று நின்றதைப்போன்ற பச்சிலைமரங்களும் பனைமரங்களும் தழைத்துவளர்ந்தும் ஆறுருதுக்களும் எப்போதும் விளையாடுதற்கமைந்த உத்தியானம்போன்றும் புண்ணியங்களாகிற கொடிகள்வளர்தற்குரியதோட்டமாய்ப்பெரிதாகிய பலவிருக்ஷங்களுக்கும் இடிபாரையுடைய ஆற்றங்கரையாயும்ஜனங்களுடையகண்களுக்கெட்டாத விஸ்தாரமுடன் நான்குபக்கங்களிலும் நதிகளாற்சூழப்பட்டும் பார்ப்பவரிட மனதிற்குங் கண்ணுக்கும் எப்போதும் ஆனந்தத்தை யுண்டுபண்ணுவதாயும் மனதினால் நினைத்தற் கரிதாயுமிருக்கின்ற வைபவர்கள் பெற்றும்விளங்குகின்றது. அவ்வழகிய தில்லவனத்தை யடைதற்கு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தையே துணையாகக்கொண்டு மாத்தியந்தினமகரிஷி வந்தனர்.

அந்த வனத்தின் நடுவே மகிமை பொருந்தியதாய் வேதத்து வனியினாற் பரிசுத்தமாய் சங்கீதவாத்திய கோஷங்கள் உள்ளதாய் நாலுபக்கங்களிலும்முனீஸ்வரர்களால் சேவிக்கப்பட்டதாய்பெருகு கின்றமதுக்களுடன் வண்டுக்கூட்டங்கள் பொருந்திய சுவர்ணதாம ரை மலர்கள் நிறைந்த தடாகத்தாற் சோபிப்பதால் அழிவில்லாத ஆனந்தத்திற்குக்காரணமாய்விளங்கும்சிதம்பரக்ஷேத்திரத்தைப்புதி தாகப்பார்த்தவுடன்நமதுஜன்மம் சாபல்யமாயிற்றென்று மிகுந்தகு தூகலமடைந்தனர். சந்தோஷித்தத்துடன்செல்லு ம்மாத்தியந்தின ர்சகலபாவங்களையும் பார்த்தவுடன்போக்குவதானசிவகங்கையைக் கண்டுதரிசித்து அதற்கு தென்கரையின்வழியாய் மெல்லநடந்துஎல் லாவுலகங்களுக்கும் மூலகாரணமாயிருக்கின்ற மூலஸ்தானத்தைக்க ண்டு அதனடுவே சந்திரசூடராய், கங்காதரராய், நீலகண்டராய், முக்கணமைந்த முகாரவிந்தராய், கோடிசூரிய சமான சரீரகாந்தி யாலும், புன்சிரிப்பாகிய சந்திரகிரணப் பிரகாசத்தாலும், வனத் தின் நான்குபக்கங்களைப் பிரகாசிக்கச்செய்பவராய் விளங்குகின்ற பரமசிவத்தைக் கண்ணால் தெரிசித்து அடங்காத ஆனந்தத்துடன் அடிக்கடி நமஸ்கரித்து கண்களில் ஆனந்தபாஷ்பம்பெருகஸ்தோத் திரம் செய்யத்தொடங்கினர்: "தேவதைகளெல்லாம் வணங்குந் தெய்வமே! உலகபாரத்தை வகிக்கும் உத்தமனே! சோமசூரியாக் கினியனென்னும் மூன்று கண்களையுடைய விருபாக்ஷனே! பெரி யோர்களெல்லாம் வணங்கும் பெரிய பரம்பொருளே! பிரபஞ்ச விருத்திக்காகப் பிரமவிஷ்ணு ருத்திரனென்னும் மூவுருவந்தரித்து முத்தொழிலை நடத்தும் முதற்பொருளே! கருணாரூபமான புண்ட ரீகப் பொய்கையையுடைய புனிதனே! என்னை யாண்டருளும் அ றிவே! என்னன்பேஎன்னமுதே என்று பற்பலவிதமாய் ஸ்துதித்து அஷ்டாங்கமாய் வந்தித்து சிரசின்மேற் கைதூக்கி அஞ்சலிபந்த னஞ்செய்துக்கொண்டு ஹே கருணாநிதியே! நாரணனும் நான்மறை யும் நாடற்கரிய தமது திருவடித்தாமரையை அறிவில்லாத அடி யேன் பூசிக்கப்படுவதில் குறைதல் அதிகரித்தல் முதலிய குற்றங்க ளிருப்பினும் அவைகளைச் சிறிதும் குறியாது குணமாகக் கொண் டருளல்வேண்டும். எனது ஆண்டவனே என்று பிரார்த்தித்து உட னே புண்டரீகப்பொய்கைக்குவந்து விதிப்படி ஸ்நானஞ்செய்து ப ஸ்மருத்திராட்சங்களைத் தரித்து நித்தியகர்மங்களை முடித்து அன் றுமலர்ந்த அழகிய சுவர்ண தாமரைமலர்கள முதலிய பலமலர் களை எடுத்து அன்புடன் மூலஸ்தானேசனை அடுத்து அவரது அரு வேதாகமங்களிற் கூறியவாறு பூஜித்துப்பிறந்த பலனைப்பெற்றேட்

வங்களேமென்று மிகுந்த சந்தோஷமடைந்தனர். பின்பு அவ்விடம் விட்டெழுந்துமேற்காகச்சிறிதுதூரஞ் சென்று புஷ்பங்களால் நிறைந்த உயர்ந்த விருட்சங்கள் சூழ்ந்த தாடகத்தின் கரையில் தவஞ்செய்வதில் திடச்சித்தமுள்ள மாத்தியந்தினர் ஓர்பர்ணசாலை அமைத்துக்கொண்டு அதனடுவேஜோதிரூபமான சிவலிங்கப்பெருமானைத் தமது ஆத்மபூஜைக்காக ஸ்தாபித்து மூலஸ்தானத்துடன் இரண்டிடமும் பூசித்து வந்தித்துப் பதியேதுணையாக திரிவிதகரணங்களும் பொருந்தியிருந்தனர்.

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ஒன்பதாவது அத்தியாயம்.

### மாத்தியந்தின முனிவருக்கு வியாக்கிரபாதரென்னும் பேர்கிடைத்ததையுங் குறித்தது.

இவ்வாறு மாத்தியந்தினமகரிஷி சிவபூசையை மிகுந்த பத்தியுடன் செய்துக்கொண்டும் சுவரூபானுசந்தானமாகிய தவத்தைச் சரீரம் இளைத்தும் மனமிளைக்காமல் உறுதியா அனுஷ்டித்தும் வருகையில் ஒருநாள்விடியற்காலமெழுந்து. தந்ததாவனஞ்செய்துவிபூதி உத்தூளனமாகிய ஸ்நானம்பண்ணி தண்டுகமண்டலம் திருப்பூக்குடை முதலியவைகளை எடுத்துக்கொண்டு எட்டுச் செடைகளினல் அலங்கரிக்கப்பட்ட ரிஷிசிரேஷ்டர் சிவபூசைக்காக மலர்களெடுக்க வனத்திற்சென்றும்வாசனையுள்ளதாய் அன்றுலர்ந்தவைகளாய்புஷ்பவிதிகளிற் கூறிய புஷ்பங்களைச் சிவபூசையிலுள்ள பிரேமையினல் விசேடமாக எடுத்தும் தன்னுடைய ஜீவதாரணநிமித்தியமாய் இனிமையுள்ள கிழங்கு, வேர், சருகு முதலியவைகளை சேகரித்தும் குசங்கள் பத்திரங்கள் சமித்துக்கள் இவைகளைக் கைக்கொண்டும் தனது ஆசிரமத்தில் பூசைக்காகப் பிரதிஷ்டை செய்திருக்குஞ் சிவபெருமானது சந்நிதியில்வந்து பூசைக்குரிய புஷ்பங்களை விதிப்படி ஆராயும்பொழுது புழுக்களால் வெட்டுண்டிருத்தல் முதலிய குற்றமிகுந்த புஷ்பங்களைக்கண்டுபயந்து வியாகூலச்சித்தராய்சொல்லுகின்றனர். புஷ்பங்களை விடிந்தபிறகு எடுப்போமெனில் மதுவை உண்பதற்குவந்துவிழுகின்ற மதுகரங்களால் தீண்டப்பட்டும் இராத்திரியில் எடுப்போமானல் மார்க்கங்கள் இருட்களால் மறைக்கப்பட்டுமிருக்கின்றன அன்றியும் விருட்சங்களிலேறிப் புஷ்பங்களை எடுப்போமென்னில் விருட்சங்களெல்லாம் பனியினல் அபிஷேகிக்கப்பட்டதாய் ஆகாயத்தைத்தொட்டதாய் ஒழுங்குற்றதாய் ஏறுதற்

குரியகிளைகளற்றதாய் இருக்கின்றனவே அவைகளைப்பாராது மரங்களிலேறும்போது எனது கைகளும் கால்களும் மரத்திற்பொருந்தாது வழுக்கிவிடுகின்றன. இவ்வாறின்றி வண்டுகளாற் புசிக்கப்பட்டதும்அரும்புகளாயுள்ளதும் முந்தினதினத்தில்மலர்ந்ததும்புழுக்களால் அரிப்புண்டதுமான புஷ்பங்கள் பரமேசுவரருடைய பூசைக்கு ஆகா என்று ஆகமங்கள் கூறுகின்றனவே இதற்கு என்ன செய்குவேன் என; வியாகூலித்துச் சிவபெருமானைச் சிந்தித்துக் குளிர்ச்சிபொருந்திய கங்கையுடன் சந்திரன் தவிழும் ஜடாதரனே! புண்ணியமிகுந்த தில்லைப்பதியோங்குஞ்சிந்தாமணியே! வாமபாகத்தில் ஆனந்தவல்லி படர்ந்துவிளங்கும் அழகனே என்று பாமசிவசந்நிதியில் ஸ்தோத்திரஞ்செய்து அஷ்டாங்கத்துடன் நமஸ்கரித்து ஹே நாதனே! அறிவில்லாத இவ்வடிமையை ரக்ஷிப்பதற்குத் திருவுளமிருக்குமாயின் எனது அன்பைக்குறியாது அனுக்கிரகித்தல்வேண்டும் பக்திலேசமில்லாது நின்பூசையைச் செய்பவனாயினும் வேறொரு சுகத்தில் ஆசைசிறிதுமில்லாதிருக்கின்றேன். அன்றியும் வேரீரைத்தவிர ரக்ஷிப்பதற்கு ஒருவருமில்லை. அரிபிரமாதி தேவர்களால் அன்புமிகுந்த பூசையைக்கொண்ட சரணாரவிந்தத்திற்கு பக்திலேசமிலாத வெளியனென செய்யும்பூசை ஏற்குமோ பக்தியீனர்களாகிய மனிதர்களுக்குத் தமதுசுயரூபதெரிசனங்கிடைக்கமாட்டாததன்று வேதாகமங்கள் கூறியதை நான் செவ்வையாக அறிந்துமிருக்கின்றேன் என்று பலவிதமாய்த் துக்கித்துகொண்டிருக்கும் மாத்தியந்தினருக்கெதிரில் அகண்டானந்த விக்கிரஹராய் பிரமவிஷ்ணு முதலிய தேவர்களால் துதிக்கப்படுகிறவராய் நந்திமுதலிய கணங்களாற் சூழப்பட்டவராய் அம்பிகாசகாயராய் விருஷபாரூடராய் விளங்கும் பரமேசுவரன் கருணைமலர்ந்த முகத்துடன் பிரசன்னராயினர். இவ்வாறு பிரசன்னமான பரமசிவசத்தைப் புண்ணியசாலியான மாத்தியந்தனமுனிவர் கண்டு மிகுந்த ஆனந்தபரவசராய்க் கண்களில் தாரைதாரையாய் இன்பநீர்பொழிய மயிர்க்கூச்செரிந்து இடைவிடாது நமஸ்கரித்து ஸ்தோத்திரிக்க நாவெழாது அஞ்சலியஸ்தராய் நிற்கையில்; பார்வதீபதியான பரமசிவம் மந்தஹாஸத்துடன் மாத்தியந்தினரைக் கருணைநிறையும் கண்ணால் கடாக்ஷித்து, ஓதபோதனே! உன்னுடைய சீலத்தை இத சிரத்தையையும் உயர்ந்ததவத்தையும் பத்தியுடன் எம்மைப்பூசிக்கும் விசேடத்தையுங்கண்டு மிகுந்த திருப்தியடைந்தோம். உனக்குப் இப்பதினான்குலோகங்களுக்குள் எந்தவஸ்துவினிடத்தில் இச்சையிருக்கின்றதோ அதைக்கேட்பாயாகில் கொடுப்பதற்குச் சித்

தமாயிருக்கின்றேனென்றருளிய ஐபனது அமிர்தம் விரும்பும் அழகிய வசனத்தைக்கேட்ட மாத்தியந்தினமுனிவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்து பரமேசுவரைப் பார்த்து தீனரைக்காக்குந் தெய்வமே! தேவரீரது பூசையின்பொருட்டு மலர்களெடுக்க பனியால் நிறைந்த மரங்களில் ஏறும்பொழுது வழுக்காதிருக்க அடியேனுடைய கைகளும் கால்களும் புலியைப்போல்வலிமையான நகப்பற்றுவுண்டாகவும், அவைகளில் தேவரீரது பூசைக்குறிய புஷ்பங்களைத்தோஷமில்லாது இருட்டிற் சென்றெடுத்தற்கிசைந்த ஒளிபொருந்திய கண்கள் பொருத்தவும் அனுக்கிறகித்தல் வேண்டும். தேவரீரது திருவருளால் வியாக்கிரரூபங் கிடைத்தபின்பு தமதுபூசையைக்குறைவிலாது பக்தியுடனென்னாளும் யான்புரிதல்வேண்டும். சபலபுத்தியுள்ள என்னாற் செய்யப்படும் பூசையிற் குறைதல் அதிகரித்தல் முதலியகுற்றங்கள் இருப்பினும் அவைகளைப் பொருத்தருளல் வேண்டும். இந்தக்ஷேத்திரம் இன்றுமுதல் என்பெயரால் வியாக்கிறபுரமென்றும் வழங்கவேண்டும் இவைகளைத்தவிர வேறொன்றினும் எனக்குஇச்சையில்லையென்று பிராத்தித்து நிற்கும் ரிஷிஷ்ரேஷ்டரைப்பார்த்து லோகநாதனான ஸர்வேசுவரன்சொல்லுகிறான். "ஓ அன்பிற்சிறந்த மாத்தியந்தினா! நீ யாவருங் கேட்டற்கரிய வரத்தை நம்பூசையில் உகந்த சிறத்தையாற் கேட்டனை! மிகுந்தசந்தோஷமாச்சுது நீ கேட்டபடியே எல்லாவரங்களையும் உனக்குத்தந்தனம்" என்று திருவாய்மலர்ந்தருளினர். உடனேமாத்தியந்தின முனிவன் கைகளிலுங் கால்களிலும் வியாக்கிரத்தைபோல் நகப்பற்றுடன் கண்களும் உண்டாகி பிளங்கின. அதைக்கண்ட மகாரிஷியானவர் ஆ புஷ்பவிருக்ஷங்களிற்பற்றியேறுதேற்கு நகமும் பார்த்தெடுப்பதற்கு விழியுங்கிடைத்ததே மிகுந்தகுதூகலசித்தராய் அடிக்கடி நமஸ்கரித்து நிற்கையில் உமாகாந்தராகிய பரமசிவம் தேவர்களுடன் திரோபவித்தருளினர். சிவபூசையிற்சிறந்த மாத்தியந்தினரை அதுமுதற்கொண்டு வியாக்கிரபாதரென்று உலகத்தோர் புகழ்ந்து கொண்டாடினார்கள். அவர்கள் பிரதிதினமும் சூரியோதயத்திற்கு முந்தியெழுந்து சிரத்தையுடன் செய்யவேண்டிய நித்திய கர்மங்களைமுடித்துவர இருட்டிற்செல்லுதற்கு நிர்ப்பயமுள்ளவராக ஆயினர். இவரது உருவத்தைக்கண்ட துஷ்டமிருகங்களெல்லாம் அதிகபீதியடைந்து விலகிஓடுகின்றன. வண்டுகள் விழித்துப்புஷ்பங்களிற் செழித்து மதுக்களைப் புசித்தற்குமுந்தி சுவர்ண காந்தியோடுகூடிய கொன்றைமலர்களையும், மாணிக்க முளையைப்போன்ற நிறத்துடன் வாசனைவீசும் பாதிரிமலர்களையும், மிகுந்த மணமுள்ளமருதாணி

சம்பக முதலிய கோட்டுப்பூக்களையும், முல்லை மல்லிகை முதலிய கொடிப்பூக்களையும், சுவர்ண நிறமுள்ள தாமரை நெய்தல் செங்கழு நீர் முதலிய நீர்ப்பூக்களையும், சுவர்ணநிறமுள்ள தாமரை நெய்தல் செங்கழுநீர் முதலிய நீர்ப்பூக்களையும், பக்தியுடன் எடுத்துப் பரமேசுவரன் சரணாரவிந்தத்தைப் பூசித்தும், சந்தோஷ சித்தராய் மனத்தை ஒடுக்கித் தவத்திலிருந்தும் அநேகநாள் வசித்தனர்! கேட்டீர்களோ நைமிசாரண்ணிய வாசிகளான தபோதனர்களேஎன்று சூத புராணிகர் பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

ஒன்பதாவது-அத்தியாயம்-முற்றிற்று.

——(*)——

பத்தாவது அத்தியாயம்.

உபமன்னியுஉற்பத்தியும், அவர்க்காகத் திருப்பாற்கடல் வருதலும் உரைத்தது.

இப்படியாக நெடுநாள் வசித்துவருகையில் வியாக்கிரபாதரின் பிதாவாகிய மாத்தியந்தினமகரிஷி தனது அருமைப்புதல்வன் இளமையவயதில் அரியயன்காணா அமலமூர்த்தியைக்கண்டு பெறுதற்கரிய அவரது அனுக்கிரக விசேடத்தால் அற்புதவரங்களைப்பெற்றனன் என்று கேழ்விப்பட்டு உடனேமிகுந்த ஆசையுடனெழுந்து விரைந்து நடந்து தில்லவனத்தையடைந்து தனதுவம்சத்தைப் பிரகாசிக்கச்செய்பவனும் உத்தம ஜன்மத்தை அடைந்தவனும்தவமே வுருவாய்க் கொண்டவனுமான தனதுபுத்திரசிகாமணியின் ஆசிரமத்திற்குச் சமீபத்திற் செல்லுகையில் பிதாவின் வரவைக்கண்டவியாக்கிரபாதர் மிகுந்த பிரீதியுடன் எதிர்சென்றழைத்து ஆசனமளித்து எழுந்தருளச்செய்து பன்முறைவந்தித்து என்னை ஆண்டருளியகுருவேயென்று நாவாரத்துதித்துக் கைகட்டி நிற்கும் சிவானுக்கிரகச் செல்வம்பெற்ற மைந்தனைக் கட்டியணைத்துஆபாதமஸ்தகபரியந்தம் கண்குளிரப்பார்த்து மிகுந்த ஆனந்தமடைந்தனர். இவ்வாறுகளிப்புடன் இருக்கும் பிதாவை வியாக்கிரபாதமகாரிஷி மெல்லஅழைத்துக்கொண்டுவந்து தங்கநிறமுள்ள தாமரைமலர்கள் நிறைந்த சிவகங்கையில் விதிப்படி ஸ்நானம்செய்வித்து முத்தியளிக்க முளைத்து விளங்கும் மூலஸ்தானேசனைப் பூசிக்கச்செய்து தனதுஆசிரமத்திற்குவந்து தன்னால் ஸ்தாபித்திருக்கும் சிவலிங்கமூர்த்தியை அர்ச்சிப்பித்து அவ்வனத்திற் கிடைத்த கந்தமூலபலாதிகளை நைவேத்யம் செய்து அவைகளை பிதாவுடன் தானும்புசித்துமிகுந்தசந்தோஷசித்தராய் நெடுநாள் வசித்துவந்தனர்.

இவ்வாறு வசித்துவருகையில் ஒருநாள் பரமசிவத்தைப்பூசித்துத் தன் சமீபத்திலிருக்கும் அருமைப் புதல்வனைப் பார்த்து என் கண்மணியே! உன்னால் நமது வம்சமானது மிகுந்த கீர்த்தியையும் இந்தப்பூமியானது பரிசுத்தத்துடன் மேன்மையையும் அடைந்து விட்டது. இனி மனிதர்கள் பெறவேண்டிய ஞானத்திற்குப் பிரதிபந்தங்களான ரணங்கள் மூன்று உண்டு அதில் ரிஷிரணத்தைப் பிரமசரிய ஆசிரமத்தாலும், தேவரணம்-பிதுர்ரணம் - இரண்டையும் கிரகஸ்தாசிரமத்தாலுந் தீர்த்துக்கொள்ள வேண்டியது ரிஷிரணத்தை யதாவிதியாயிருந்து நடந்து அவர்களுக்குத் திருப்தி செய்து வைத்தனை. அவ்வாறே தேவபிதுர் ரணங்களையும்விதிப்படி அனுஷ்டித்து அவர்களுக்குத் திருப்திசெய்துவைக்கவேண்டியதுன் கடமையா யிருக்கின்றது. கிரகஸ்தாசிரமப் பிரவேசத்தில் உனக்கு இச்சை யில்லாம லிருப்பினும் எனது வாக்கியத்தைப்பரிபாலனஞ் செய்கிற தர்மபுத்தியுள்ளவனாதலால் நான்உன்னைப்பெற்றதுபோல நீயும் ஒருபுத்திரப்பயனை வேண்டிக் கிரகஸ்தாசிரமத்தைக்கிரகிக்க அபேக்ஷித்துச் சொல்லுகின்றேன். தடையின்றி ஒப்புக்கொள்ளல் வேண்டுமென்றுஉரைத்தருளிய பிதாவின்வசனத்தைக்கேட்டவியாக்கிரபாத மகரிஷி பிதுர்வாக்கியத்திற்கு அஞ்சிஉத்தரம்ஒன்றுசொல்லாது சிவன்செயலென்று அங்கிகாரபாவமாக இருந்தனர் இவ்வாறிருக்க, சகலதர்மங்களையும்அறிந்த பிதாவாகியமத்தியந்தினமகரிஷிஉடனே நன்னடக்கை நற்குணம் நல்லவழகுஇவைகளே தனக்குரியஆபரணங்களாய்க் கொண்டவளும், தவசிரேஷ்டரானவசிஷ்டமகரிஷிக்குத் தங்கையாயுமுள்ள ஓர்கன்னிகையை நிச்சயஞ்செய்து தனது புத்திரனாகிய வியாக்கிர பாதனுக்கு விதிப்படி விவாகம் செய்துவைத்தனர் பிறகு அப்பெண்ணுடன் வியாக்கிரபாதரும்கிரகஸ்தாசிரம தர்மம்நடத்திவருகையில் சிலநாட்கழித்து மகாபதிவிரதையான வியாக்கிரபாதரின் பத்தினிகெர்ப்பவதியாய்ஸ்ரீமானையும், கீர்த்திமானையும், ஞானவானையும் விளங்குகின்ற ஓர்புத்திரனைப்பெற்று அப்புத்திரனுக்கு உபமன்னியுவென்று பேரிட்டு வளர்த்துவருகையில் வியாக்கிரபாதருக்குப் புத்திரன் பிறந்த சமாச்சாரத்தைப் பதிவிரதாதர்மத்திலும் சத்தியத்திலும் பெருமையடைந்த வசிஷ்டமகரிஷியின்பத்தினியாகிய அருந்ததியம்மை கேழ்விப்பட்டுஉடனே தில்லவனம் வந்து புண்ணியலக்ஷணங்கள் அமைந்த வியாக்கிரபாதரின்குழந்தையைப்பார்த்துச் சந்தோஷித்துத்தனது ஆசிரமத்திற்கு கொஞ்சநாள் கொண்டுபோய் வளர்ப்பதாகச்சொல்லி எடுத்துக் கொண்டுவந்து சகலசம்பத்துக்களும் நிறைந்த தனது ஆசிரமத்தில்

அமிர்தத்திலும் இனிய காமதேனுவின்பாலை காலந்தவறாதூட்டி ஓர்குறைவுமில்லாது வளர்த்துவருகையில் வியாக்கிரபாதரும்தனது மனைவியுடன் புத்திரனைப்பார்க்கவேண்டிய அபேக்ஷையினால்வசிஷ்டமுனிவரின் ஆசிரமஞ்சென்று மிகுந்த குணவானாயும் காமதேனுவின்பாலைப் புசித்தலினால் தேஜோவானாயுமிருக்கின்ற புத்திரனைக் கண்டு திருப்தியடைந்து தனது ஆசிரமத்திற்கு அழைத்து அருந்ததி வசிஷ்டர் இவர்களிடத்தில் விடைபெற்றுத் தனது ஆசிரமம் வந்துசேர்ந்தனர் அழைத்துவந்த குழந்தையானது வசிஷ்டராசிரமத்தில் தெய்வீகமான காமதேனுவின்பாலை உண்டுவளர்ந்ததினால் சுகுமாரமானதேகத்தையும், மிகுந்தகளிப்பையும் அடைந்து விளையாடிக்கொண்டிருந்தது. இப்படியிருக்கையில் வியாக்கிரபாதர் தனதுஆசிரமத்தில் தான்புசிக்கும்காய் கிழங்குவேர் முதலியவைகளைப் பாகஞ்செய்து மிகுந்த அருமையாய்க் குழந்தைக்குக் கொண்டு போய்உண்ணும்படி, கொடுக்க, இவைகளொன்றையும்சிறிதும் புசிக்காமல் உமிழ்ந்துவிட்டு இனிமையுள்ள காமதேனுவின் பாலை நினைத்து நினைத்து அழுதுகொண்டிருந்தது இவ்வாறு முகம்வாட,' சரீரம்வெயர்க்க துக்கிக்கும் குழந்தையைப் பிதாவாகிய வியாக்கிரபாதர் தயவுடன் பார்த்து ஓகுழந்தாய்! நீஏன் துக்கிக்கிறாய் துக்கிப்பதினால் பயன் ஒன்றுமில்லை நானோ மிகுந்த தரித்திரன். எனக்குப் பரமசிவத்தைத் தவிர வேறு தனம்இல்லை. தபோலோகத்தில் இருக்கிறகாமதேனுவின் பாலை நினைத்து இவ்விடத்தில் அழுதால் நான் என்னசெய்குவேன். அதன் க்ஷீரத்தையும் அதன் ருசியையும் ஓர் நாளும் பார்த்தவனுமல்லேன். இவ்விடத்தில்க்ஷீரத்திற்காக ஓர் பசுவையாவது வாங்குவோமெனில், அதற்குப் பொருள் வேண்டுமே. நான் கயிலாச பதியைத்தவிர வேறுபொருள் உண்டென்று கனவிலும்நினைத்தறியேன். இதைச்சத்தியமாய்ச் சொல்லுகின்றேன் என்றுரைத்து ஸர்வஜீவ தியாபரான பகவான் முற்காலத்தில்சகலமான தேவர்களுக்கும் இடைவிடாத ஆனந்தத்தைக் கொடுப்பதான மதுரமிகுந்த அமிர்தத்தைக் கொடுத்து ரக்ஷிக்கவில்லையா! உலகத்திலுள்ள ஜீவகோடிகள் பரமசிவப் பிரசாதத்தால் சகல சம்பத்துக்களையும் அடையவில்லையா! அந்தக் கருணாசாகரரான பரமேசுவரனைத்தவிர உனக்கு வேறுகதியில்லையென்றுசொல்லிஉடனே குழந்தையைக் கையிலெடுத்துக்கொண்டு பிரியவசனத்தால் அழுகையைமாற்றி மூலஸ்தானம் சென்று அவ்விடத்தில் சரணம்புகுந்தோரைக் காத்தற்கேகட்டிய கங்கணத்தையுடையவரும் ஜகதாதாரமூர்த்தியாயுமிருந்து அருள்பவருமான சம்புவைக்காண்பித்து இதோ விளங்

கும். சிவமூர்த்தியே உனது துக்கத்தைப்போக்கி மனோபீஷ்டத்தைக்கொடுத்துக் காத்தருள்பவரென்று சிறுவனைச் சந்நிதியிலே விட்டு விட்டனர்.

உடனே குழந்தையும் ஸ்ரீமூலநாதரைப் பார்த்துப் பார்த்துத் தாங்கமுடியாத பசியால் வருந்தித் தேம்பித் தேப்பிஅழுதது. வெய்யலில் வாடிய முல்லைக்கொடியைப்போல சரீரம்வாடி இளைத்துப் பசியினால் துன்புற்று அழுகின்ற குழந்தையைத் தயாநிதியாகிய ஸ்ரீ மூலநாதன் தமது கருணைநிறைந்த கடாக்ஷத்தால் வீக்ஷித்துநம்மிடத்தில்மிகுந்த அன்புள்ளவனாய் நம்மையே கதியாக அடைகின்ற வியாக்கிரபாதனுடைய அருமைப்புதல்வன் க்ஷரமிலாது வருந்திப் பசியாலழுகிறான். நமது பெருங்கருணைக்கு அழகல்லவென்று உடனேக்ஷீரசமுத்திரத்தையே இவ்விதத்தில் வரும்படியாக ஆஞ்ஞாபித்தலும், பாற்கடலானது தனது அலைகளாகிய கரங்களைக்கூப்பியும், தன்னிடத்திலுள்ள நவரத்தினங்களால் அர்ச்சித்தும், பரயசிவத்தின் ஆஞ்ஞைக்குப் பாத்திரமானோமேயென்கிற ஆனந்தத்தாற்பொங்கிச்சப்தித்தும் சந்நிதிக்குச் சமீபத்தில் வந்துநின்றது. உடனே தயாபரரான பகவான் உபமன்னியுவைப் பார்த்து உனது ஆகாரத்திற்காக க்ஷீரசமுத்திரம் வந்திருக்கின்றது வேண்டிய அளவு புசித்துப் பசிதணிந்து சுகித்திருவென்று அனுக்கிரகித்தனர். குழந்தையுமவ்வாறே திருப்தியாக க்ஷீரபானஞ்செய்துக்கொண்டு சந்தோஷசித்தத்துடன் பேரறிவுள்ளவனாய் கீர்த்திமானாக வளர்ந்தனன். பின்பு நிச்சலசித்தத்தோடுகூடிய வியாக்கிரபாத மகரிஷியானவர்மூலஸ்தானேசுவரருடைய சந்நிதியிற்சென்று தனது இடதுகாலைக் கிழாக்கி வலதுகாலைமேலாக்கி ஒருபாதம் பூமியையும் ஜனத்தையும் பொருந்தாமல் வயிறைச்சுருக்கி மார்பை நிமிர்த்திப் புஜங்களை வணங்கி கைகள் இரண்டையும் தாமரை மலர்போல விரிழ்து அழகுபொருந்திய துடைகளில் வைத்துச் சங்கம்போலபருத்த அழகியகழுத்தை அசையாமல் தூக்கிநிறுத்திக் கீழ்வாய்மேல் வட்டப்பட்டபல்லுக்கு நடுவே நாவை வைத்து ஸ்தாணுவைப்போல் சலனமற்றுப்பதமாசனத்திலிருந்துசிவனைத் தியானித்துச் சிவானந்தத்தைத் தரும்படியான சிவயோகத்தைச் செய்யத் தொடங்கினார்.

இவ்வுதமாய்த்தேஜசில் உபர்ந்த வியாக்கிரபாத மகாரிஷி சிவயோகஞ்செய்துவருகையில் மகத்தாகிய சிவயோகம் ஆத்மசைதன்னியத்தைப்பொருந்த அதில் விளைந்த சுகானுபவத்தாலே பார்த்தவிடத்திற் சந்திரமூடரான பகவான் தம்மைச் சிறிதும்உணராததே

வதாருவன மகரிஷிகளுக்குத் தம்மைத்தெரிவித்து அனுக்கிரகிக்கத் திருவுளங்கொண்டு தேஜோரூபமான ஆனந்தத்தாண்டவஞ்செய்தருளினதைச் சிறிதுபார்த்து மிகுந்த வியாகூலசித்தனாய்ச் சிந்திக்கின்றனர். நமதுபரமசிவம் முனிவர்களுக்காகக் கிருபையுடன் ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளிய தேவதாருவனத்தை எனது பூசைக்குரிய இடமென்று பிதாவாகிய மத்தியந்தினர் கூறாது தில்வவனத்தில் மூலஸ்தானேசுவரரைக் காட்டினரே இவ்விடத்திலிருந்து சரணாரவிந்த பக்தி சிறிதுமில்லாத நமக்கு ஆனந்தத்தாண்டவ தெரிசனம் எவ்வாறுகிடைக்கும் தன்னறிவால் அறியத்தகுந்ததும்சர்வலோகங்கட்குஞ் சுகத்தையளிப்பதுமாயிருக்கிற ஈசுரனுடைய சரணாரவிந்த தரிசனங் கிடைத்தற்குரிய புண்ணியம்புரிந்த உத்தமர்கட்கும் அறிவிலாத எனக்கும் எவ்வளவுதூரம் ஞானத்தினாலேயே அறியத்தகுந்த உத்தமதாண்டவத்தைச் சிற்சத்தியானபார்வதிதேவியுடன் எனக்கு எப்படி காண்பிப்பர் என்று பற்பலவிதமாய் நினைத்துத் துக்கித்து சர்வஞ்ஞனான நமதுபிதா சொல்லிய வாக்கியத்திற்குஓர்நாளும் பழுதுவரமாட்டாதே என்று எண்ணித்தெளிந்து தன்னுடைய மனமுதலிய கரணங்களை ஆனந்தத்தாண்டவ தரிசனஞ்செய்யவேண்டியதைத்தவிர இதரவிஷயங்களிற் சிறிதுஞ்செல்லாதுநிறுத்திவேதார்த்தங்களைச் செம்மையாய்ச்சிந்தித்து ஆலோசிக்கின்றனர். எந்தஇடத்தில் பர்மானந்தவிக்கிரகரான பரமசிவன் சர்வமங்களையென்னுஞ் சிற்சத்தியோடுங் தமதுகணங்களோடும் ஆனந்தகீர்த்தனஞ்செய்து வருகின்றனரோ அந்தஇடத்தின் பெயர்களைக் குருவென்றும், பரத்துவமென்றும்எல்லாஇச்சைகளையும் அளிக்குமிடமென்றும், ஆநந்தமென்றும், அமலமென்றும், சத்தென்றும், பரமமென்றும், நித்தியமென்றும், மகத்தென்றும், கோசமென்றும், ஹிரண்மயமென்றும், அந்தப்புரமென்றும், ஏகாந்தமென்றும், புண்டரீகமென்றும், குகாசிரேஷ்டரென்றும், ஆகாசமென்றும், பரிசுத்தமென்றும், பரமாத்புதமென்றும், உத்தமமென்றும், சத்தியத்திற் கிருப்பிடமென்றும், சுழுமுனையிலுதிக்கின்ற ஞானமென்றும், சுகோதயமென்றும், சிதம்பரமென்றும், சுவமுக்தியென்றும், பிர்மஸ்வரூபமென்றும், மகாசத்தியென்றும், திவ்யமென்றும், பெரியதென்றும், சிவாலயமென்றும் வேதாகமங்கள் கோடிகோடியாய்க் கூறுகின்றனவே. அந்த வாக்கியார்த்தங்கள் முழுமையும் சிதம்பரசபையின் பரியாய நாமங்களாகவே சொல்லியிருப்பதினாலும் ஆனந்தகீர்த்தன தரிசனத்தைக் கண்டவர்கள் உண்டென்று இன்று பார்த்தறிந்தோம் இதனாலும் வேதாகமங்கள் இவ்வளவென்று அளவிட்டறியக்கூடாத இந்தச்

சிதம்பரக்ஷேத்திரத்திலேயே ஆனந்தத் தாண்டவ தரிசனங்கிடைப்பதற்குச் சகாயமாய் ஓர் புனிதரான மகாரிஷியைக் கூட்டிவைப்பரென்னுஞ் சிவானுக்கிரகத்தால் ஓர் பேரறிவு தோன்ற திடச்சித்தராய்ச் சந்தோஷத்துடன் மூலஸ்தானேசுவரருடைய சந்நிதானத்திலேயே தவஞ்செய்துக் கொண்டிருக்கும் வியாக்கிர பாதருக்கு அனேகஞ் சுபசகுணங்கள் உண்டாயின. அதைக்கண்டு வியாக்கிர பாத மகாரிஷியானவர் ஆனந்தத்தாண்டவதரிசனத்துக்குப் பிராப்தகாலஞ் சமீபித்திருக்கின்றதென்று உற்சாக சித்தராயிருந்தனர்.

பத்தாவது அத்தியாயம்-முற்றிற்று.

---

## பதினோராவது அத்தியாயம்.

## ஆதிசேடன் விஷ்ணுமூர்த்தியால் ஆனந்தத்தாண்டவ மகிமையை வினவியது.

இவ்வாறிருக்கின்றவியாக்கிரபாதரிடத்தில் ஆனந்தத்தாண்டவ தரிசனத்திற்குச் சகாயராய்ப் பதஞ்சலியெனத் திருப்பெயர்பூண்ட ஓர் மகாரிஷிவந்தனர். அவரது திவ்விய சரித்திரத்தைச் சொல்லுகின்றேன் என்று நைமிசாரண்ணிய வாசிகளான மகாரிஷிகளுக்குச் சூதாசாரியர் சொல்லத்தொடங்கினார்.

திருப்பாற்கடலில் சமஸ்தமானதேவர்களாலும், நித்தியஸூரிகளான ரிஷிகளாலும், அநாதியானவேதங்களாலும் துதிக்கப்பட்டு விளங்கும் லக்ஷ்மீபதியான விஷ்ணுவானவர் ஓர் நாள் தமது ஆதிசேட சயனத்தில் யோகநித்திரை விட்டெழுந்து உட்கார்ந்து சிவ சிவவென்று உச்சரித்து இருகைதூக்கி அஞ்சலி பந்தனஞ்செய்து கண்களில் ஆனந்தஅருவிபெருக, அங்கங்களில் மயிர்க்கூச்செரிய, அகிலலோகநாதரான கயிலாசபதியின் ஆனந்தத் தாண்டத்தை அன்புடன்தியானஞ்செய்துரத்தினதீபம்போலப்பிரகாசித்துஅசைவற்றுப் பத்மாசனத்திலிருந்தனர். இவ்விதந் தியானஞ்செய்துஆனந்தானுபூதியிலிருக்கும் அச்சுதனை ஆதிசேஷன் தாங்கமாட்டாமல் பயந்து முன்னிராத பாரமாயிருக்கின்றதேயென்று வியாகூலமடைந்தனன். அருகிலிருக்கும் லக்ஷ்மீதேவியுங்கண்டு பயந்து திகைத்து நின்றனள். இபடிப் பயப்படுவோர்களைக் கமலக்கண்ணன் அறிந்து உதயபர்வதத்தில் இரண்டுசூரியர்கள் உதித்ததுபோலத் திருக்கண்மலர்ந்து மிகுந்த தயவுடன் தான்செய்துகொண்டிருக்குஞ்சிவானுபூதியை மெதுவாய் விலக்கி எழுந்து காலையிற் செய்யும் விதிகளை முடித்து நவரத்தின மண்டபத்தில் முத்துப்பந்தலிட்டசுவர்ண சிம்

மாசனத்தில் வீற்றிருந்து சிவானந்த ரசத்தையே பானஞ்செய்துக் கொண்டு சுகநித்திரையுடனே சிறிதுநேர மிருந்து அஸ்தவிடுத்து வியவஹாரஜாக்கிரம் பொருந்தியிருந்தனர். இவ்வாறிருக்க, கனத் தால்வருந்திய ஆதிசேடன்பெருமூச்சுவிட்டு எழுந்து தனதுஆயிரம் முடிகளிற் பிரகாசிக்கின்ற மாணிக்கங்களாகிற மலர்களால் திருமாலின் திருவடிகளை அர்ச்சிப்பதுபோல் நமஸ்கரித்து மிகுந்தவணக்கத்துடன் மிருதுவாகக் கேட்கத்தொடங்கினன். வேதங்கள்தொடுத் தற்கரிய திருமேனியை என்மீது சாற்றிய கருணைநிறைந்த கமலக் கண்ணனே! யோகநித்திரைக்கு யோக்கியமான சயனத்தில் முன் போல் பள்ளிகொள்ளாமல் தாங்கமுடியாத பாரத்தை எனக்கீந்து ஓர்விதமாய் எழுந்தருளியிருத்தற்கு யாதுகாரணமோ தெரியவில் லையே? அதைகேட்போமெனில். மிகுந்தபயமாயிருக்கின்றது என் னிடத்தில்தேவரீருக்கு உண்மையுபானபிரியம்இருக்குமாயின் இந்தக் காரணத்தை எனக்குக் கிருபையுடன் அறிவித்துக் காத்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்துநிற்கும்ஆதிசேடனைத் தயாநிதியான பரமபுருஷன்பார்த்துப் புன்னகைசெய்து சொல்லத்தொடங்கினார். ஓ ஆதிசேடனே! நீயும் லக்ஷ்மீதேவியும் என்பயப்படல்வேண்டும். அந்தப்பயத்தை விட்டுவிடுங்கள். கருணாநிதியான எனதுபரமசிவானுக்கிரகத்தால் யான் இது வரையில் அறிந்திலாத பேரின்பத்தை அடைந்தனன். அச்சுகவிசேடம் இவ்வளவென்று சொல்லி முடிவு பெறமாட்டாது. மிகுந்த ரகசியமானது. அதை அன்பனான நீ சிரத் தையுடன் கேட்டமையால் என்னால் இயன்றவாறு சொல்லுகின் றேன் கேட்பாயாகவென்று லோகநாதரான ஸ்ரீ மகாவிஷ்ணுசொல் லத்தொடங்கினர். எல்லாத் தேவர்களும் இடைவிடாது வணங்கும் சைவ தேஜோமயமான கைலாசகிரிக்கு ஓர்தினஞ்சென்று எனது கர்த்தரானபரமேசுவரரைத்தரிசித்து சந்நிதியில்வணங்கிநிற்கின்ற என்னைக் கடாக்ஷசம்ஞையினால் அழைத்து ஒரு ஆசனத்தில் உட் காரச்செய்து மந்தஹாஸத்துடன் கிருபைகூர்ந்து உடனே ரகசிய சமாச்சாரஞ் சொல்ல எத்தனித்து எழுந்தவரைப்போல் எனது கையின்மீது தமதுஒப்பில்லாத திவ்விய அஸ்தத்தையூன்றி எழுந்த ருளினர். உடனேபானுகம்பனால் ஊதப்பட்டசங்கத்துவனியானது அஷ்டதிக்குகளில் முழங்கவும். பரமபக்தரானநந்திதேவரால்அடிக் கப்படும் மிருதங்கநாதம் மூவுலகங்களில்கேட்கவும். தும்புருநாரதர் வீணாகானம் செய்யவும், வேதாகமங்கள்ஸ்தோத்திரஞ்செய்துபரவவும்சந்துஷ்டர்களானகணநாதர்கள்சேவிக்கவும்தபோசீலர்களான மகாரிஷிகள்பாவிக்கவும், தேவர்கள்கூட்டங்கூட்டமாய்த்தொழுது

கொண்டு புஷ்பவருஷங்கள்வருஷிக்கவும், சந்திரசூடரான பகவான் கைலாசகிரியின் அடிவாரத்தை அடைந்து அவ்விடத்திற் பொருந்தின ஒருஏகாந்தமண்டபத்தில்வீற்றிருந்து என்னைப்பார்த்துப் புன்னகைசெய்து அமிர்தம்பெருகுவதுபோல திருவாய்மலர்ந்தருளினர். தேவதாருவனத்தில்கர்மத்தையே பிரமாயெண்ணிக்கர்மத்திற்குப் பலதாதா நாமென்றுணராது தவத்தைச்செய்துஅவத்தில்நிற்கும் முனிவர்களின் சித்தபக்குவத்தைச் சோதித்து அனுக்கிரசித்தற்குக்கோடி மன்மதாகிருதியான ஓர்வேடந்தரிக்கப்போகின்றோம் நீயும் அதற்கிசைந்த அழகுள்ள பெண்ணுருவந்தரித்து நம்முடன் கூடவருவாயாகவென்று ஆஞ்ஞாபித்து உடனே தமது சரணாரவிந்தங்களால் நவரத்தினமயமான மிதியடியை யலங்கரித்தும் சந்திரனைப்பார்க்கிலும் வெண்மையான கோவணத்தை நடுவுடலாகிய அரையிற் புனைந்து, பர்வதத்திற் பெருகும் அருவிபோலவெண்மையுள்ள பூணூலை விஸ்தாரமான மார்பில்தரித்தும், உன்னதமான தோளில் திருநீற்றுப்பையைப் பொறுத்தியும், இடதுகையில்பிர்மகபாலமும். வலதுகையில் தமருகமும் விளங்கத்தரித்தும் சௌந்தரியமென்னும் அரும்புகளையுடையகொடிகள்படர்ந்ததைப்போன்ற ரேகைகளமைந்த அழகிய கழுத்தையும், புன்சிரிப்புடன்கூடிய அதரதளத்தையும், சுபலக்ஷணமாம் பிரவாகத்தின்கழிகள்போன்ற இரண்டுசெவிகளையும், உலகத்தை மோசஞ்செய்தற்கேசெவ்வரிபரந்து நீண்டுவிசாலித்தநேத்திரங்களையும், வேர்வைகளாகிற நக்ஷத்திரங்களால் சோபிக்கின்ற முகமாகிய சந்திரனையும் அச்சந்திரனுல்விழுங்கப்படும் இருட் கூட்டம்போன்ற கஸ்தூரிதிலகமிட்ட நெற்றிப் பிரதேசத்தையும், நெருங்கி நீண்டுசுருண்டு அழகாய்த் தம்மிலொத்து மணம்வீசுகின்ற கரியகூந்தலையும், பவழத்தளிர்போன்ற மிருதுவானசுத்ததேகத்தையுந் தரித்து மெல்லமெல்லநடக்கத்தொடங்கினர்.

பதினோராவது அத்தியாயம்-முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

## பரமேசுவரர் பிக்ஷாடனவுருவந்தரித்துத் தேவதாருவனத்தை யடைந்தது.

எனதுகர்த்தாவான பரமேசுவரர் இவ்வண்ணம் அழகியவண்ணந்தரித்து விளங்கியதைப் பார்த்தவுடனே அவர்ஆக்ஞையைப்பரிபாலிக்கும் கடைமைபூண்ட யானும் ஜெகத்திலுள்ள ஜீவகோடிக

ளின் மனங்களை ஏககாலத்தில் அபகரிக்கும்படியான ரூபலாவண்யம் நிறைந்த பெண்ணுருவந்தரித்து அதற்கேற்ப வண்டுக்கூட்டங்களைப்போற் கருத்தகூந்தலில் இருண்ட இறவிற் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்களைப்போல் புஷ்பங்களைத்தரித்தும், அஷ்டமிசந்திரன்போன்ற அழகிய நெற்றியில் ஜெகன்மோகனகரமாகிய திலதத்தையிட்டும் மதர்த்து நிமிர்ந்து பரந்து பருத்துத் தேமல்படர்ந்து ஓங்கிய ஸ்தனங்களின் முகத்தை உயர்ந்த பீதாம்பரத்தால் சிறிதுமறைத்தும், கரமாகிய தாமரைப் புஷ்பத்தில் ஓர் புஷ்பம் ஜனித்ததுபோலசெங்கழுநீர் மலரைக் கையிற்பிடித்தும், நவரத்தின மயமாய்ச் சிற்றொலியோடு கூடிய சலங்கைகள் தொடுத்த அரைவடம் அணிந்தும், தருமதேவதையான உமாகாந்தரின்சந்நிதியிற்பொருந்தினேன். பொருந்திய என்னைக் காமவிருப்பங் கொண்டவரைப்போல் சடைக்கண்ணால்பார்த்துப் புன்னகைசெய்து மன்மதனைவென்று மகாமுனிவர்களை உன்னுடைய நேத்திர சலனிசௌந்தரிய விசேடத்தால் ஜயிப்பதில் சந்தேகமில்லை என்று என்னைச் சிலாகித்து லோகநாயகியான பார்வதியைக் கைலாசத்தில் இருக்கும்படிசெய்து பெண்ணுருவந்தரித்த நான் பின்சொல்லப் புண்ணியவான்களுக்குக் காணற்கரிய தேவதாருவனத்தை யடைந்தனர். அவ்விடத்தில் பிக்ஷாடனரூபந்தரித்த எமதையன் ரிஷிகள்வசிக்குந் தெருவில் ஒவ்வொருஆசிரமத்தின்துவாரத்திலும் நின்று விலைமதித்தற்கரிய பாதச்சிலம்பை ஒலிக்கும்படி செய்து கையிற்பிடித்த தமருகத்தை முழக்கி உல்லாசத்துடன்நிற்கும் பகவானை ஆசிரமங்களிலிருந்து பிக்ஷைகொண்டுவந்துபோடுகிறவியாஜமாய்ச்சிலரிஷிபத்தினிகள் சூழ்ந்துகொண்டார்கள். உடனே கபாலியானவன் தேவனும் தன்னையேமிகுந்த இனிமையுடன் பார்த்துக் கண்களுக்கு விருந்துசெய்து வைத்துக்கொண்டிருக்கும் ரிஷிபத்தினிகளின் மனதுமயங்கும்படியான அபிநயங்களைக் கோடிகோடியாய்ச் செய்தனர். அந்த அபிநய விசேடத்தைப்பார்த்த சிலரிஷிபத்தினிகள் தங்கள் கொங்கைகள்குலுங்க நடந்துவரும்போது அவிழ்ந்த கூந்தலை ஒரு கையாலும் நழுவிய அரைவடத்தை ஒரு கையாலுந்தாங்கிக்கொண்டு தாங்கமுடியாதகாமபரவசர்களாய் அருகில்ஓடிவந்து பகவானைப் பார்த்துநின்றார்கள். சில ரிஷிமங்கைகள் மன்மதனையெரித்த புன்முறுவலின் அழகையே நோக்கிஆனந்தித்தார்கள். சிலரிஷிமாதர்கள்மனதிற்கிசைந்தமிருதுவானநின்திருமேனியால் எங்களை ஒருதரங்கட்டியணைத்து முத்தம் அளித்தாலாகாதோயென்பார்கள். சிலரிஷிமங்கைகள் பகவானுக்குப்பிக்ஷையிடுவதற்குஅரிசியைக் கையிற்கொண்டு வரும்போது தங்கள் காமாக்கி

னியாலெழுந்த வெப்பமிகுந்த வேர்வையால் கையேபாத்திரமாகக் கொண்டு பசனமான அன்னத்தைப்பிக்ஷாபாத்திரத்தில் இடுவதகுற் வந்தவர்கள் கண்களும் மனமும் கபாலியைச்சூழ்ந்து இருத்தலால் நிலத்தில் இட்டார்கள். சில குலவதூக்கள் பரிமளமிகுந்தபத்திரபுஷ்பங்களைக்கொய்து திவ்விய மங்களவிக்கிரகத்தின் சரணங்களை அர்ச்சிப்போமென்று மலர்களைக்கையிலெடுத்து வருகையிற் பெருகிய விரகதாபத்தால் வெந்ததை நோக்காது பூர்ணசந்திரோதயம் போன்ற முகமண்டலத்தைப் பார்த்துக்கொண்டே மலர்களை முன்புபடைத்திருக்கும் அன்னத்திற்கு இடும் சர்கத்தைப்போலப் பூமியில் இட்டார்கள் சிலகற்புள்ள முனிமங்கைகள் விசேடமகத்துவம் உள்ள இந்த ஆடவமணியைப் பார்த்தால் முன்பு பழகிய அன்பரைப்போல தோற்றுகின்றதே என்றுசொல்லிக் களிப்பார்கள், சிலரிஷிமங்கைகள்ரதிதேவியை விட்டுவிலகி ! எல்லோரும் மயங்கும்படியான இந்த அற்புதவுருவைத்தரித்து இரக்கமில்லாது. ஐந்து பாணங்களை ஏககாலத்தில் ஏழையர்களாகிய எங்கள் உயிரைவாட்டத் தொடுத்துநிற்குங்காமனே என்பார்கள். பிக்ஷைகொண்டுவந்த எங்களை மோகத்துக்குள்ளாக்கிபயங்கச்செய்து செல்லுதலானது இரவியினிடத்தில் இருட்டைக் கொடுத்துச் செல்லுஞ் சூரியனைப் போன்றிருத்தலால் உம்மை ஓரிடத்தும் போகவிடோம் என்று தடுத்து உமது தேககாந்தியாகிய அமுதத்தைப் பானஞ்செய்கிற எங்கள் மனம் இன்னும் திருப்தியடையா திருக்கின்றது. அதைப் பூர்த்திசெய்து செல்லலாம் என்று சிலர்நெருங்கினர், சிறு மருங்கினர்கள் நீர் இவ்விடத்திலேயே நில்லும் போவீராகில் உமது வீக்ஷ விசேடத்தால் நழுவி விழுந்த எங்கள்கைவளையல்களைக் கொடுத்துச் செல்லும். இல்லையேல் அடியெடுத்துவைக்க விடோமென்று தடுத்தார்கள். சில தருணிகள் பிக்ஷைக்காகவேடந் தரித்துவந்த பெருமானைப் பார்த்துப் பெருத்துயர்ந்த ஸ்தனங்கள் சிறிது தோன்ற நின்று சுவாமி! எங்கள் ஆசிரமம் இதோவிருக்கின்றது அதிக தூரமில்லையென்று சொல்லி யழைப்பார்கள். சிலயுவதிகள் ஆசிரமங்களில் என்ன சுகமிருக்கின்றது உம்முடைய மனம் எந்த பூதலத்தில் சுகிக்க அபேக்ஷிக்கின்றதோ அதுவே எங்கட்கிசைந்த வாஸஸ்தலம் என்று அருகில் வந்தார்கள். சில அங்கனைகள் இந்தவனத்திற்குள் எந்த இடம் மனத்திற்கு ரம்மியமாய்த் தோன்றுகிறதோ அந்தஇடத்திற்கு எங்களையும்அழைத்துக்கொண்டுபோதல் வேண்டுமென்று சொல்லுவார்கள். சிலசோபனைகள் பிரபுவே என்னுடைய வீட்டில் பக்குவமுள்ள அன்னங்கள் மிகுதி

யாயிருக்கின்றது அதைப் புசித்துச் சுகித்திருக்கலாம் வீடுகள் தோறும் கால்வருந்தச்செல்லுதல் வேண்டாமென்றுபிரார்த்தித்தா கள். ஒருமெல்லியவள் நாதனே விரகதாபத்தால் ஜீவிப்பதில் சந் தேகமடைத்தஎங்கள் திசையைத்தம்மிடம் அறிவிப்பதற்குநாங்கள் அனுப்பியிருக்கும் பிராணன்களை ஆலிங்கனத்தால் எங்கட்குஈந்தரு ளுமென்றுபிராரத்தித்தாள் சிலலாவண்ணியரமணிகள் மகாரூபமு ள்ள மங்களபுருஷனைப்பார்த்து ஆனந்தமடைந்து நெடுநேரம் தங் கள் கொங்கைகுலுங்க நிருத்தனஞ் செய்தார்கள், சிலஅழகுள்ள தேகிகையர்கள் இவ்வாறுபார்ப்பதற்கு அருமையாகிய நிர்த்தனஞ் செய்யும்போது மன்மதாவேசத்தால் அளவிறந்த அபிநயங்களைச் செய்தார்கள். சிலபங்கஜலோசனைகள் மன்மதனெனவன் வலிமையு ள்ள தனது பாணங்களால் அடித்தொட்டலும் இவரைத்தவிரவேறு சதிகிடையாதென்று பின்தொடர்ந்து சென்றனர். சில பொற்கொ டிகள் மன்மதனெனயமன்வந்துபுகுந்து எங்கள்பிராணன்களை அபக ரிக்கின்றனன் இச்சமயம் மனமிரங்கிக்காத்தருள வேண்டுமென்று வேண்டினர்கள். சிலசுந்தரவதனைகள் பிக்ஷைவாங்கவேண்டியதற் காக இப்பாத்திரத்தைஏன்சுமந்து நிற்கவேண்டுமென்று காமவேத னையடைந்து கேட்டனர்கள். சிலகாதலிகள் பிக்ஷைக்குவந்த காமா ரியைக் கிட்டநெருங்கி இருபக்கங்களிற் பிரேமையுடன் சூழ்ந்து மல ர்கள் தரித்த குழல்கள்அசைய முத்துமாலை தாங்கிய கொங்கைகள் குலுங்கபாடினர்கள். சில பால்மொழிப் பைந்தொடிகள் அரைநா ன்மாலைகளோடு நழுவியவஸ்திரங்களுடன் மன்மதபாணம்பட்டவரு த்தந்தாளாது ஒடிவந்துகபாலியின் திருமேனியில் வீழ்ந்தனர்கள். பதிவிரதாசிரோன்மணிகளாகிய சில ரிஷிபத்தினிகள் இவ்விதங்க ளாகப் பினாகபாணியான பரமேசுவரன் முனிபத்தினிகளான பாலை களையும், யுவதிகளையும்,பிரவுடைகளையும், விருத்தைகளையும், தமது கடாக்ஷவீக்ஷணத்தால் மோகிக்கச்செய்து புன்சிரிப்புடன் முனி மங்கைகளின் மண்டலமத்தியில் நின்றுக்கொண்டிருந்தனர்.

பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## பதிமூன்றாவது அத்தியாயம்.

அப்பொழுது அவ்வனத்தில் வசிக்கும் தவசிரேஷ்டர்களிடத் தில் அவரவர்களின் பத்தினிகள் பார்த்துக்கொண்டிருக்க நான் சென்று நடத்தியவித்தைகளைச் சொல்லுகிறேன் அன்புமிகுந்த ஆதிசேடனே என்று மங்கைவடிவந் தரித்த மாதவன் சொல்லுகின்

றனன். நான் காமினிரூபந்தரித்து மெதுவாய்சிரித்துப் பரமசிவன்
பக்கத்தையடுத்து நிற்கும் எனது ரூபத்தைப் பார்ப்பதற்குவந்து
சூழ்ந்த முனிவர்களின் மனது மிரங்கும்படி வாசனையுள்ள பூங்
கொத்தைக்கையிற்பிடித்து அன்னம்போல் மெதுவாய்நடந்து புன்
சிரிப்பாகச் சிரித்துத் தாமரையிதழ்போல் நீண்டு செவ்வரி பரந்து
கறுத்து விசாலமான கூர்மையுள்ள நேத்திரங்களாகிற அம்புகளைப்
புருவமாகிய வில்லிலேபூட்டி என்னையே பார்த்துக்கொண்டிருக்கும்
முனிவர்களின் கண்களையே லக்ஷியமாய் எய்தவுடனே முனிவர்க
ளெல்லோரும் மோகித்து என்ன ஆச்சரியம்! இதுவரையிற் கண்டறி
யாதலக்ஷணராசிகள் அமைந்தஇவ்வணங்கின் செய்கையைப்பார்த்
தால் விலைமாதுபோலத்தோன்றுகிறது. நாயகனது சாயையைப்
போல் பின்தொடர்ந்து செல்லுதலால் பதிவிரதையாகவும் விளங்கு
கின்றனள் என்றுசிந்தித்து மிகுந்தகாமபரவசர்களாய்ச் சடைகள்
அவிழவும், கட்டிக்கொண்டிருக்கும் மரவுரிகள்நழுவவும், கையிற்
பிடித்தஜபமாலை சுழலவும், நீங்காத பிராமண்யத்தைக்காட்டிக்கொ
ண்டிருக்க நின்றஉபவீதமட்டும் உடையவர்களாய் என்னுடையமுக
த்தையே கண்ணிமையாது பார்த்து நாதனுடைய சந்நிதியிலே
என்னை இச்சித்து அனேகம் காமசேஷ்டைகளைச் செய்தார்கள்.
இவ்வாறிருக்க, விருத்தர்களான முனிவர்கள் தங்கள்மனதை ஒரு
வாறு திருப்பி விசேட லக்ஷணமுள்ள ஒருயௌவன சரீரத்
துடன் பிக்ஷைவாங்கும் விபாஜத்தை வைத்துக்கொண்டு தங்கள்
பத்தினிகளின் மத்தியில் மந்தஹாசஞ் செய்து உல்லாசத்து
டன் நிற்குங் கபாலியைக்கண்டு மிகுந்த கோபமுள்ளவர்களாய்
இவன் யாவன் ஒருவரும் நாடற்கரிய நமது ஆசிரமத்தில் அச்சமில்
லாது வந்து புருந்து மகாபதிவிரதைகளான நம்மனைவிகளின் கற்
பையழிக்கின்றனன் யாவரும் மயங்கும்படியான ஒருபெண்வடி
வைக்கொண்டு ரிஷீஸ்வரர்களின் தவத்தை ஒழிக்கின்றனன் என்று
சங்கித்து விசேடக்குரோதமுற்று இத்துர்த்தனை நமது தவவலி
மையாலும் சாபமாகிறபாணத்தாலுஞ் அதஞ்செய்துவிடுவோமெ
ன்று அனேக கடூரமான சாபங்களையிட்டார்கள். அவர்களிட்ட
சாபங்களெல்லாம் புன்சிரிப்பால் முப்புரமெரித்த தேவனிடத்தில்
அணுகச் சக்தியற்று விருதாவாய்ப் போனதைக்கண்ட விருத்த
முனிவர்கள் அதிக ஆக்ருஷங்கொண்டு எவ்விதத்திலாவது இக்கபா
லியைக் கொன்று விடுவதே தகுதியென்று உடனே ஆபிசாரஹோ
மஞ்செய்ய எத்தனித்து அதற்குறிய குண்டங்களை ஏற்படுத்திக்
கபாலியைப்பார்த்து நீ ஆனந்தத்தாண்டவ தரிசனங்கொடுத்து

வீட்டு அப்பாற்செல்லுக என்று சொல்லுவதைப்போல அவரை அவ்விடம் விட்டுப்போகாமல் தடுத்துக் குண்டலங்களில் சுவாலைஎழும்பும்படி அக்கினியைமூட்டி ஆபிசாரமந்திரங்களை ஜபித்து அதற்குவேண்டிய கடூரமான தைலங்கள் சமித்துக்கள் முதலியவைகளால் ஓமஞ்செய்து ஆபிசாரத்தை நடத்திவருகையில் அந்த அக்கினிகுண்டத்திலிருந்து அதிபயங்கரமான ஒரு வியாக்கிரமானது மிகுந்த வேகத்தோடெழுந்து அக்கினி ஜ்வலிப்பதுபோன்ற கண்களுடன் எட்டுத்திக்கும் பிளக்கும்படி சப்தித்து நின்றதைப்பார்த்து நீ போய் இதோநிற்கின்ற பாவியைச் சங்கரித்துவாவென்று சர்வசம்ஹார மூர்த்தியினிடத்தில் விடுத்தார்கள். உடனே அதிகோபமாய் வருகின்றபயங்கரமான வேங்கையை எனதுநாதராகிய பரமசிவம் தமதுநகத்தின் நுனியாற் கிழித்து அதின் சர்மத்தை உயர்ந்த பட்டுவஸ்திரம்போல அரையிற்றரித்தருளினர். அதைக் கண்டமுனிவர்கள் முன்னிலும் அதிக முனிவுகொண்டுகுண்டத்தில் விஷத்திரவியங்களால் ஹோமஞ்செய்ய அதிலிருந்து எரிகின்ற கண்களையும் விஷங்கலந்தபெருமூச்சையும் உடைய ஓர்பெரியநாகமானது பயங்கரமாகச் சீறிக்கொண்டு எழுந்து பகவானுக்கு எதிரேவருகையில் நீலகண்டரான பரமேசுவரர் அனேகஞ் சுபலக்ஷணங்கள் அமைந்த தமது இடதுகரத்தில் கங்கணமாகத் தரித்தருளி நமது பக்தர்களாகிய இத்துபோதனர்கள் இன்னும் நம்மையுணராமல் சத்துருவாக நினைத்திருக்கின்றார்களே இவர்களுக்குச் சுவரூபதரிசங்காட்டி அனுக்கிரஹித்தல் வேண்டுமென்று திருவுளத்தெண்ணி நிற்கையில், நீண்டு சுருண்டு அழகிய கரிய கூந்தல்கள் பொன் வர்ணம் போன்ற சடைகளாடவும், முந்தின இரண்டு கைகளுடன் மற்றும் இரண்டுகைகள் தோன்றவும், அனுக்கிரஹரூபமான தாண்டவ திவ்வியசரணத்திற் கூடவும்,தேவரைக்காத்த நீலகண்டமும்,மன்மதனையெரித்த பாவநேத்திரமும், வெளிப்படக்காட்டி நிற்கும்போது அக்கினியானது தானுண்ட இருட்கூட்டங்களை உமிழ்ந்ததைப் போன்ற கரிய சரீரத்தையும், நெருப்புத்தலையொத்த கண்களையும், எரிகின்ற சிவந்த மயிர்களையும், குறளாகிய சரீரத்தையும்,சூழ்ந்து வருஞ் சர்ப்பங்களில் ஒரு நீண்டசர்ப்பத்தைக் கையிலும் பொருந்தி கர்ச்சித்துப் பூமி அதிரவரும் பூதத்தைக் காலாந்தகரானபரமபதிகண்டு நடம்புரியுஞ் சரணம்புஜத்துக்கு பீடமாகச் செய்தருளினர். இதைக்கண்ட முனீசுரர்கள் நமது தவவலிமையாற் செய்த பிரயோகங்களெல்லாம் இவனிடத்தில் விருதாவாய் விட்டனவே, யென்று மிகுந்த வருத்தமுற்று ஹோமஞ்செய்த குண்டத்திலிருக்

கும் அக்கினியைவாரிக் கோபத்துடன் பகவான்பேரில் இறைத்த தும், அந்த அக்கினியானது சுவாலையோடு சுழன்றுவேகமாக வரு தலை பசுபதி பார்த்து லீலையாகத் தமது திருக்கரத்தில் தரித்தரு ளினர்.

இவ்வாறு தாம்செய்த கிருத்தியங்களெல்லாம் அகிர்த்தியங்க ளாய்ப் பயனற்றுப்போனதை நினைத்து முனிவர்களெல்லோரும் தங்கள் தவத்தினால் சித்திசெய்து வைத்திருக்கும் மகாமந்திரங்களை ஆகர்ஷித்து மகாதேவரிடஞ் செலுத்த, அவைகளை வேதமூர்த்தி யான என்னையன் நடனஞ்செய்யுந் தமது பாதங்கட்கு நூபுரங்களா கத் தமது திவ்விய அஸ்தத்தால்தரித்தருளச்சுவர்ணநிறமுள்ள அழ கிய ஜடைகளானது அசையும்படி பரமேஸ்வரன் ஆனந்தத்தாண் டவஞ் செய்யத் தொடங்கியவுடனே ஆயுதமிழந்த யுத்தவீரனைப் போல தாங்களேவிய அக்கினியும் மந்திரங்களும் பயனில்லாது போனதைக்கண்டு வாட்டத்துடனிற்கும் அஞ்ஞானிகளானமுனி வர்கள் பகவானுடைய தாண்டவவேகத்தைப்பார்த்துஓர்நிமிஷமே னும் சகிக்கமாட்டாது மோகத்தால் மூர்ச்சையடைந்து பூமியில் வீழ்ந்தார்கள். பயமில்லாது பரமசிவத்தின் பக்கத்தில் நின்று நானும் மிகுந்த பயத்தையடைந்தேன். உடனேசர்வஞ்ஞானஎன் னையன் சகலலோகங்களையும் அளிக்கின்ற அபய அஸ்தத்தாற்பயப் படாதேயென்று அனுக்கிரகித்து அதிவேகமாகச் செய்துக்கொண் டிருந்த தாண்டவத்தை மெதுப்படுத்தி பர்வதராஜ குமாரியானபா ர்வதியை நினைத்தார். லோகமாதாவான பரமேசுவரியும் தருமரூப மான விருஷபத்திலேறித் தேவர்கள்பூமழைபொழிய ஜகத்குருவா னபகவானுடைய வாமபாகத்தில் அமர்ந்தருளலும் பெண்வடிவந் தரித்து அருகில்நின்ற யான் மகாதேவருடைய அனுக்கிரகத்தில் எனது சுவரூபத்தைப் பெற்று இருத்தலும் ஜெகன்மாதாவான சிற்சக்தி மலர்ந்தமுகத்தோடு என்னைப் பார்த்து நீதரித்திருந்தஅழ கிய பெண்வடிவம் மிகுந்த சிலாக்கியமாயிருந்ததென்று சந்தோஷித் துக்கொண்டிருக்கும்பொழுது காருண்ணிய விக்கிரகமாகிய பரம சிவம் தமது நீண்டு சிவந்த சடைகளானது அஷ்டதிக்குகளிற்பரவ வும், கையிலேந்திய அக்கினியானது எழுந்துஜ்வலிக்கவும், கற்பாந் தத்தில் எழுந்த இடியைப்போல் தமருகத்தின் சப்தமானதுமூவுலக ங்களில் முழங்கவும், எல்லாப் புவனத்தோர்களும் வணங்கும் சரண ங்களில் மந்திரமயமான சிலம்புகள் ஒலிக்கவும், புலித்தோல் அரை யில் விளங்கவும், சர்ப்பங்கள் பூண்ட அஸ்தங்கள் அசையவும், நவர த்தினமயமான நூபுரங்களணிந்த குஞ்சிதபாதம் நிர்த்தனஞ்செய்ய

வும் அமர்ந்தருளிய சர்வேசுவரன் தமதுகருணைநிறைந்த கடாக்ஷத்தால் அச்சத்துடன் நிற்கும் அம்பிகையைப்பார்த்து நீயே எமது ஆனந்தத்தாண்டவ ரசத்தைமுழுதும்அனுபவித்தற்குரியை என்று அனுக்கிரகித்து சக்தியற்ற என்னையும் தாண்டவதரிசனஞ் செய்யும்படி ஆஞ்ஞாபித்தனர்.

இவ்வாறிருக்க தாண்டவ வேகத்தைக்கண்டு தரிசிக்கச்சக்தியற்று மூர்ச்சித்துவீழ்ந்த தேவதாருவனவாசிகளான மகரிஷிகள்மூர்ச்சை தெளிந்தெழுந்து நிர்த்தனஞ்செய்பவர்கருணாநிதியானபரமேஸ்வரரென்றுணர்ந்து மிகுந்தபயமடைந்து தாங்கள்செய்த அபராதங்களைப் பொருத்தருளல்வேண்டுமென்று அடிக்கடிவந்தித்துப் பலமுறை ஸ்தோத்திரஞ்செய்தனர்கள். உடனே கருணாசாகரரானபகவான் தமது ஆனந்தத்தாண்டவத்தைப்பார்க்கச்சக்தியற்ற முனிவர்களுக்கு ஞானதிருஷ்டியைக்கொடுத்து நிர்த்தனவைபவத்தைச் சந்தோஷித்தர்களாய்ப் பார்க்கும்படி செய்தருளித் தமதுபுன்சிரிப்பினால் தேவதாருவன் முழுமையும் நிலவு பரவியதுபோற் செய்து அவ்வனவாசிகளான முனிவர்கள்செய்த அபராதங்களெல்லாந் திரண்டொருருவெடுத்ததைப்போல் கரியநிறத்துடன்நிற்கின்ற பூதத்தை முதுகுநெரியும்படி சரணத்தால் மிதித்தும் தபோதனர்கள் ஜன்மந்தோறுஞ் செய்திருக்கின்ற பாபசமூகங்களை ஒழித்து நற்கதியிற்சேர்த்தற்குத் திருவுளங்கொண்டு தமது குஞ்சிதசரண தரிசனங்காட்டியருளினர் உடனே பரமசிவானுக்கிரகத்தால் நேத்திரோற்சவமான ஆனந்தத்தாண்டவத்தைத்தரிசனஞ்செய்து எல்லையில்லாதசிவானந்தரசத்தில் மூழ்கிய தபோதனர்கள் தண்டுகமண்டலங்களுடன்கைகளை யுபரத்தூக்கிச் சிவந்த ஜடைகள் வனமுழுதும்பரவ ஆனந்தப் பரவசமடைந்து நிருத்தனஞ் செய்தார்கள். பிரமேந்திராதி தேவர்கள் எல்லோரும் மிகுந்த சந்தோஷசித்தர்களாய் இருகைகளில்மலர்களை யெடுத்து அஞ்சலியஸ்தத்துடன் ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு தாண்டவமூர்த்தியின் சமீபத்தில் சூழ்ந்தார்கள். வீணையிற்சிறந்த நாரதர் முதலிய முனிவர்கள் கானஞ்செய்வதை மறந்துப், ஆனந்தத்தாண்டவ தரிசனஞ்செய்யச் சக்தியற்றும், ஸ்தம்பித்து நின்றார்கள், பூதகணங்களெல்லாம் ஆனந்தமுற்று அதிவேகமாக நிர்த்தனஞ்செய்யத்தொடங்கின. இவ்வாறிருக்க கிருபாநிதியாகிய பகவான் என்னையும் பிர்மா முதலியதேவர்களையும் பிர்மபாராயணர்களான தபோதனர்களையும் பார்த்து நீங்களெல்லோரும் தேவதாரு வனத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து அதில்எமது ஆனந்தத்தாண்டவ சுவயரூபத்தைப் பக்தியுடன் தியானித்து மயக்கமற்றுப் பூஜை

செய்யுங்கள். அந்தப்பூஜாவிசேடத்தால் குறைவற்ற சுகத்தையடைவீர்கள் என்று திருவாய்மலர்ந்தருளிப் பவானிபதியான பரமேசுவரர் ஆகாசமார்க்கமாய்த் தமதுதேவியோடு அந்தர்த்தானமடைந்தனர். உடனே பார்வதிபதியான பகவான் மறைந்த திங்கைநோக்கி நமஸ்கரித்துப் பிரியாத அன்புடன் இவ்விடம்வந்து சேர்ந்தனன். கேட்டனையோ ஆதிசேடனே! கருணாநிதியான என்னையன் நடித்தருளிய ஆனந்தத்தாண்டவ தரிசன சுகத்தை நினைத்து யோகநித்திரையினின்றும் விழித்துத் தாங்கமுடியாத ஆனந்தப் பெருக்கால் செழித்திருந்தனன் என்று மகாவிஷ்ணு திருவாய்மலர்ந்தருளினர் கேட்டீர்களோ நைமிசாரண்ய வாசிகளானமுனிவர்களே! பின்பு நடந்த ஆதிசேஷபகவானுடைய சரித்திரத்தைச்சொல்லுகின்றேன் என்று சொல்லத்தொடங்கினர்.

பதின்மூன்றாவது அத்தியாயம்-முற்றிற்று

---

## பதினான்காவது அத்தியாயம்.

## ஆதிசேடன் ஆனந்தத்தாண்டவஞ்செய்தலைக்கூறியது.

ஸ்ரீமகாவிஷ்ணுவின் அற்புதவசனங்களைக்கேட்ட ஆதிசேடன் மிகுந்த ஆநந்தபரவசனாய்க் கண்களில் ஆனந்தவெள்ளம்பெருக்கக் கரங்களைச் சிரங்களிற்றாக்கி ஆனந்தத்தண்டவ தரிசனஞ் செய்தவனைப்போல் எல்லையில்லாத களிப்பையடைய அதை நோக்கியசிவானந்த பரிதரான ஸ்ரீபதியானவர் இந்தஆதிசேடனோ நாம் கூறிய ஆநந்தத்தாண்டவ வைபவத்தைக்கேட்டு ஈசசரணாரவிந்தத்திற் பதிந்த மனதுடையவனாய் இருப்பதினாலும் இவனதுசெயலெல்லாம்பரமேசுவரரின் பூஜைக்காகவே பொருந்தி இருத்தலினாலும் மகாத்மாவாகிய இவனை இனி அடிமையாகக் கொண்டிருத்தல் மிகுந்த அபராதமென்று யோசித்து ஆதிசேடனே! நீ சிவபக்திவிசேடத்தால் தன்னியனாயினை! இனிமேல்எனக்குப் பாயலாக இருப்பது தகுதியன்று முன்போல உன்மீது படுத்து யோகநித்திரை செய்தற்கு என்மனம் பொருந்தவில்லை. ஆதலால் எனது கைங்கரியங்களை உன்புத்திரனைக் கொண்டு நடத்தச்செய்து வேதங்கள் காணற்கரிய ஆனந்தத்தாண்டவ தரிசனஞ் செய்தற்குறிய தவத்தைச்சீக்கிரஞ்செய்து முடித்துக் கொள்ளென்று திருவாய்மலர்ந்தனர். அவ்வாறு கட்டளையிட்ட பத்மநாபனைப் பார்த்து ஒ நாதனே! நான் சம்புவின் தாண்டவ தரிசனத்தில் மிகுந்தஅன்புள்ளவனாயினும் தேவரீரை விட்டுப்பிரிய மனமில்லாதவனாய்வருந்துகின்றேனென்றுகூற, கமலாபதியானபகவான் சேஷனுடைய அடிமைத்திறத்தைக்கண்டு மகிழ்ந்து ஒ ஆதி

சேடனே! பரமேசுவரரின் கிருபை யுனக்குங்கிடைக்கும், நீ உத்தர கைலாசத்தின் பக்கத்திற்சென்று உறுதியான தவத்தைச்செய்துபர மசிவத்தைப்பூசிப்பாயாகில் அன்பர்கள் நினைத்தவையெல்லாங்கொ டுத்தருளுஞ் சிவபெருமான் உன்னுடைய மனத்தைப்பூர்த்திசெய்து வைப்பர் சந்தேகமில்லையென்று வரமளித்தவைகுண்டநா தனைவண ங்கி நான்செய்யப்போகிற அருமையானதவம் விக்கினமில்லாது பூர் த்தியாதல்வேண்டும் என்று பிரார்த்தித்துச் சந்தோஷசித்தனாய்க் கேசவமூர்த்தியினிடத்து விடைபெற்றுக் கைவல்லிய பூர்த்திக்குக் காரணமாகிய கயிலயங்கிரிச்சாரலை யடைந்து நாலுபக்கங்களிலும் அக்கினியை வளர்த்தி அதனடுவேயிருந்து படங்களிலுள்ள இரத்தி னங்கள் ஜ்வலிக்க, கண்களிலெழுந்த அக்கினிச்சுவாலைகளால் சூரி யன் பயப்படும்படிச்செய்து பரமசிவதாண்டவதரிசனத்தைக்கருதி த்தவஞ் செய்யத்தொடங்கினன், தவஞ்செய்யும்போதுதன்னுடைய சுவாசமும் ரேசகமொழிந்து பூரககும்பங்களைச் செய்தனர் தனக் குரிய வுணவென்றுகாற்றையுங்கொள்ளான். சிவரூபத்தியானஞ்செ ய்து வருவதினால் நெடுநாட்சென்றதையுமினையான். பரமசிவத்தின் ஜோதிமயமான ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசிக்க இச்சித்திருக் குங் கண்களுக்குப் பிரகாசத்தைப் பாற்குந்திறமையை உண்டுபண் ணுவதுபோல உக்கிரதாபத்தோடுகூடிய சூரியமண்டலத்திற் செலு த்தி சந்திரகாந்திபோன்ற வெண்மையான சரீரத்தை இளைக்கச்செ ய்து கடூரமான தவத்தைப் புரிந்தனன்.

இவ்வாறு தவஞ்செய்கையில் பக்தர்களின் சித்தத்தில்இடைவி டாது வசிக்கும் கிர்த்தகர்த்தராகிய மகேசுவரன் பூர்வந்தேவ்தாரு வனவாசிகளான முனிவர்களின் மனதை சோதிக்கச்சென்றதுபோ ல ஆதிசேடனுடைய மனதைச் சோதிக்கத் திருவுளங்கொண்டு அம் ஸவாகனத்திலேறிச் சதுர்முகரான பிர்மாவின் வுருவெடுத்துத் தவ ஞ்செய்துக்கொண்டிருக்கும் ஆதிசேடனுடைய சமீபத்தில் வரவும், ஆதிசேடன்கண்டு பிரமதேவரென்றுநினைத்து அர்க்கியபாத்தியவுப சாரங்கள்செய்து இருத்தலும், பிர்மரூபியான பரமசிவம் சேஷனைப் பார்த்துத் தவஞ்செய்ததுபோதும், இக்கடூரதவத்தினால் எந்த வஸ் துவை இச்சிக்கிறாயோ அது எவ்வளவு அருமையாகவிருப்பினுங் யாம் கொடுக்கின்றோம். உனக்குயோகத்திலிச்சையா? அல்லதுவித் தைகளிலிச்சையா? சித்திகளிலிச்சையாவென்று வினவியருளினர். அவ்வசனத்தைக்கேட்டுச் சிவபக்தியில் பதிந்த மனமுடைய பணி நாயகன், கலைமகள் நாதனைப்பார்த்து சுவாமி! தாம்கேட்டபடிஒரு

வஸ்துக்களிலும் எனக்குஇச்சையில்லை நிர்மலனை பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்கின்றேன். அப்பரமசிவனே எனக்குக்கதியே தவிர வேறில்லை அவரே அடைதற்கரிய வரங்களை அளிப்பர் என்று சொல்லலும், அதைக்கேட்டுச் சதுர்முகரூபியாய்வந்தசர்வேசுவரன் ஆதிசேடனுடைய மனோநிச்சியத்தை யறியவேண்டிப்பின்னுஞ்சொல்லுகிறார். ஓ பணீசுவரனே! நீயுரைத்த பரமேசுவரன்வந்து உனக்கு அளிக்கும்வரங்களை யாருங்கொடுப்பார்கள் அதிற் சந்தேகமில்லை உனதுஉண்மையான கருத்தையுரைப்பாயாகில்அதின்படிமனோபீஷ்டத்தைப்பூர்த்தி செய்துவைக்கிறேனென்று கூறினன். அதைக்கேட்ட ஆதிசேஷன் ஓ பிதாமாரே! என்விருதாவான மொழிகளைவசனிக்க வேண்டும். விபுவாகிய எமது பரமசிவத்தைத் தவிர இதரர்களாலும் உம்மாலும் எனக்காகவேண்டியது ஒன்றுமில்லை. எனது கோரிக்கை உங்களால் முடிகின்ற சுலபமானதுமல்லஎன்றுசொல்லவும். நான் கொடுக்கின்ற வரங்களில் உனக்கு இச்சையில்லாதிருப்பினும் நீ எதைக்குறித்துத் தவஞ்செய்கின்றாய் அதை யுரைப்பாயாகவென்றனர். சுவாமி! சர்வத்தையும்விட்டு பரமசிவத்தையே நாடித் தவஞ்செய்கின்ற எனக்குப்போகங்களாலும், வித்தை களாலுஞ், சித்திகளாலும், முத்திகளாலும் என்னபிரயோசனம்? ஆனால் தேவதாருவனத்தில் அவ்வனவாசிகளான முனிவர்களுக்குக்குக் கிடைத்த ஆனந்தத் தாண்டவத்தைப் பார்க்க அபேக்ஷையேயன்றி வேறொன்றிற் சிறிது மிச்சையில்லை என்று சொல்லவும், ஹம்சவாகனனும்வந்த அற்புதன் நீ கிடைத்தற்கரிய ஆகாராதிகளை விடுத்து அழகிய சரீரத்தை இளைக்கச்செய்து கிடைத்தற்காரிய ஆனந்தத்தாண்டவ தரிசனத்தில் இச்சைவைத்தனையே இது லபிக்குமா? ஞானிகளாலும் யோகிகளாலும் அளவிட்டு அறியவொண்ணாத பரமாத்மாவைக் குறித்துத் தவஞ்செய்து முந்தினவர்கள் தாண்டவத்தைக் கேட்டார்கள், களுக்குப் பரமசிவம் தாண்டவதரிசனங் கொடுத்திருக்கின்றனர், இது அசாத்தியமான காரியம் என்றுரைத்தலும் ஓசுவாமி ! பரமேசுவரைம் பிராத்தித்த எவர்கள் அபீஷ்டங்களை யடையாமற் போனார்கள். பூர்வத்தில் தேவதாருவன ரிஷிகளுக்குஅவர்கள் பிரார்த்திக்காது எழுந்தருளி அனுக்கிரகிக்கவில்லையா? பிரார்த்தித்த எனக்கு ஏன் வராமலிருப்பர்? அவசியம் பிரசன்னமாகி ஆனந்தத் தாண்டவ தரிசனத்தைத் தந்தருள்வார் சந்தேகமில்லை என்னலும், நீகூறியது பரமசிவம் உனக்கு அருள்வராயின் சரீரம் இளைத்து எலும்பு தோன்றும்படி தவஞ்செய்கின்றனையே இத்தனைநாள் ஏன் வரவில்லை? பயனில்லாதவிஷயத்தில் முயற்சிப்பவர் உன்னைப்போல்கண்டதில்லை

என்றுரைத்தலும், ஓ தேவனே! கடூரமான தவத்தால் அனித்திய மாகிய சரீரம் இளைப்பினும், நித்தியமான காலமானது இளைப்பதில்லையே என்னலும், ஆதிசேஷனே! நீசொல்லிய காலமானது நித்தியமாயினும் சரீரம் ஒடுங்கி ஆத்ம சந்தேகத்தை அடைகிற காலத்தில் நீகோறிய தாண்டவதரிசனம் சம்பவிக்கின் உனக்கு என்ன பிரயோசனம் என்றுகூறலும், சுவாமி! இந்த ஜன்மமானது நீங்குகிறகாலத்தில் என் மனமானதுஆனந்தத்தாண்டவதரிசனத்தையே அபேக்ஷித்து உறுதியுடன் இருப்பதினால் அந்தஎண்ணமேவித்தாக மற்றொரு சரீரம்எடுத்து அந்த ஜன்மத்திலாவது ஆனந்ததாண்டவ தரிசனத்தைக் காண்பேனேயன்றி விருதாவாக ஆகமாட்டேன் என்று சொல்லலும், இவ்வாறுகூறிய ஆதிசேஷனுடைய மனோநிச்சயத்தைப்பார்த்து பிரமதேவராய் வந்த பகவான் ஹம்ஸவாகனத்தை விருஷபவாகனமாய்ச்செய்து நான் முகத்தை விடுத்துச் சுவயரூபத்தை யெடுத்து இடதுபக்கத்தை அலங்காரஞ்செய்யும் உமையவளோடு பிரசன்னமாய் விளங்கினர்.

பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.

---

பதினைந்தாவது அத்தியாயம்.

## பரமேசுவர் ஆதிசேடனுக்கு அனுக்கிரகித்துப் பதஞ்சலியென்னும் பெயர்கொடுத்ததைக் கூறியது.

இவ்வாறு பிரசன்னமாய் விளங்கும் பரமேசுவரனை ஆதிசேடன் பார்த்துக் கைகால் நடுக்கமுற்று அஞ்சலிபந்தனஞ்செய்து நமஸ்கரித்துத் தெளிந்த மனத்தோடு வேதங்களாலுந் தேடற்கரியவுருவமுள்ள நாதனே! விருபாக்ஷனே! தேவனே! பார்வதிநாதனே நடனபதியே! எனது அஞ்ஞானத்தினாற்செய்த அபராதங்களைத் தும் பொறுத்தருளல்வேண்டுமென்று பலவாறு ஸ்தோத்திரஞ்செய்து ஆனந்தபரவசனாய்த் தவசிரேஷ்டனான ஆதிசேடன் மனதிற் குறித்த வரத்தைக் கேட்கவேண்டித் தண்டம்போல் கீழேவீழ்ந்து நமஸ்கரித்தனன். உடனே சாம்பபரமேசுவரர் தமதுவிருஷபத்தை ஆதிசேடனுக்குச் சமீபத்திற் போகும்படிசெய்து வந்தனஞ்செய்துகொண்டிருக்கும் சேஷனைத் தமது திவ்விய அஸ்தத்தால் எடுத்துஅன்புடன் பலதரம்கட்டியணைத்துஸர்வார்த்தங்களையுங்கொடுக்கத் திருவுளங்கொண்டு தமது அழகிய கரத்தை ஆதிசேஷனுடைய சிரத்தில் வைத்து மிகுந்த கிருபையுடன் சொல்லுகிறன. ஓ அன்புள்ள ஆதிசேஷனே! ஒருவராலுஞ் செய்தற்கரிய தவத்தை உன்னைப்போற் செய்தாலன்றிக் கிடைத்தற்கரிய ஆனந்தத்தாண்

டவ தரிசனற்கிடைக்கமாட்டாது. உன்னுடைய தபோவிசேடத்திற்கு வசியப்பட்ட நாம் ஆனந்தத்தாண்டவ தசரிசனத்தை அவசியம் உனக்குக் காண்பிக்கின்றோம். அன்றியும் எமது சுவயரூப உண்மையை யுனக்கு உபதேசிக்கின்றோம்.

இரகசியமாகிய அதைப் பக்தியுடன் கேட்பாயாக இந்தப்பிரபஞ்சமானது மாயையிலுண்டாகிக் கர்மபாசத்தாற் கட்டுண்டுசுகம், துக்கம், மரணம், பயம், சத்துரு இவைகளை யறியாது மண்ணால் உண்டாகிற கடம்போலக் கிரியாசக்தியினால் உண்டாக்கப்பட்டிருக்கின்றது. அம்மாயையினால் நிர்க்குணனாகிய நம்மிடத்தில் சிருஷ்டி முதலான கிரியைகள் ஆரோபிக்கப்பட்டிருக்கின்றன. எமக்குஸகளமென்றும்நிஷ்களமென்றும்இரண்டுவுருவமுண்டு. அவைகளிற்சகளமானது வயிராக்கியம் பொருந்தினவர்களின் கண்களால் பார்த்தற்கும் தியானித்தற்கும் உரியது. நிஷ்களமானது உருவமற்றதாய், பரிபூரணமாய், ஜெனனமரண மில்லாதாய், ஒருவராலும் பார்க்கவும் நினைக்கவும் தியானிக்கவும் அரிதாயிருப்பது இவ்வாறிருப்பினும் எவர்கள் அன்புடன் என்னையே அடைக்கலம்புகுந்து அகங்காராதிகள் நீங்கிப் பற்றுதலற்ற பக்குவிகளாய் இருப்பவர்களின் பாக ஜாலங்களை அறுக்கவேண்டிக் குருவடிவாய் வந்தருள்பவரும். நாமேமேற்கூறிய சகல நிஷ்களங்களைக்காட்டிலும் ஞானமே எமக்கு முக்கியமாகிய வடிவம் அதற்கு ஆனந்தமேபிராணன். இவ்வித வடிவங்களுள்ள எமக்கு ஞானமென்றும் பராபரமென்று பெயர். சிருஷ்டி முதலிய ஐந்து கிருத்தியங்களும் எமது தாண்டவமாகும். எம்மை வேதங்கள் இயற்கையாய் ஆனந்தத்தாண்டவத்தையே உடையவனென்று சொல்லுகின்றன. இவ்வாறு சொல்லும் வேதங்களுக்கு எமது தாண்டவத்தின் ஹேதுவும், திக்கும், காலமும், ஸ்தானமும் தெரியமாட்டாது. நாம் பூர்வம் தேவதாருவனத்தில் முனிவர்களுக்காக ஆனந்தத்தாண்டவஞ்செய்யும்பொழுது அந்தத் தாண்டவவேகத்தைச் சகிக்கமாட்டாது அப்பூமியானது விருக்ஷங்களுடன் நடுங்கியது. அதைக்கண்டு ஆனந்தத்தாண்டவத்தொடக்கத்திலேயே மெதுவாக நிறுத்திவிட்டோம், நாம் வேகமாகத் தாண்டவஞ்செய்யின் அதை வகிக்கத்தகுந்த பூமி ஓரிடத்துமில்லை. ஆயினும் நமது தாண்டவத்தைத்தாங்கும்படியான விஸ்தாரமுள்ளசபை ஒன்று பூமியிலிருக்கின்றது என்று பரமேசுவரர் அனுக்கிரகித்தனர். அதைக்கேட்ட பணிராஜனும் சந்தோஷசித்தனாய் மிகுந்த வணக்கத்துடன் சொல்லுகின்றனன். ஒநாதனே! இந்தப் பூமியில் அப்படிப்பட்ட சபை ஒன்றிருக்கின்றதா? எனது பாக்கி

யமேபாக்கியம்! வேதாகமங்களாலும் இப்பிரபஞ்சங்களாலும்அறி தற்கரிய உத்தமசபையில் இவ்வடிமைக்காகப் பிரசன்னமாகி ஆனந்தத்தாண்டவ தந்தருளல்வேண்டும். இதைத்தவிர வேறு எவற்றிலும் சிறிதும் இச்சை எனக்கில்லை என்றுரைத்தலும் இதைக்கேட்ட பகவான் மிகுந்த பிரேமையுடன் ஆதிசேடனைப் பார்த்து ஸ்தாவரமான அண்டசிருஷ்டியும் ஜங்க மாகிற சரீரசிருட்டியும் ஒக்கும். ஆதலால் சரீரத்தில் இளநாடி இடத்திலும், பிங்கலைநாடி வலத்திலும், சுழிமுனைநாடி மத்தியிலும் போவதுபோல் இப்பூமிக்கு இளையென்னும் நாடி இலங்கைக்கு நேரே போம். பிங்கலையென்னும் நாடி இமயமலைக்கு நேரேபோம். இவை களிரண்டிற்கும் நடுவில் சுழிமுனை யென்னும்நாடி தில்லவனத்தின் மத்தியில் தொடர்ச்சியாய் சென்றிருக்கின்றது. புருஷாகிருதியாகிய இந்த பூதலத்திற்குக் கைலாசபர்வதம் சிரசு, ஸ்ரீபர்வதம் முகம், கேதாரம் நெற்றி, காசி புருவமத்தி, குருக்ஷேத்திரம் சூதம், பிரயாகை நாபி, திருவாரூர் மூலாதாரம் சிதம்பரம் ஹிருதயமத்தி, இவற்றுள் பூமியின் ஹிருதயமாகிய சிதம்பரக்ஷேத்திரத்தை விடுத்து இதரக்ஷேத்திரத்திற்குப்போக அபேக்ஷிக்கிறவர்கள் கையிலிருக்கின்ற இரத்தினத்தைவிடுத்துக் காச்சுக்கல்லைத்தேடுவோரை ஒக்கும். சிதம்பரக்ஷேத்திரத்தில் ஸ்ரீமூலநாதரென்று பேரமைந்த ஜோதிர் மயமான மகாலிங்கமொன்றிருக்கின்றது. அதற்குத் தக்ஷிணபாகத்தில் தேஜோரூபியாய் ஆகாசமென்று பேர்பெற்ற ஓர் சபையிருக்கின்றது. அந்தச்சபையில் குறைவற்ற ஆனந்தத் தாண்டவத்தை எப்பொழுதுஞ் செய்துவருகின்றேம். அந்தச்சபையைச் சிதம்பரமென்று எல்லோரும் புகழ்ந்து வந்திருக்கிறார்கள். ஞானக்கண் எவர்கள் பெற்றார்களோ அவர்கள்தான் அந்தசிற்சபையைப் பார்ப்பார்கள். எவர்கள் புண்ணியஞ் செய்யவில்லையோ அவர்கள் நமது சபையைக் காணமாட்டார்கள். அவர்களுக்கு முத்தியுமில்லை. அளவிறந்த மகிமைதங்கிய அற்புக்ஷேத்திரத்தை நீ அடையவேண்டிய உபாயத்தைச் சொல்லுகின்றேன். உன்னுடைய விஷச்சுவாலையோடுகூடிய பயங்கரமான ஆயிரமுகங்களையும், நெருப்புப்பொறிகளைக் கக்குகின்ற இரண்டாயிரம் கண்களையும் கண்டு பூமியிலுள்ளோர் நடுங்குவார்கள். ஆதலால் இவ்வுருவத்துடன் அவ்விடஞ் செல்லாதுபூர்வத்தில் அத்திரி மகரிஷிதன்பத்தினியாகிய அனசூயையுடன் புத்திராபேக்ஷையாய் விஷ்ணுவைக் குறித்துத் தவஞ்செய்தார்கள். அவர்களுக்குப் புத்திரனாக உன்னைச் செல்லும்படி அச்சுதன் ஆஞ்ஞாபித்தலும், நீ அவர்கள் வயிற்றில் ஜனிப்பதற்குஅஞ்சி அனசூயைஸ்நா

னஞ்செய்து சத்தியாய் இருகைபேந்தப் புத்திரப்பேறு வேண்டிப் பிரார்த்தித்துநிற்குந்தருணத்துஅவளதுகரத்தில்அழகமைந்தஐந்து தலையுள்ள சிறியநாகமாய்த்தோன்றலும், புத்திராபேக்ஷையாயிருப் பவர்களாயினும்சர்ப்பசுவயரூபத்தைக்கண்டு பயந்து பூமியில்விடுத் தனள். அவளுடைய கையிலிருந்து பூமியில் விழுந்த காரணத்தால் பதஞ்சலியென்று பேர்பெற்றனை அவ்வுருவத்தைத்தாங்கி இப்போ திருக்கும் அறிவு குறையாமல் பதஞ்சலிபகவானென்று பிரசித்தி பெற்று இருதயத்தில் எம்மையிடைவிடாது தியானஞ்செய்து நாக லோகத்தின்வழியாய்ச்செல்லுதல்வேண்டும். அவ்வழிநடுவேஅஸ்தி துங்கமென்று ஓர் பெரிய பர்வதமிருக்கின்றது, அதற்குத் தெற்கில் ஓர் பிலத்துவாரமிருக்கின்றது, அந்தப்பிலத்துவாரத்திற்குமுன்னே நாம்கூறிய திவ்யவனமிருக்கின்றது,அதற்குவடபக்கத்தில் ஆலமரத் தடியில் ஸ்ரீமூலநாதரென்று ஓர்லிங்கமூர்த்தமிருக்கின்றது,பெருமை பொருந்திய அம்மகாலிங்கத்தைஎப்பொழுதுந்தேவர்கள் ஸ்தோத் திரஞ் செய்கிறார்கள். அம்மூர்த்தத்தில் எமது ஆனந்தத்தாண்டவ த்தைத் தியானஞ்செய்து வியாக்கிரபாதனென்று ஓர்முனி பூசித்து வருகின்றான் நீ அவ்விடஞ்சென்று புண்ணியசாலியான அம்முனி யுடன் கலந்து எம்மைப் பக்திசெய்துகொண்டு இருக்கக்கடவை. தைமாசத்தில் குருவாரத்தில் புஷ்யநக்ஷத்திரங்கூடிய அமிர்தசித்த யோகத்தில் சூரியன்பகலில் மத்தியபாகத்தில் விளங்குஞ்சமயத்தில் விருஷப லக்கினத்தில் உனக்கும்வியாக்கிரபாதனுக்கும் நாம் ஆனந் தத்தாண்டவதரிசனங்கொடுத்தருள்கின்றோமென்று திருவாய்மலர் ந்த பரமேசுவரரின் அற்புத வசனத்தைக்கேட்ட ஆதிசேடன் பர மானந்த மோகங்கொண்டு நமஸ்கரித்துப் பகவானைப் பார்த்துக் கொண்டே நெடுநேரம் நின்றனன். தர்மமூர்த்தியாகிய பரமேசுவர ருங் கணத்தமர்கள் துதிக்கப் பார்வதிதேவியோடு அந்தர்த்தான மாயினர்.

உடனே ஆதிசேடன் பகவான் மறைந்த திக்கைநோக்கி வந்தி த்துமிகுந்த அன்புடன் தனது பயங்கரமான பெரியவுருவை மறை த்துப் பதஞ்சலிவுருவத்தைத் தியானித்துச் சிவானுக்கிரஹத்தால் அவ்வுருவையடைந்தனன் அவ்வடிவத்தால் விளங்குகின்றபணீசுவ ரன்மெள்ளத் தன்னுடைய உலகத்தின் மார்க்கமாய்ச் சென்றனன். அப்போது நாகலோக வாசிகளான பன்னக சிரேஷ்டர்கள் பரமே சுவரைக் குறித்துத் தவஞ்செய்து அவரருளைப்பெற்றுவரும்தங்கள் தலைவன் வரவைக்கண்டு எதிர்சென்றழைத்து அவர்களாற் சூழப் பட்டு சிறிதுதூரஞ் செல்லும் ஈசனால் அனுக்கிரகித்த அஸ்திதுங்க

மென்னும் பர்வதத்தைக்கண்டு உடனேவணங்கினன் இதைக்கண்ட கார்க்கோடகன் முதலிய நாகேந்திரர்கள் ஆச்சரியப்பட்டுச் சகல லோகங்களையும் தாங்குகின்ற நீங்கள் எதற்காக இப்பருவதத்தை வணங்கல் வேண்டுமென்றுகேட்டலும், ஆதிசேடன் புன்னகைசெய்து ஓநாகர்களே! இந்தப்பருவதத்தின் அடிவட்டமானது பாதாளத்திலும் சிகரமானது தில்லவனத்திலு மிருப்பதால் அதில்வசிக்கும் பரமேசுவரரைநினைத்து நமஸ்கரித்தனன் என்னலும், சுவாமி! பரமசிவரூபத்தைத்தரிசித்த இப்பருவதத்தையும் பிலத்துவாரத்தையும் நாங்கள்உண்மையாகக்கண்டதில்லையென்று வந்திக்கவும்,பின்புதன்னைச்சூழ்ந்திருக்கும் நாகேந்திரர்களை அனுப்பிவிட்டுப் பரிசுத்தமாகிய பிலத்துவாரத்தை நமஸ்கரித்துச் சந்தோஷத்துடன் பஞ்சாக்ஷரத்தையே நேத்திரமாகவும், தன்னுயிர்த்துணைவரான பரமேசுவரரையே வழித்துணைவராகவும்கொண்டுஎல்லோரையும் நற்கதியேற்றவந்த தேஜோவானன பதஞ்சலிபகவான் அப்பிலத்திலே பிரவேசித்துச் சர்வசித்திகளையும் கொடுக்கிற தில்லவனத்தை உத்தேசித்துப் புறப்படனர்.

பதினைந்தாவது அத்தியாயம்-முற்றிற்று.

## பதினாறாவது அத்தியாயம்.

### பதஞ்சலிப்கவான் சிதம்பர க்ஷேத்திரமடைந்து வியாக்கிரபாதருடன் நடனதாண்டவ தரிசனத்திற்குக் காத்திருந்ததைக்கூறியது.

இவ்விதம்புறப்பட்ட பதஞ்சலிபகவான் தில்வனத்தைநோக்கிச் செல்லச்செல்ல சிவானந்தத்தில் மூழ்கிய மனதுடன் ஆனந்த வெள்ளம் பெருகிய நேத்திரங்களுடையவராய் சுருக்கிய ஐந்துதலைகளில் விளங்கும் ரத்தினங்களின் காந்திகளையே கிரணமாகக்கொண்ட ஞானசூரியன்போல் பிலத்துவாரத்திலிருந்து வெளிப்பட்டு உலகத்தின் க்ஷேமத்திற்காக அமைந்த தில்வவனத்தை அன்புடன் கண்டு பன்முறை வந்தித்து அவ்வனத்திற பிரவேசித்துச்செல்லும் போது மகாதபசியாகிய வியாக்கிரபாதர் முன்பு கண்டறியாத பதஞ்சலிபகவானுடைய திருவுருவைக்கண்டு ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கப் பதஞ்சலியும் பரமேசுவரன் தனக்குஅருளியபடிதபசியாய்வியாக்கிரபாதம் பொருந்தியிருக்கின்றனரென்று மிகுந்த பிரேமையுடன் வியாக்கிரபாதரைக் கண்டனர்.

உடனே வியாக்கிரபாதர் மிகுந்த சந்தோஷமடைந்து தேஜஸ்ஸால் நிறைந்த பதஞ்சலி பகவானைப்பார்த்து ஆதரவுடன் கையேந்தி உபசரித்துவாருங்களென்றழைத்து, அருட்செல்வம் வாய்த்ததமது வாசஸ்தலம் எவ்விடம்? எவ்விடமிருந்து வருகின்றீர்கள்? நீங்கள் யார்? உங்கள்பெயர் யாது? எந்தத்தேசம் போக இச்சித்திருக்கின்றீர்? இவைகளை விஸ்தாரமாய் சந்தேகமற எனக்கு உரைத்தல் வேண்டும் என்று கேட்ட வியாக்கிரபாதரைப்பார்த்து முனிசிரேஷ்டரே! நான் பர்வதங்களால் அலங்கரிக்கப்பட்டும் சமுத்திரங்களால் சூழ்ந்துமிருக்கின்ற இப்பூமியைத் தாங்கியும் விஷ்ணு அம்சம்பெற்றும் விளங்குகின்ற ஆதிசேஷன். என்மீது சயனங்கொண்டிருக்கும் விஷ்ணுமூர்த்தி ஓர்நாள் தாம் கண்டறியாத அற்புதத்தைக்கண்டு ஆனந்தபரிதராய் நித்திரைகொள்ளாது இருப்பதைக்கண்டு என்ன காரணம் என்று நான்கேட்டதும், அரிவாசுதேவன் தேவதாவனத்தில் பரமசிவானுக்கிரகத்தால் கிடைத்த ஆனந்தத்தாண்டவதரிசனத்தைத் தியானித்திருந்தனனென்று சொல்லவும், நான் அதில் மிகுந்த இச்சையுடையவனாய்ச் சுவாமி! ஆனந்தத்தாண்டவ தரிசனம் எனக்குக் கிடைக்கும்படி அனுக்கிரஹிக்கவேண்டுமென்று பிரார்த்தித்த என்னை தவஞ்செய்யும்படி அனுப்பவும், நான் கைலாஸபர்வதம் சென்று அளவிறந்த கடூரமான தவத்தைச் செய்யவும், மகேசுவரன் பிர்மரூபமாய்வந்து என்னைச் சோதிக்கவும், அக்காலத்தில் கலக்கமற்றமனதையுடைய என்னிடத்தில் தயவுசெய்துபவழமலை போன்ற திருவுருவைக்காண்பிக்க, அதைக்கண்டு ஸ்தோத்திரஞ்செய்து வணங்கிநிற்கும் என்சிரத்தில்பூதேசராகிய பரமசிவன் தமது கரகமலத்தைச்சாத்தி வேதத்தின் முடிகளால் அறியுந் தமது சுவரூபத்தை எனக்கு உபதேசித்து, இவ்வுலகத்திற் கிசைந்த இவ்வுருவையும் அளித்து, பதஞ்சலியென்று பேரையுங்கொடுத்து, உன்னை உனது லோகமாகிய நாகலோகத்திற்சென்று பூர்ணஞானத்தோடு பிலத்துவாரத்தின் வழியாய் நடந்து பூலோகத்தில் பரதகண்டத்தில் பூமியின் இருதயாரவிந்தமாகிய தில்லவனத்தை அடைந்து அவ்விடத்தில் மாத்தியந்தினனென்னும் ஓர்முனிவியாக்கிரபாதரென்னும்பேர்பெற்றுநமது ஆனந்தத்தாண்டவதரிசனஞ்செய்ய அபேக்ஷித்துக்கொண்டிருக்கின்றான். அவ்விடத்தில் அவனுடன்சேர்ந்து இருக்கக்கடவை அவனுக்கும்உனக்கும்ஆனந்தத்தாண்டவதரிசனங்கொடுக்கின்றோம் என்று அருளிச்செய்துபரமேசுவரன்மறைந்தருளிய பின்பு பகவானுடையஆஞ்ஞைபின்படிஇவ்விடம்வந்துசேர்ந்தனன் இது தவிர ஒருகாரியமும் எனக்கில்லையென்றுரைத்தபதஞ்சலியின்

அற்புத வசனத்தைக்கேட்ட வியாக்கிரபாதமகாரிஷி மயிர்க்கூச்செரிந்து ஆனந்தமூர்ச்சையை அடைந்து பதஞ்சலிபகவானுடையஉபசாரத்தால் தெளிந்து பிர்மாதிகளான தேவர்களும் அடைதற்கரிய பரமசிவ கடாக்ஷத்திற்கு யானும் பாத்திரமாகின்றேனோ பார்வதிநாதராகிய பரமேசுவரனுடைய கருணாசமுத்திரத்தின் அலையில் மூழ்க நான் என்னசுகிர்தஞ் செய்தேனோவென்று ஆனந்தபரவசராய் பரம சிவனைப்போன்ற உம்மாலே எனக்கு இவ்வளவுபாக்கியங்கள் உண்டாயினவென்றுதுதித்து எல்லையில்லாத சந்தோஷசித்தராய் அடிக்கடி கட்டிக்கொண்டு ஞானதிருஷ்டியால் ஆனந்தத்தாண்டவ தரிசனஞ் செய்தவரைப்போல ஆனந்தபரிதராயினர். பின்புபதஞ்சலிபகவானை அழைத்துக்கொண்டு புண்ணியமிகுந்த சிவகங்கையில் ஸ்நானஞ் செய்வித்து மூலஸ்தானேசனைப்பூசிக்கும்படிசெய்து ஆசிரமத்திற்கு அழைத்துச்சென்று அங்குள்ள தடாகத்தில் ஸ்நானஞ் செய்வித்து தமது ஆன்மார்த்த சிவலிங்க மூர்த்தத்தை மலர்களால் பூசிக்கச்செய்து அப்பர்னசாலையில் ஆசனமிட்டுஇருக்கச்செய்து ஆதரவுடன் பூசித்து அன்றையதினம்க்ஷேத்திர உபவாசஞ் செய்வித்து மறுதினத்தில் தவத்தோர்க்குரிய இனிமையுள்ள சாகமூல பலாதிகளால் விருந்துஅளித்தனர். பூரணஞானமுள்ளவராயும் புத்திமானாயும் விளங்குகின்ற பதஞ்சலிமுனிவர் வியாக்கிரபாதரின் ஆசிரமத்துக்கு சமீபத்தில் மேற்கு திக்கில் மனோஹரையான பூமியில் ஓர் குளம் வெட்டிவைத்து அக்குளத்திற்குக்கீழ்க்கரையில்உமாபதியை யதாவிதியாய்ப் பிரதிஷ்டைசெய்து பூசித்து அக்குளத்தின் வடகரையில் தனக்கு ஆசிரமம் அமைத்துக்கொண்டு ஆனந்தத்தாண்டவ தரிசனத்தில் ஆசையுள்ள பிரசன்ன மனதையுடையவராய்த் தவஞ்செய்துக்கொண்டிருந்தனர். இவ்விதமாக பதஞ்சலிமகாரிஷியும் வியாக்கிரபாதமுனிவரும் தபசுசெய்துக்கொண்டு உலகத்தின் பாவங்களைப் போக்கியும், மூலஸ்தானேசனைத் தியானஞ்செய்து பூசித்தும், தேஜோவான்களாய் பரமசிவகிருபையால் உண்டாகும் ஆனந்தத்தாண்டவ தரிசனத்தை இச்சித்தவர்களாக வாழுநாளில் இவர்களது உருவங்களைக்கண்டு அவ்வனத்தில் சஞ்சரிக்கும்மிருகங்கள்முதலியவைகள் முந்திபுலிரூபமாய்ஒருவன்தவஞ் செய்துக்கொண்டிருந்தனன். இப்போதுபாம்புருபத்துடன்ஒருவன்தவஞ்செய்ய வந்திருக்கிறானென்று பயந்து கழுத்து நடுங்கக், கண்கலங்க, மயிர் குலுங்க, ஓடிப்பதுங்கியிருந்து சிலநாள்சென்றபின் அவைகள்அவர்களுக்கு உதவித்துணையாயின. இந்தத் தபோதனர்களைத் தரிசிக்க வேண்டி அநேகமகரிஷிகள் அவ்விடம் வந்துசேர்ந்து மூலஸ்தானே

சனைத்தரிசித்து அங்கேஞானசபையுண்டென்பதை முனிவரிருவருக்கும் உணர்த்த அவ்விருவரும் மிகுந்த ஆனந்தத்துடன் அந்த ஞானசபையையும் ஆனந்தத்தாண்டவத்தையும் தியானஞ்செய்து வணங்கிப் பிரசன்னமான முகத்துடன் அந்த இடத்திலேயேதபோதனர்களுடன் கலந்து வசித்தார்கள்.

பதினாறாவது அத்தியாயம்-முற்றிற்று.

181065

## பதினேழாவது அத்தியாயம்.

## பதஞ்சலி வியாக்கிரபாதருக்கு பரமேசுவரர். ஆனந்தத்தாண்டவதரிசனங் கொடுத்தலைக்கூறியது.

கேட்டீர்களோ நைமிசாரண்ணிய வாசிகளான மகரிஷிகளே இந்தப்பிரகாரம் ஆனந்தத்தாண்டவதரிசனத்திற்காக தவஞ்செய்து வருகின்ற பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும் அனேககாலம் சென்றபின்பு பரமேசுவரனால் ஆனந்தத்தாண்டவ தரிசனத்திற்காகக் குறிக்கப்பட்ட மங்களதினமானது சமீபித்து வரும்போது மிகுந்த உல்லாசத்துடன் அமிர்தம், க்ஷீரம், கரும்பின்ரசம் இவைகளுன்இனிமையெல்லாந் திரண்டதுபோன்ற ஸ்ரீ பஞ்சாட்சர மயமாகிய ரசத்தைத்தெவிட்டாது பானஞ்செய்துக்கொண்டிருக்கும்போது ஆனந்தத்தாண்டவதரிசனத்தில் மிகுந்த இச்சையுள்ள திருசகஸிர முனீசுவரர்கள் இவர்களிடத்தில்வரவும், அவர்களைப்பார்த்துஓ தபுபாதனர்களே! நிவர்த்திசெய்யக்கூடாத ஜன்மமாகிய அந்தகாரத்தைப் போக்குதற்கு சூரியோதயம்போலவும், நேத்திரங்களின் தவப்பயனும் விளங்குகிற ஈசதாண்டவ மகோற்சவத்தை நாம்எல்லோரும் பரமேசுவரரால் குறித்ததினத்தில் பார்க்கக்கடவோம். நீங்கள் எல்லோரும் உங்கள் ஆசிரமஞ்சென்று தவஞ்செய்துக்கொண்டிருங்களென்று விடுத்து ஆனந்தத்தாண்டவ தரிசனத்திற்குரியதினத்தை எண்ணி அளவிட்டுக்கொண்டு தாயைத்தேடும் பசியுள்ள கன்றைப் போலவும், மேகங்களை விரும்பும் சாதகபக்ஷிபோலவும், பகவானுடைய வரவை எதிர்பார்த்து நடுநின்ற நாட்களைக் கழித்து வருகையில்ஆனந்தத்தாண்டவதரிசனங்கிடைத்தற்கமைந்ததினத்திற்கு முந்தியதினத்தில் சூரியன் கைலாசஞ்சென்று பரமேசுவரன் சிதம்பரத்திலேநிருத்தனஞ்செய்யஎழுந்தருளுகின்றார் என்கிறசெய்தியை அறிந்து விரைந்து நடந்து யாவருக்கு முந்தித்தரிசிக்க வந்தவனைப் போல் கீழ்க்கடலில் உதயமாயினன். உடனே பதஞ்சலி வியாக்கிர

பாதரிருவரும் மிகுந்த சந்தோஷசித்தராய் பரமேசுவரர் திருவாய் மலர்ந்தருளியபடி குருவாரமும் புஷ்ப நக்ஷத்திரமுங்கூடிய உத்தம தினம்வந்துவிட்டது. இன்றைபதினம் அபாரகருணாநிதியான அத்தன்வந்து நிர்த்தனஞ்செய்குவர். நாம் பார்த்து அளவிறந்த சுகத்தையடையலாமென்று யோசித்துக்கொண்டிருக்கும்போது சுபசகுனங்கள் அநேகம் உண்டாகும், அவற்றைக்கண்டு மிகுந்த களிப்புற்றவர்களாய்த் தாண்டவதரிசனத்திற்கு விக்கினங்கள் உண்டாகாமலிருத்தற்கு ஈசபுத்திரராகியவிக்கினராஜனைப்பூசித்து நித்தியகிரியைகளையும்முடித்துச்கொண்டிருக்கையில் சூரியனானவன்பிர்மாதிகளுக்குங்கிடைத்தற்கரியஆனந்தத்தாண்டவதெரிசனம்நமக்குக்கிடைக்குமென்னும் ஆசையினால் விரைந்துவந்து மிகுந்த ஒளியுடன் ஆகாயத்தின் மத்தியில் நின்றனன். அதைக்கண்ட பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும் தங்கள் ஆசிரமங்களிலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம்வந்து பகவானுடையவரவையெதிர்பார்த்திருக்கும்போது பிரணவாத்மாவாயும் ஜகத்பதியாயுமுள்ள நடராஜபதி வந்தாரென்று தாளத்துவனியோடு கலந்த காகள முதலிய வாத்தியத்துவனிகள் உயர்ந்து கேட்கவும், மிருதங்கம், சங்கம், பணவும், கொம்பு, குழல் முதலிய வாத்திங்கள் சப்திக்கவும், சகல வாத்தியங்களுக்கும் மேலாய் எழுகின்ற தாளத்துவனிக்கு முன்னே கணேசுவரர்களான ஆயிரமுகங்களையுடைய பானுகம்பனும், பர்வதம்போன்ற ஸகஸிர சிருங்கனும் ஆனந்தமோகிதர்களாய் வேகத்துடன் பூமியை அடைந்தார்கள். அவர்களில்பானுகம்பன்சந்திரமண்டலத்துக்குச் சமானமான வெண்மையுள்ள பெருத்த சங்கங்களை ஆயிர முகங்களினும் வைத்து அண்டம் பிளக்கும்படி பிரணவத்துவனி உச்சரிக்கும்படி கோஷித்தனன். பரமசிவபபிரசாதத்தால் காந்தர்வவேதத்தில் மிகுந்த வல்லமையுள்ள ஸகஸிர சிருங்கனென்றுபேர் பெற்ற பாணாசுரன் ஆயிரங்கரங்களால் அடிக்கின்ற சுத்தமத்தளதுவனியானது கடலோசையடங்கசப்திக்கவும்,தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி யென்னும், ஐவகை நாதங்களும், நான்குவேதங்களின் கோஷங்களும், பரமேசுவரருடைய சரணாரவிந்தங்களை நீங்காத ஸ்ரீ நூபுரங்களின் சப்தமும், தேவர்களுடைய இனிமையுள்ள கானங்களும், ஏககாலத்திற் கேட்டவுடனே தேவர்களால் வருஷிக்கும் பாரிஜாத முதலிய வாசனையுள்ள மலர்களைக்கண்டு அந்தத்திக்கைநோக்கி நமஸ்கரித்து அஞ்சலிபந்தனஞ்செய்து ஓ பார்வதி நாதனே! நடராஜ தெய்வமே! அநுக்கிரகிக்கவேண்டும், தேவரீரது பாதாம்புஜத்தைத் தரிசிப்பிக்கவேண்டும்

என்று புளகாங்கித விக்கிரகர்களாய் துதித்துக்கொண்டிருக்கையில் கருணாநிதியான பரமேசுவரர்பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் ஞானதிருஷ்டியைக் கொடுத்து மோகத்தின் மாதாவாயும்,ஜகத்தை சம்ஹாரஞ்செய்கின்றவளாயுமிருக்கிற மாயையாகிய திரையைநீக்கியருளலும், உடனே ஆயிரம் சூரியர்கள் உதித்தது போன்றதாயும், இவ்வளவென்றறிய முடியாததாயும், சர்மநேத்திரங்களால் கிரகிக்கத்தகாததாயும், யோகிகளுடையஇருதயத்தில் விளங்குவதாயுள்ள ஒரு தேஜோவிசேஷம் ஞானமயமான சிற்சபையில் ஆவிர்ப்பவித்தலும் அந்தத்தேஜஸின்நடுவே அசைவற்று ஓர் சரணத்தை ஊன்றியும், மற்றொருசரணத்தைக் குஞ்சிதமாகத்தூக்கியும், அத்திருவடிகளிற் சாத்தியமாணிக்கமயமான திருச்சிலம்புகளும்,அழகிய அரையில் அணிந்தபுலித்தோலுடையும், பட்டத்தின்ரத்தினங்களால் விளங்குகின்ற சர்ப்பக்கடி சூத்திரமும், நவரத்தினங்களிழைத்த உதரபந்தனமும், எக்ஞோபவீதம் பொருந்திய திருமார்பும், வளைத்து வீசியருளியவாமகரமும், பணிகங்கணந்தரித்த அபயஅஸ்தமும், அசைகின்ற தமருகத்தையும், ஜ்வலிக்கின்ற அக்கினியையும், ஏந்திய இருகைகளும் காளகூடத்தால் அழகிய திருக்கழுத்தும்,திருத்தோளும், சங்கக்குழையும் பொருந்தியசெவிகளும், திருவாய்ப்பவளத்தில்பிரகாசிக்கின்ற புன்னகையும், மலர்ந்த பங்கஜத்தின் அழகு போன்ற திருமுகப்பிரசன்னமும்,பார்வதிதேவியைப் பார்த்தருளுகின்ற திருநயனங்களின்கடாக்ஷவிளக்கமும்,புருவமாகியஇளங்கொடியில்விளங்குகின்றநெற்றியாகிய சந்திரனும், கங்கை,சர்ப்பம்,சந்திரன்,கொன்றை, வெள்ளெருக்கு, கொக்கிறகு, மத்தம், தும்பை இவைகளால் அழகிய ஜடாபாரமும், பிர்மகபாலமாலையும், ஆபாதமஸ்தக பரியந்தஞ் சாத்திய திருவெண்ணீறும், அசைகின்ற சிவந்தஜடாபாரமும், பொருந்தி விளங்குகிற அற்புதமான ஆனந்தத்தாண்டவரூபத்தைப் புனிதர்களான பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும்கண்டு அதற்கு இடதுபக்கத்தில் இருண்டமேகம்போற் குழலிலேமின்னல்போன்ற செந்தாமரைமாலையும், அழகிய நெற்றியும், அதிற்பொருந்திய சிந்தூரதிலகமும்,சௌந்தரியப்பிரவாகத்தின் அலைகள்போன்றஇரண்டு புருவங்களும், தாமரைமலர்போன்ற கண்களும், அணிகளந்ததிருக்காதும், சண்பகமலர்போன்றநாசியும், பவழத்தைவென்ற இதழும் முத்துகள்போன்ற பல்வரிசையும், கன்னிக்கமுகுபோன்ற கழுத்தில் விளங்குகின்ற நித்தியமாகிய பொலிவினையுடைய திவ்விய மங்கள பூஷணமும், இளம் மூங்கிலைப்போன்ற இருபாகுக்களும், கரகமலத்திலேந்திய செங்கழுநீர் மலரும், பெருத்துயர்ந்த ஸ்தனப்பிர

தேசத்தில் விளங்குகின்ற முத்துவடமும், சௌந்தரியப் பிரவாகத்தின் சுழிபோன்ற அழகிய நாபியும், பீதாம்பரந்தரித்த அழகிய இடையும், அதில்தரித்த ஒட்டியாணமும், நவரத்தினமிழைத்த மேகலாபாணமும், மன்மதனுடைய உத்தியானவனத்தில் இருக்கின்ற வாழைபோன்ற அழகியதொடைகளும், கருடைப்பச்சைபோன்ற குழந்தாள்களும், காமராஜனுடைய காளவாத்தியம்போன்ற இருகுஜங்களும், செந்தாமரைமலர்போன்ற தாள்களில் விளங்குகின்ற நவரத்தினநூபுரங்களும், பசுமையுள்ள திருமேனியும், அழகியஆனந்தமான புன்னகையும்பொருந்தி அக்கினியைவிட்டு நீங்காதஉஷ்ணம்போல அந்நடராஜமூர்த்தியை அகலாது நடனதரிசனத்தைநோக்கி நிற்கும் சிவகாமசுந்தரியென்னும் தேவியைத் தரிசித்து பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும் க்ஷணநேரம் தன்னை மறந்து ஒன்றுந்தோன்றாமலிருக்கையில் தயாளுவாகிய பரமேசுவரருடைய கிருபாதிருஷ்டியால் தெளிவையடைந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து கையைச்சிரசின்மேல் தூக்கி அஞ்சலிபந்தனஞ்செய்து கண்ணில் ஆனந்த நீர்பெருக மேனிமுழுதும் மயிர்க்கூச்செறிந்து சொல்லற்கரிய ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கி ஸ்தோத்திரஞ் செய்யத் தொடங்கினார். நித்தியராயும், 'ஜகதானந்த காரணமாயும், மகா நடநாதராயும், நாட்டியவேதஞ் செய்தவராயுமுள்ள தேவரீரை நமஸ்கரிக்கின்றோம். உயர்ந்ததையும்தாழ்ந்ததையும் அறிந்தவராயும், பரமாத்மராயும், பரமாத்பரூபராயும், பவக்கடலை ஒழிப்பவராயுமுள்ள தேவரீரை வந்திக்கின்றோம். குணமாயும், குணியாயும், கைவல்லிய மோக்ஷத்திற்குக் காரணமாயும், தேவர்களால் வந்திக்கப்படுகிறவர்களாயும், திரிபுரத்தை எரித்தவராயும், திருநீற்றையணிந்தவராயும், சந்திரார்த்த சேகரராயும், மலைமங்கைபாகரராயும், நாகேந்திரஹாரராயும், அஷ்டமூர்த்தி சுவரூபமாயும், வேதாந்தவேதத்தியராயும், நாதாந்த மூர்த்தியாயும், நாரணனால் அர்ச்சிக்கப்பட்டவராயும், நரகதைங்குப் போக்குகிறவராயும், நாரதரால் பாடப்பட்டவராயும், நந்தியால் துதிக்கப்பட்டவராயும், சிற்சபைக்கு ஈசராயும், தகராகாசத்தில் வசிக்கிறவராயும், தக்ஷ எக்ஞத்தையழித்தவராயும், சலந்திரனை ஒழித்தவராயும் உள்ளதேவரீரைத் துதிக்கின்றோம். மூவுலகத்துக்கு நாதராயும், ஸ்ரீகண்ட பரமேசுவரராயும், அம்பிகையோடு விளங்குகிறவராயும், மங்களங்களை யளிப்பராயும் உள்ள தேவரீரை நமஸ்கரிக்கிறோமென்று பலவாறு துதித்துப் பன்முறை வந்தித்துஆனந்தத்தாண்டவ தரிசனஞ்செய்து நிற்கையில், பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்கள் மகாதேவனைப் பார்த்து நாதனே! நாங்

களும் தேவரீரது ஜோதிமயமான சிதம்பர சபையையும், அதில் நடிக்கும் ஆநந்தத் தாண்டவத்தையும் தரிசிக்கும்படி கிருபைசெய்தல்வேண்டும் என்று பிரார்த்திக்கவும், சிற்சபேசன் புன்சிரிப்புடன் அருகில் அமர்ந்தருளுஞ் சிற்சத்தியாகிய சிவகாமசுந்தரியின் முகாம்புஜத்தை வீக்ஷித்து சகல இச்சைகளின் பலன்களை அளிப்பதாயும், சகலமான தேவர்களுக்குந் துர்பலமாயும், மோக்ஷத்தைக் கொடுப்பதாயுமுள்ள ஆனந்தத்தாண்டவதரிசனத்தால் எல்லோருஞ்சுகிகளாகவும், பாவத்தை விளக்கினவர்களாகவும், பிறப்பைப் பயனுள்ளதாகச் செய்தவர்களாகவும், முக்தர்களாகவும் ஆகவேண்டுமென்று திருவுளத்தெண்ணிக் கிடைப்பதற்கரிய ஆனந்தத் தாண்டவத்தை எல்லோரும் பார்க்கும்படி நடித்தருளினர்.

பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினெட்டாவது அத்தியாயம்.

## பதஞ்சலி வியாக்கிரபாதர் நடராஜமூர்த்தியை வரங்கேட்டலைக் கூறியது.

கேட்டீர்களோ நைமிசாரண்ணிய வாசிகளான தபோதனர்களே! பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவருடைய தபோவிசேடத்தால் மஹாதுர்லபமான தாண்டவ தரிசனத்தை லக்ஷ்மீபதியான விஷ்ணுவும், சரஸ்வதீநாதனான பிர்மாவும், இந்திரன் முதலான தேவர்களும், திருஸகஸிர முனீசுவரரும், தும்புரு நாரதர்களும், சித்தவித்தியாதரர்களும், யக்ஷகின்னரர்களும், கந்தர்வர்களும், திக்பதிகளும், சிவகணத்தலைவர்களும் இவர்களெல்லோரும் உமாபதியின் அனுக்கிரஹத்தால் ஞானதிருஷ்டியை அடைந்து சிதாகாச சபையில் ஆனந்த கிர்த்தனத்தைக் கலக்கமறதரிசித்து நமஸ்கரித்து ஆனந்தசாகரத்தில் மூழ்கியவர்களாய் பக்திமிகுந்த சிவகணங்களுடன் சபேசனைப் பார்த்து பராத்பரனே! பிரபஞ்சேசனே! கங்காதரனே! பிர்மாவின் சிரத்தை சேதித்தவனே, உலகத்தைத் தரித்தவனே! காமனை எரித்தவனே திரிபுரத்தை யழித்தவனே! காலனையுதைத்தவனே! என்று துதித்து மலர்களை அள்ளிச்சொரிந்து ஹரஹர மஹாதேவ என்று அடிக்கடி நமஸ்கரித்து சிலதேவர்கள் ஆநந்தத்திருக்கூத்தாடினர்கள் சிலதேவர்கள் ஸ்மரணையற்று ஸ்தம்பித்து நின்றார்கள். சிலகணங்கள் களித்தார்கள். சிலகணங்கள் உயர்ந்து பாடினார்கள். தினந்தோறும் அநேககோடி அபராதங்களைச் செய்கிற எங்களிடத்தில் கடாக்ஷம் வைக்கவேண்டுமென்று வேண்டினர்

சிலதேவதைகள் எங்கள்பாவமாகியரோகத்திற்குதேவரீரதுவிஷண மாகியஔஷதத்தைத் தரவேண்டுமென்றுயாசித்தார் சிலசுரசிரேஷ்டர்கள், சிவந்த மயிர்களையும், பெருத்த முகத்தையும், உன்னதமான வயிற்றையும், விகாரமான சரீரத்தையும் உடைய கோடிபூதகணங்களாடவும், எரிகின்ற சடையையும்,மிக்ககருத்த விழியையும், சுருங்கிய முகத்தையும், நீண்டபற்களையும், நீண்ட கழுத்தையும், பசியினாலுண்டாகிய அக்கினியினால் எரிகின்ற வயிற்றையுமுடைய பிசாசகணங்கள்,பூதங்களுடையநிர்த்தனத்திற்குச் சரியாகத்தாளங்கள் போடவும், இவ்விதங்களாக மூவுலகத்தோர்களும் அவரவர்களின் மனதிற்கிசைந்தபடி ஆடியும்பாடியும் சுகித்தும் நிற்கும் போது புண்ணியவான்களாகிய பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவர்களையும் தயவுடன் கடாக்ஷித்து தாண்டவபதியாகிய பகவான் திருவாய் மலர்ந்தருளுகின்றனர்.

ஓ பக்தசிகாமணிகளே! உங்களுக்கு அபீஷ்டமான வரங்களைக் கேளுங்கள்என்றுமலர்ந்த முகத்துடன் அமிர்ததாரைபோல்உரைத்தருளியதைக்கேட்டு பதஞ்சலி வியாக்கிரபாதரிருவரும் ஆனந்தபரவசர்களாய்கேட்கவேண்டியவரங்கள்இன்னதென்றறியாதுஒருவர்க்கொருவர் முகத்தைப்பார்த்துக் கொண்டிருக்கும்போது நெடுநாள் தவஞ்செய்து தேஜஸில் உயர்ந்தவியாக்கிரபாதர் அஞ்சலிபந்தனஞ் செய்து ஓ நாதனே! நான் தேவரீரது சரணங்களில் முந்திசெய்த பூஜையையும், இனிச்செய்யப்போகிற பூஜையையும் அங்கீகரித் தருளல்வேண்டும் என்றுபலவாறு வந்தித்து நின்றனர். பிறகுசிவானுக்கிரகத்திற்குரிய பதஞ்சலியானவர் நமஸ்கரித்து ஓதேவனே! உலகத்திலுள்ள பிராணிகளுடைய மனது உம்முடைய தியானத்தில் சலனமற்று நிற்றல்வேண்டும். தேவரீரது தாண்டவ ஸ்மரணத்தால் ஜீவகோடிகளின்காமக்குரோதாதிகள்நீங்கல்வேண்டும். சகலமானவர்களும் ஆனந்தத்தாண்டவத்தையே அலங்காரமாகவுடையதேவரீரது சரணத்தையே எக்காலத்திலும்வந்தித்தல்வேண்டும்.எனக்கும்வியாக்கிர பாதனுக்கும், மற்றுமுள்ள ரிஷிகளுக்குந்தேவரீருடையதாண்டவ தரிசனத்தில்ஓர்பொழுதும் ஒழிவுவாராது மிகுந்தஆசையுள்ளவர்களாக ஆகவேண்டும் இந்தவுலகத்திலுள்ள எவ்லோரும் அற்புதமாகிய தாண்டவதரிசனத்தை அனுபவித்து நிராமயர்களாய் தாண்டற்கரிய பவக்கடலைத்தாண்டி அன்னையின் ஸ்தன்யபானஞ்செய்யாது இருத்தல்வேண்டும். தாண்டவத்தைத தரிசித்தவுடன் சூரியனைக்கண்ட இருட்கூட்டம்போல பாவங்களெல்லாம்விலகிவிடல்வேண்டும். அபீஷ்டங்களை எல்லோரும் அடைதல்வேண்டும். இந்தஞா

னசபையில் சிவகாமசுந்தரியுடன் ஆனந்தத்தாண்டவ தரிசனத்தை இவ்விடத்திலேயே எல்லோரும் எக்காலத்தும் பார்த்துக் களிக்கும்படி பிரத்தியக்ஷமாயிருந்து அனுக்கிரஹித்தல் வேண்டும்என்று சிற்சபேசனை நமஸ்கரித்து உலகத்தின் விருத்திக்காக கேட்டனர். உடனே பரமேசுவரரும் மிகுந்ததயையுடன் உங்கள் அபீஷ்டப்படி வரங்களைத்தந்தனம் என்று திருவாய்மலர்ந்தருளலும், மகரிஷிகளிருவரும் ஆனந்த விசேடத்தால் பகவானுக்கு நம்மிடத்திலிருக்கும் தயவைப்போல மற்றொருவரிடத்தும் இராதென்று குதூகலசித்தராய்க் கூத்தாடினார்கள். அதுகண்ட மற்றவர்களும் நிர்த்தனஞ்செய்தார்கள் உடனே தேவர்கள் துந்துபிபடித்தார்கள் பின்பு பதஞ்சலிவியாக்கிரபாதரிருவரும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து மஹேசுவரரைப் பார்த்து முன்பு தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய அற்புதச்சிதம்பரத்தை எங்கள்நிமித்தியமாய் எல்லோரும் பார்க்கும்படி திருவருள் செய்யவேண்டும் என்று பிரார்த்திக்கவும், தயாளுவாகிய பகவான் சொல்லுகின்றனர். நீங்கள் கேட்ட சிதம்பரம் ஞானமயமென்றும், என்னைவிட்டு எப்பொழுதும் விலகுகிறதில்லையென்றும் லோகோபகாரமாய்ச்சொல்லிய உபநிடதத்தின் அர்த்தத்தையறியுங்கள். விமலாகிருதியான நாம் சரீரத்தையுடைய ஆத்மாவினிடத்தில் எப்படி விளங்கிவருகின்றோமோ அவ்விதமாகவே பிரபஞ்சதேகமாகியசிதம்பரத்தில்விளையாடுகின்றோம். அந்தஞானசுவரூபத்தைச்சித்தென்று பரியாயனமாவாய் அறிஞர்கள் சொல்லுகின்றார்கள். சைதன்னியரூபமாகிய சித்தினுடைய அந்தரம் எதுவோ அதுவே அம்பரம். ஆதலால் பூமியின் இருதயத்திலுள்ளதென்றும், புண்டரீகத்தின்மத்தியிலுள்ளதென்றும் தப்பிரமென்றும், விபாபமென்றும். ககனமென்றும் சொல்லப்படுகின்றன. எந்த இடத்தில் விஷ்ணு பார்த்த நிருத்தனத்தை உமையவளோடுகூடி உங்கட்குச் செய்கின்றோமோ அந்த இடமே சிதம்பரம் என்று அறியுங்கள் என்று அனுக்கிரகித்தலும், பகவான் உபதேசித்ததைக்கேட்டு ஞானசபை இருக்குமிடத்தைநிச்சயமாய்த் தெரிந்துக்கொள்ள அபேக்ஷித்து நாதனைவந்தித்துத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய ஞானசபையானது எங்கள் கண்ணுக்குப்புலப்படாததால் அதுஎவ்விடமிருக்கின்றது அனுக்கிரஹித்தல் வேண்டுமென்று வணக்கத்துடன் பிரார்த்திக்கவும், வணங்கினோர் வருத்தங்களைத்தீர்த்தருளுஞ் சிவபெருமான் தேவர்களைப்பார்த்து, வேதாகமங்களிற்பிரசித்தமாகிய சுவர்ணமயமானசபையொன்றிருக்கின்றது. அம்மகாசபையை தேவர். அசுரர், மனுஷியர் முதலானவர்களும்அறியமாட்டார்கள். அச்சபையை முனிசிரேஷ்டர்கள்சித

ம்பரமென்று சொல்லுகிறார்கள். அதற்கே மகாசபையென்று பரியயாயமாகப் பெயர்வழங்குகின்றது என்று உரைத்தருள நிருத்தபூமியாகிய சிதம்பரத்தைக்குறிப்பாகக்காண்பித்தனர். உடனேசகலமான தேவதைகளும், பதஞ்சலி வியாக்கிரபாதரும், திருஸகவிரமுனீசுவரர் முதலியரிஷிகளும் சாம்ப பரமேசுவரர் அதிரகசியமாய் உபதேசித்தருளிய தாண்டவபூமியை எல்லோரும்பிரதக்ஷிணம்பண்ணி நமஸ்கரித்தார்கள்.

பின்பு தேவர்கள் உலகத்தின் நன்மைக்காகஅச்சபைக்குச்சுவர்ணபட்டங்கள் கட்டிப் புதுப்பித்தார்கள்மேருபர்வதமானது தன்னைச்சூழ்ந்தபருவதங்களைத் தமக்குச்சமானமாகச் செய்வதைப்போலஇந்தச்சிதம்பரமும் தேவர்களால் நிர்மாணஞ்செய்யப்பட்ட தனதுபஞ்சக்குரோதங்களையுஞ் சமமாகச் செய்துக்கொண்டிருப்பதால் அப்பஞ்சக் குரோதங்களோடு கூடிய தில்லவனத்திற்செய்கிற தானம்,யாகம், ஹோமமெல்லாம் ஒன்றுகோடியாக விசேடபலன்களைக் கொடுக்கின்றன. இந்தச்சிதம்பரக்ஷேத்திரத்திலேயே மனிதர்களின் சர்மநேத்திரங்களுக்குளப்போதும் புலப்படும்படிபிரகாசித்துக்கொண்டு வியாக்கிரபாதராலும், பதஞ்சலியாலும்,தேவர்களாலும் முனிவர்களாலும் துதிக்கப்பட்டுத் தேவியுடன் அனவரதத்தாண்டவஞ் செய்துவருகின்றார். பரமேசுவரர் தாண்டவஞ்செய்துவருபோது சரணாரவிந்தங்களில் அணிந்தநூபுரங்களின் சப்தத்தைக்கேட்டுமிருகங்கள் பக்ஷிகளெல்லாம் அருகில் ஓடிவந்துஆகாரத்தையுஞ்சஞ்சாரத்தையும் மறந்துஒன்றுக்கொன்று இருக்கும்சத்துருத்தன்மையையும்விட்டு க்ஷேத்திரவைபவத்தால் சிறிது நாட்களில் ஞானத்தைப் பெற்றுகடினமான தபஞ்செய்து பதஞ்சலியடைந்தபலனையடைந்ததுகள். இவ்விதமாகப் பசுக்கள் முதலிய சகல ஜந்துக்களும்மனோசுத்தியடைந்து ஆனந்தத்தாண்டவதரிசனஞ்செய்வதைக்கண்டு சிவகணத்தலைவர் சிலாதிமுனிவரின்புத்திரராகியநந்திதேவரைப்பார்த்து ஓசுவாமீ! தேவர்களுக்கு துர்பலமாகிய நமது நாதருடையநிர்த்தனமானது அருந்தவம்புரிந்த நாராயணனால் பார்க்கப்பட்டது. அதை பசுமுதலிய சர்வஜந்துக்களும யாதொரு வருத்தமின்றித்தினந்தோறும்பார்க்கும்படிக்கு எந்த துராத்துமாவான தபோதனன் வரங்கேட்டனன் அவனைத் தண்டித்தல்வேண்டும் என்று சொல்லலும், அதைக்கேட்ட நந்திதேவர் புன்னகைகொண்டு காருண்ணியசமுத்திரராகிய பகவான் லோகானுக்கிரஹத்திற்காக பதஞ்சலிவியாக்கிரபாதரின் தவத்தினல்சந்துஷ்டராகி அவரவரதுமனோபீஷ்டங்களைப் பூர்த்திசெய்து வைததிருக்கின்றனர். அதனால் பிரமாதி தேவர்களு

ம், பிசாசர்களும், பிராமணர் முதலிய புலேயர் இறுதியாகியமனிதர்களும், மிருக பக்ஷி முதலிய சர்வஜந்துக்களும், தரிசனமாத்திரத்தால் முக்திபடையுமட்டும் பகவானுடைய பிரசாதத்திற்கு விக்கினஞ் செய்யாதீர்கள் இவ்வித வரங்கேட்ட பதஞ்சலியினிடத்திலே கோபங்கொள்ளாதீர்களென்று விஷ்ணு முதலிய தேவர்களாலும்மறுக்கக்கூடாத ஆக்ஞையை உடைய நந்திதேவர் உரைத்தவசனத்தைக் கேட்டசிவகணங்கள் சிவப்பிரேமையால் கோபத்தைமுழுதும்விடாதிருப்பதை நந்திதேவர் அறிந்து அவர்கள் மனதுக்கும் வருத்தமில்லாதிருக்கச் செய்யவேண்டுமென்று சிந்தித்து ஓசிவகணசிரேஷ்டர்களே! அநேகம் பிரமாண்டங்களுக்கும் நாதராகிய தேவதேவர் தில்லவனத்தில் உமையவளோடு நாட்டியஞ்செய்வதால் இராஜோபசாரஞ்செய்யவேண்டி இருக்கின்றது அதன்பொருட்டுத் தேவதன்மையைக்கொடுக்கும் அமுதத்தைக் காப்பதுபோலநாலுபக்கங்களிலும் காவல்வைத்தல்வேண்டும் என்று துவாரரக்ஷகராகிய நந்திதேவருரைத்தலும் சிவகணத்தலைவர்கள் சுவாமீ! எல்லா ஜந்துக்களும் பார்த்துஆனந்தத்தை யடைதல் வேண்டி நிர்த்தனஞ்செய்யும்சர்வசுதந்தரரின் இச்சையையார் தடுக்கவல்லவர்கள். தேவரீர் ஆஞ்ஞையிருக்கும் பக்ஷத்தில் எந்த வேலையை இடினும் செய்து முடிக்கின்றோம். நான்குபக்கங்களைக் காத்தற்குரியவரையும் இடத்தையும், தெரிசிப்போர்க்குரிய காலங்களையும் ஆஞ்ஞாபித்தல் வேண்டுமென்று விஞ்ஞாபித்தலும், நந்திகேசுவரர் சொல்லுகின்றனர். கணங்களுக்குள்முதன்மையானவர்கள் சபையையும், அதற்கடுத்த இரண்டாவது பிராகாரத்தைப் பூதங்களும், மூன்றாவது பிராகாரத்தைப்பிசாசர்களும், நான்காவது பிராகாரத்தைக் காளியும், ஐந்தாவதுபிராகாரத்தை பைரவர் முதலானவர்களுங் காத்தல்வேண்டும் என்று காவல்களை யேற்படுத்தி தேவர்கள் காலையிலும், மத்தியானத்திலும், சித்த கந்தர்வ யக்ஷர் முதலானோர் மாலையிலும், தேவஸ்திரீகள் முந்தியஇரவிலும். மனிதர்கள் மேற்கூறிய எக்காலங்களிலும் தரிசிக்கவும்பிந்திய இரவாகிய இரண்டு சாமத்திலும் பகவான் சுவேச்சா லீலையாய் வீற்றிருக்கவும், காலங்களை ஏற்படுத்தினர். பின்புஇந்திரன்முதலிய தேவர்கள் வியாக்கிரபாதர் திருஸகவிர முனீசுவரர்கள் இவர்கள் எல்லோரும் பதஞ்சலி பகவானைப்பார்த்து உம்முடையசேர்க்கையினால் நாங்களெல்லோரும் நடனபதியின் பரமானந்தத்தாண்டவத்தைப் பார்த்தோம் என்று அடிக்கடி பலவாறு புகழ்ந்து இந்த உத்தமமான தில்லவனத்திலேயே எப்பொழுதும் வசிக்கஎண்ணங்கொண்டு தனித்தனியே ஆசிரமங்கள் அமைத்து அவரவர்களும்தங்கள்

பேரால் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து முக்காலங்களிலும் மணமுள்ளமலர்களால்அர்ச்சித்து ஆனந்தத்தாண்டவ ரசத்தை இடைவிடாதுபானஞ்செய்து அவ்விடத்திலேயே நித்தியவாஸஞ்செய்தார்கள்.

பதினெட்டாவது அத்தியாயம்-முற்றிற்று.

---

## பத்தோன்பதாவது அத்தியாயம்.

### பிர்மா யாகஞ்செய்ய அந்தர்வேதிக்குத் தேவர்களையும் திருஸகஸிர மூனீசுவரர்களையும் அழைத்துப்போதலைக் கூறியது.

கேட்டீர்களோ நைமிசாரண்ணிய வாசிகளான மகரிஷிகளே! இப்படி நெடுநாள் தில்வவனத்திலேயே இந்திராதி தேவர்கள் வசித்துவருகையில், சத்திய லோகாதிபதியாகிய பிரமா யாகஞ்செய்ய வேண்டுமென்று நினைத்துத் தன்பரிவாரத்தோடு கங்காநதிக்கரையில் அந்தர்வேதியென்னும் ஸ்தலத்தில் விதிதவறாது விசாலமான வேதியும் குண்டங்களும் அமைந்துயாகத்திற்குவேண்டிய சம்பாரங்களையுஞ் சேர்த்துப் புண்ணியதினத்தில் தீக்ஷை செய்துகொண்டு அவிர்ப்பாகங் கொடுத்தல்வேண்டி இந்திராதி தேவர்களை அழைக்கவும், தேவர்களொருவருக்கும் அவிர்ப்பாகத்திற்கு விருப்பமில்லாமையால் வராதிருக்கக்கண்டு சதுர்முகன் இது என்ன ஆச்சரியம்! நாம் வருந்தியழைக்கவும் ஒருதேவதையும் வரக்கண்டிலமென்று ஆலோசித்து ஞானதிருஷ்டியினாற் பார்க்கும்பொழுது தேவர்கள் தில்வவனத்தில் வசிப்பதைஅறிந்து ஞானமாகிய சமுத்திரத்திற்குச் சந்திரன்போன்ற தமது குமாரனாகிய நாரதனைப் பார்த்து தேவர்களெல்லோரும் தில்வவனத்தில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அழைத்துவந்தாலன்றியாகம்முடிவுபெறமாட்டாதுஎன்றுசொல்லி நாரதனை அனுப்பவும்; அவன் தில்வவனத்தை வேகமாய் அடைந்து நடராஜமூர்த்தியை நமஸ்கரித்துப் பிராத்தித்து பகவானுடைய சமீபத்திலேயே ஆநந்த பரிதர்களாய் வசித்துக்கொண்டிருக்குந் தேவர்களைப் பார்த்து நாரதமுனி சொலலுகின்றனன் ஓ தேவர்களே! பத்மோத்பவராகிய பிரமதேவர் தமது யாகத்திற்காக உங்களை அழைத்துவரும்படி என்னை யனுப்பினர்என்று பலவாறு வந்தித்து வரவேண்டுமென்று பிரார்த்தித்ததைக்கேட்ட சிவபக்திமிகுந்த தேவர்கள் சிரித்து ஆனந்தத்தாண்டவ அமுதத்தைப் பானம்பண்ணி பூர்ணதிருப்தி யடைந்திருக்கும் எங்களுக்கு மோக்ஷத்திலும், சுவர்க்கத்திலும், அவிர்ப்பாகத்திலும் சிறிதும் ஆசையில்லையென்று நாரதனைப் பார்த்துக் கூறலும், நாரதன் இவர்கள் வரமாட்

டார்களென்று நினைத்துத் திரும்பிப் பிரமாவிடஞ்சென்று தேவர்கள்சொல்லியதை யுரைத்தலும், பிரமதேவர் தாமேபோய்அழைத்து வரல் வேண்டுமென்று தில்லவனத்திற்குச் சமீபத்தில் யாகதீட்சையுடன் வருகிற பிர்மாவைக்கண்ட தேவர்கள் உடனே எதிர்சென்றழைக்கவும், அவர்களுடன் சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து சபேசனை வந்தித்து தெரிசித்து மூலஸ்தான மூர்த்தியையும் பூசித்து வியாக்கிரபாதருடன் அவரது ஆசிரமஞ்சென்று அதற்கு இருபக்கங்களிலும் இந்திராதி தேவதைகள் வசிப்பதைக்கண்டு அஞ்சலிபந்தனஞ் செய்து ஓ இந்திரன் முதலிய தேவர்களே! யான்யாகஞ்செய்வதற்குச் சங்கற்பித்திருக்கிறேன், அந்தயாகத்தில் ஹோமஞ்செய்த அவிர்ப்பாகத்தைநீங்களெல்லோருங்கிரஹித்துக்கொள்ளல்வேண்டுமென்று வணக்கத்துடன் இனிமையாகச் சொல்லவும், தேவர்கள் பிரமதேவருக்கு உத்தரஞ் சொல்லாது தலைகுனிந்து நின்றார்கள். அவர்களின் மனோநிச்சயத்தைத் தெரிந்த பிரமதேவரும் தெரியாதவர்போல் இந்திரனை நோக்கி தேவர்களுடைய ஸ்திதியைநாரதனால் முன்னம் கேட்டிருந்தபடி இப்பொழுதுங்கண்டு தெரிந்துக்கொண்டேன் இந்தவிஷயத்தில்உன் மனம்யாது? நீ என்னசெய்யப்போகின்றாய் என்று பத்மோத்பவர் வினவலும், வச்சிரதரனாகிய இந்திரன் பயந்து சிருஷ்டிகர்த்தர்களுக்கெல்லாம் பதியாகிய பிரபுவே! நாங்கள் ஒருஅபராதமும்செய்யவில்லை. ஆனந்தத்தாண்டவ சமுத்திரத்தில் மூழ்கிஇருக்கும் எங்களுக்கு சுவாதிகாரத்திலும் ஆகாரத்திலும் விளையாட்டிலும் மனஞ்செல்லவில்லை அதனால் அழைத்தும் நாங்கள் வரவில்லையென்கிற குற்றத்தைப்பொருத்தருளல்வேண்டும் தேவரீரால் என்ன ஆஞ்ஞை செய்யப்படுகிறதோ அதை இப்பொழுதே செய்கின்றோமென்றுரைத்த இந்திரன்வாக்கியத்தைக்கேட்ட வியாக்கிரபாதர் பிரமாவைப்பார்த்து இந்திரன் சொல்லுவதெல்லாம் உண்மைதான் என்று சொல்லி ஆனந்தத்தாண்டவ தரிசனத்தைவிட்டு விலக மனமில்லாத தேவர்கள் தங்களுடைய அம்சங்களால் யாகத்தில் தங்கள் தங்கள் அவிர்ப்பாகத்தைப் பூசித்தும் இவ்விடத்தில் ஆனந்தத்தாண்டவத்தைத்தரிசனஞ்செய்துக்கொண்டுஇருக்கட்டும். மகாதேஜசுபொருந்திய திருஸகஸ்ர முனீசுவரர் தம்மோடுகூடவே சென்று தாம்செய்கிறயாகத்தில் ஸதஸ்ஸியர்களாக இருந்துபூர்த்தி செய்வார்கள் என்று வியாக்கிரபாதர் உரைத்ததைக்கேட்ட இந்திரன் முதலாகிய தேவர்கள் வியாக்கிரபாதரை மிகவும்புகழ்ந்துபிரமதேவருடன் யாகத்திற்குச் செல்லுதற்கு எண்ணங் கொண்டார்கள். பின்பு வியாக்கிரபாதரை பிரமதேவர் கடாக்ஷத்தால் அனுக்கிர

ஹரித்து இந்திரன் முதலிய தேவர்களையும் திருஸகவிர முனீசுவரர்களையும் அழைத்துக்கொண்டு அந்தர் வேதியிலுள்ள யாகசாலை அடைந்தனர்.

பத்தொன்பதாவது அத்தியாயம்-முற்றிற்று.

---

இருபதாவது அத்தியாயம்.

## சிம்மவர்வன் சரித்திரம் உரைத்தது.

கேட்டீர்களோ நைமிசாரண்ணிய வாசிகளான தபோதனர்களே! இப்படி இருக்கையில் மகா யசோவானாகிய சிம்மவர்மனென்னும் அரசன் தில்வத்வனதில்பெருந்தவஞ்செய்யவேண்டிவந்தனன் என்று சூதாசாரியர் சொல்லலும், அதைக்கேட்ட முனிவர்கள்சிம்மவர்மனென்று பிரவித்தியடைந்த அரசன் யாவன்! எதற்காகத் தில்வவனத்தில் தவஞ்செய்ய வந்தனன்? அதை உரைத்தருளல்வேண்டுமென்று பிரார்த்திக்க, பௌராணிகோத்தமராகியசூதமகாமுனி சொல்லத்தொடங்கினர். முற்காலத்தில் சுரர்களாலும் அசுரர்களாலுஞ் சேவிக்கப்பட்ட புஹேசுவரர் மாயையைநான்குவிதமாகப் பிரித்து லோகானுக்கிர லீலையைச் செய்தபின்பு அவ்வுலகங்களைபிரளயவிளையாட்டால்சம்ஹாரஞ்செய்துபிரபுவாய்த்தனித்திருந்தனர். அப்பொழுது இவ்வுலகம் பயங்கரமாயும், இவ்விதமென்று அறியவொண்ணாததாயும், நிர்ணயிக்கக் கூடாததாயும், யாவும் சுழுத்தியடைந்தது போன்றதாயும் இருந்தது இவ்விதமிருக்கையில் பெரிதாகிய ஸம்ஹாரகாலத்தில் பரமேசுவரர் ருத்திரரூபியாயிருந்துசண்டதாண்டவஞ் செய்தருளினர். பின்பு சுவதந்திரராகிய பகவான் ஸம்ஹாரத்தின் முடிவிலே இச்சாசத்தியைக்கொண்டுதமது சக்திகளில் சுவர்க்கத்தை ஸ்தாபனஞ்செய்து தாண்டவவெளியில் மகாமாஸயையைப் பிரகாசிக்கப்பண்ணி நாதாதிபஞ்சதத்துவங்களையுஞ் சிருஷ்டித்து பின்பு சுத்த தத்துவாவையும், பரை,பைசந்தி, மத்திமை,வைகரியென்னும் நான்குவித வாக்கையும் சிருத்டியாதி கிருத்தியங்களோடு கூடியதாயும், சிவப்பிரகாசமாயும், மூன்று மாத்திரையைலக்ஷணமாயுமுள்ள பிரணவத்தையும், மாதருகாவர்ணங்களையும்,பிறகு வியாஹ்ருதிகளையும், அதுகளிலிருந்து லோகமாதாவாகியகாயத்திரியையும், அக்காயத்திரியிலிருந்து சகலவேதங்களையும், அவைகளிலிருந்து சப்தகோடி மகாமந்திரங்களையும் சிருஷ்டித்துப் பின்பு அசுத்தாத்துவாவிலிருந்து தத்துவவுணர்வையும், சராசரங்களோடு கூடிய கலாதிதத்துவங்களையும்சிருட்டித்துஜீவாத்ம சம்பந்தமாகிய

புண்ணியபாவங்களைக் காலத்தினளவே புசிக்கும்படி செய்யத் தம் முடைய சரீரத்திலிருந்து பிரமாவையும், விஷ்ணுவையுஞ்சிருட்டித்து அவர்களுள் பிரமாவுக்குச் சிருஷ்டியையும், விஷ்ணுவுக்குப் பரிபாலிப்பதையும், அதிகாரங்களாகக்கொடுத்துஅவர்களுக்குவாசஸ்தானமாக மகமேருவையும் திருப்பாற்கடலையும் ஏற்படுத்தி தேவர்களை நோக்கித் திருவாய்மலர்ந்தருளுகின்றனர். யாகங்களுக்கு உபயோகமாகிய வேதமந்திரங்களையும், அவைகளை அத்தியயனஞ்செய்யப் பிராமணர்களையும்; யாகங்களைப் பூர்த்திசெய்யப் பசுக்களையும் உற்பத்தி செய்தோம். அப்பசுக்களிலிருந்து உண்டாகும் அவிசுகளாலும், வேதமந்திரங்களாலும், எந்தப் பிராமணர்கள் எனதுவடிவமாகிய அக்கினியில் நமது திருப்திக்காக ஹோமஞ்செய்கின்றார்களோ அவர்கள்இதரர்களால் அடைதற்கரிய சுவர்க்கத்தைச்சந்தேகமில்லாது அடைகிறார்கள்.

எமது ஆகமங்களில் விருப்பமுற்ற சரியை, கிரியை, யோகம் என்பவைகளைக் கிரமமாய் அனுஷ்டிப்பவர்கள் ஸாரூப்பியத்தைப் பார்க்கிலும் மேலான முக்தியையடைகிறார்கள். எந்தப் பிராமணர்கள் வேதஞ்சொல்லிய யாகத்தைப் பலபோகவிருப்பமின்றிநமக்கு அர்ப்பணமாகச் செய்கிறார்களோ அவர்கள் மூன்றுவித முக்தியையும் நிச்சயமாய் அடைகிறார்கள். வேதாந்த மார்க்கத்தைஅனுஷ்டித்துக் கல்மஷங்களைப்போக்கி ஞானிகளாயிருப்பவர்களும், எமது ஆகமத்திற்கூறிய ஞானபாதத்தில் நிற்பவர்களும், மிகவும்கிடைத்தற்கரியசாயுச்சிய முத்தியையடைகின்றார்கள். வேதாகமங்களிற்கூறியகர்மமார்க்கத்தையும், பிரமமார்க்கத்தையும்அனுஷ்டிக்காதபாவிகளைச் சாஸ்திரங்களிற் கூறிய நான்குவிததண்டனைகளாலும் தண்டிப்பதற்கும்; வேதாகமங்களிற் சொல்லியசாஸ்திரங்களைக்கற்பிப்பதற்கும், அவைகளைப் பிரசித்தி செய்வதற்கும் அவைகளிற்கூறிய தர்மங்களைத் தாபிப்பதற்கும், அவைகளில் அதிகாரமில்லாதவர்களைநிவர்த்திப்பதற்கும், பிரஜைகளைத் துன்பமில்லாது காத்தற்கும்உரிய அரசன் ஒருவன்வேண்டும். அவனே துராத்துமாக்களைச்சிக்ஷிப்பான். அந்த அரசனே காலத்திற்குக் காரணம் என்றுரைத்துசந்திரசூடராகிய மகேசுவரர் உடனேசர்வ லோகாதிகாரத்திலும்சக்தனாகிய ஒருவனை ஏற்படுத்தநினைத்துசூரியதேவனுடையகுமாரர்களாகியும், நிக்கிரகாநுக்கிரக கர்த்தர்களாயும், தர்மத்தைநிலைநிறுத்தவல்லவர்களாயுமுள்ள தர்மராஜாவையும், வைசுவத மனுவையும்அழைத்து அவர்களுள் தர்மராஜாவுக்குத் தண்டாதிகாரத்தைக் கொடுத்துத், தெற்குத்திக்கு அதிபதியாகக் கற்பித்து வைவசுவதமனுவையும்அர

சனுக்குரியபூஷணங்களால்அலங்கரித்துக்கிரீடதாரணஞ்செய்வித்து அரசர்களுக்குள் முந்தினவனுக ஏற்படுத்தித் தேவர்கள் கையில் ஒப்புவித்தனர். சூரியதேவரின் தவப்பயனும் மகாபாக்கியசாலியாயும் இருக்கிற அவனை இராஜோபசாரத்துடன் மேருபர்வதத்தின் சிகரத்திற்கு அழைத்துச் சென்று மகேந்திரனது சபைக்கு சமமாகிய சிம்மாசனத்தில் வீற்றிருக்கச்செய்ய, அவன் ஏழு சமுத்திரங்களால் சூழ்ந்த பூமியை ஆண்டுக்கொண்டிருந்தனன். பிறகு அவனுக்குச் சமானபராக்கிரமங்கள் பொருந்தி உலகத்தின் நன்மை தீமைகளை அறிந்து அரசுசெலுத்திய நான்கு மன்னர்கள் காலஞ்செல்ல, பின்பு கங்காப்பிரவாகம்போன்ற சுத்தமானகீர்த்தியடைந்து லோகேந்திரனென்னும் பேர்பெற்ற ஐந்தாவது மனுவானவன் உலகத்தை யாண்டுவருகையில் அவன் குணவதிகளான இரண்டு மனைவிகளை விவாகஞ்செய்துக்கொண்டனன் அவர்களில் ஜேஷ்ட பத்தினியிடத்து சிம்மவர்மனெனும் ஓர் குமாரனும், இளையமனைவியிடத்தில் சுமதியென்றும்,வேதவர்மனென்றும் புண்ணிய லக்ஷணம் அமைந்த இரண்டு குமாரர்களும் ஜனித்து வளர்ந்து வருகையில் பிதாவாகிய லோகேந்திரன் மண்ணுள்வதை வெறுத்துத் தவஞ்செய்யக் கருதி தனது ஜேஷ்டகுமாரனை அழைத்துப் புத்திரசிகாமணியே! நான் தாங்கிய இத்தரணியை நீ தாங்கிக்கொண்டு என்னை ஆத்தமலாபம் அடைதற்குரிய தவஞ்செய்யும்படி அனுப்புவாயாக வென்றுரைத்தலும், சிம்மவர்மன்கேட்டு பிதாவை நமஸ்கரித்து வணக்கத்துடன் அஞ்சலிபந்தனஞ்செய்து ஓ ஐயனே! தம்முடைய ஏவல்களைச் செய்யத் தகுந்தவர்களாயும், ராஜ்ஜியத்தை வசிக்கச் சக்தியுள்ளவர்களாயும், குணவான்களாயும், ரூபவான்களாயும் இருக்கின்ற எமது தம்பிகளிடத்தில் இந்த ராஜ்ஜிய லக்ஷ்மியை ஒப்புவித்தல் வேண்டும். நான் அரசாளுவதற்கு உரியனல்லேன். வனத்திற்சென்று தவஞ்செய்ய இச்சித்திருக்கின்றேன். எனக்கு உத்திரவு கொடுத்தனுப்புதல் உசிதமென்று பன்முறை பிரார்த்தித்தனன். இதைக்கேட்ட பூபதியும் புத்திரனுடைய மனதை யறிந்து மிகுந்த வியாகூலசித்தனாய் ஓ புதல்வனே! எனக்கோ வயதுசென்றுவிட்டது. உனது கனிஷ்டர்களோ சிறுவர்களாயிருக்கின்றார்கள் இவ்வித மிருக்கையில் நீ தவஞ்செய்வதற்குச் சென்றால் நமக்குள் அடங்கிய அரசர்கள் சமயம்பார்த்து இராச்சியத்தை அபகரிப்பார்கள். அன்றியும், நம்முடைய வம்சத்தில் ஜேஷ்டக்கிரமமாய் அரசு செலுத்துவது முறைமையாதலால் இந்த இராச்சியத்தைப் பரிபாலனஞ்செய்வதே உனக்குப் பெருந்தவமாகும் என்று பிதா சொல்லிய காரண மமைந்த

வாக்கியத்தைக்கேட்டு; சிம்மவர்மன், சுவாமி! நான் இவ்வரசை வகித்து உலகைக் காப்பதிலும் காட்டிற்சென்று தவஞ்செய்தல் மிகுந்த கீர்த்தியைத் தங்களுக்குக் கொடுக்கும். அன்றியும், ஒரு நிமிஷமேனும் இப்புவியைத் தாங்கத் சக்தனல்லேன். அனேககாலந் தவஞ்செய்வதற்கே மிகுந்த வல்லமையுள்ளேன். இதனால் தடையின்றிப் பிரீதியுள்ள மனதுடன் அநுமதிகொடுத்து அனுப்புதல் வேண்டுமென்றுரைத்தலும், அரசன்மிகுந்த துக்கத்துடன் தலைகுனிந்திருந்தனன். அதனையே உடன்பாடாகக்கொண்டு பரமசிவத்தை நினைத்துத் தனியே புறப்பட்டு கங்காசாகர சங்கமத்தில் ஸ்நானஞ்செய்து அதற்குச் சமீபத்திலிருக்கும் வங்கதேசத்தை யடைந்து மறுநாள் யாவகம் என்னும் நகரத்திற்சென்று அங்கிருந்து விஸ்தாரமாகிய ஒட்டகதேசம் வந்து அங்கமர்ந்த பீமநாதரை நமஸ்கரித்து, அதைவிட்டுச் சம்பத்துமிகுந்த ஆந்திரதேசம்போய் அவ்விடத்தில் ஸ்ரீபர்வதத்தை வந்தித்து, அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் பக்தியுடன் ஸ்நானஞ்செய்து பின்பு ஸ்ரீகாளகஸ்தியை யடைந்து பரமேசுவரனை வணங்கி, அவ்விடமிருந்து வனத்தின் வழியாய் மெதுவாய் நடந்து வருகையில் வில்லைக் கையிற்பிடித்த ஒரு வேடனைக்கண்டு அவனை அழைத்துச் சமீபத்திலுட்காரச்செய்து பூபதியாகிய சிம்மவர்மன் சொல்லுகின்றனன். ஓ வனரசனே! இந்தப்பர்வதத்திலும் இந்தவனத்திலும் ஏதாவது ஆச்சரியங்களிருக்குமாயின் அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டலும் கிராதன் அரசனை வணங்கிக் குளிர்ந்த நிழலமைந்த ஒருமரத்தின் அடியிலுட்கார்ந்து தனுர்பாணத்தோடு கூடிய வேடன் கால்நடையால் வருந்திய சரீரத்தை யுடைய வேந்தனை நோக்கிச் சொல்லுகின்றனன்.

இருபதாவது அத்தியாயம்-முற்றிற்று

இருபத்தோராவது அத்தியாயம்.

## சிம்மவர்மன் தில்லவனம் அடைதலைக் கூறியது.

ஓ அரசனே! நான் அனேகம் மிருகங்கள் நிறைந்த இந்தவனத்தில் நாயோடுகூடி மிருகங்களைத்தேடிச் சஞ்சரிக்கின்றவன் இக்காட்டில் நான் இதுவரையில் அறிந்தவிசேடங்களைச் சொல்லுகின்றேன் விருப்பம் இருக்குமாயின் கேட்டல்வேண்டும். அற்புதமான ஒரு யௌவனபுருடன்நாயுடன்கூடித் தினந்தோறும்சஞ்சரிக்கின்றனன், இவ்விடத்தில் விசாலமான தடாகமொன்றிருக்கின்றது. அதின்ஜலத்தை பானம்பண்ணுகின்றவர்கள் கிழத்தன்மை நீங்கிப் பல்லியமா

கின்றார்கள். தாமரை செங்கழுநீர் முதலிய புஷ்பங்கள் நிறைந்த அனேகம் தடாகங்கள் இருக்கின்றன. அவைகள் தம்முடைய ஜலத்தைக் குடிப்பவர்களின் இளைப்பைநீக்குகின்றன. இதன்றிவிஸ்தாரமாகிய ஒருவழி இருக்கின்றது. அதின்வழியாய்ச் செல்பவர்களுக்குத் தாம்செல்லும் திக்குகள் தெரியாது மயங்கப் பண்ணுகின்றது. இன்னமொரு மார்க்கத்தில் பெரிதாகிய விருக்ஷமொன்றிருக்கின்றது. அதன் நிழல் அவ்விருக்ஷத்தின் அடியைவிட்டு விலகுகிறதில்லை. மற்றொருவழியிற் சென்றால் அவ்விடத்தில் செல்லுகிறவர்கள்தெரியாது ஓர் நகரத்தின் ஜனங்கள் பேசுவதுபோல சப்தமட்டுங்கேட்கின்றது. இன்னமொரு இடத்தில் பெரிதாகிய ஒருகிணறு இருக்கின்றது. அந்தக் கிணற்றின் நிழலை யார்பார்க்கின்றார்களோ அவர்கள் உடனே அதில் விழுந்துவிடுகிறார்கள். ஒருநாளும் வற்றாத பிரவாகமுள்ள ஓர் நதியிருக்கின்றது அழகுபொருந்திய அந்நதிக்கரையில் குளிர்ந்த நிழலோடுகூடி எக்கால்த்தும் இனிப்புள்ள பழங்களைத்தாங்கிய ஓர் மாமரமிருக்கின்றது. அம்மரத்தின்அடியில் உத்தமமாகிய ஓர் சிவலிங்கம் நெடுநாளாய்க்காணப்படுகிறது. அந்தலிங்கத்துக்குச் சமீபத்தில்கூபரூபமாகிய ஓர்பிலமிருக்கின்றது. அப்பிலத்திலிருந்து தாமரைமலர்போன்ற கண்களையும் பசுமைநிறத்தையும்உடைய ஓர் கன்னிகை மெல்ல நடத்துவந்து காலையிலும் மாலையிலும்பூசிக்கின்றனள். தினந்தோறும் ஒருபுருஷன் குதிரையின்பேரிலேறிக் கையில் அங்குசத்தைப்பிடித்து இந்த ஆற்றில் இறங்குவதைக் காணலாம். கரையேறுகிறதைக் காண்கிறதில்லை இவ்விதமாய் நான்கண்ட அற்புதங்கள் அனேகங்கள்இருக்கின்றன. என்னால் காணப்படாத விசித்திரங்கள்எண்ணிறந்தன என்று சொல்லிய கிராதன் வசனத்தைக் கேட்டபூபதி! அவன் உரைத்த சிவலிங்கமூர்த்தத்தை தரிசிக்கவேண்டி, ஓ கிராதனே! இவ்வனத்தில் மாவடியில் ஓர் லிங்கமிருக்கிறதாகச் சொல்லினையேஅதைநீ எனக்குக் காண்பிப்பதே பெரியஉபகாரம்என்று அரசன்சொல்லலும், மாச்சம்பிரியனென வேடன் உடனே கையிற்பிடித்த வில்லுடன் உயர்ந்த விருக்ஷங்களடர்ந்தஓர்வழியாய்ச்சென்று மரவடிநிழலில் வீற்றிருக்குஞ் சிவலிங்கப்பெருமானை அரசனுக்குக் காண்பித்தனன் அரசனும் பிரசண்ட சித்தனைய் ஆனந்த காரணமாகிய அந்தச் சிவலிங்கத்தின் சமீபத்தைஅடைந்துமிகுந்த பத்தியுடன் நமஸ்கரித்து அதற்குச் சமீபத்திலிருக்கின்றகம்பாநதியில் தினந்தோறும் ஸ்நானஞ்செய்து பரமசிவப் பிரசாதத்தையடைய வேண்டிப்பூசித்துக்கொண்டு அவ்விடத்திலேயே நல்லஆகாரங்களின்றிச் சாமையரிசிக் கஞ்சியைக்குடித்து நெடுநாள்வசித்தன

ன். இவ்வித மிருக்கையில் ஒருநாள் வேடனைக் கன்ஜாடையால்சமீ
பத்திலழைத்து, ஓவனசரனே! நான்இங்கிருந்து தக்ஷிணசமுத்திரம்
வரையிற் சென்று அங்குள்ள ஆச்சரியங்களைக்கண்டு அப்படியேமே
ற்குச் சமுத்திரத்தின் கரையை அடைதற்குமிகுந்த ஆசையுள்ளவனு
யிருக்கின்றேன் வருத்தமின்றிச் செல்லும் மார்க்கத்தைக் காண்பித்
து அவ்வழியே என்னை அதைத்துக்கொண்டு போதல்வேண்டும்என்
மித்திரனேயென்று அரசன் சொல்லவும், அதைக்கேட்ட வேடன்
இக்காட்டின் நடுவே போகும்போது திக்குகள்தெரியமாட்டா இதி
ன் முடிவை ஒருவருங் கண்டதுமில்லை ஓரடிபெயர்த்துவைத்தல்பிர
புவாகிய தமக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கும். ஆதலால் நான்
இக்காட்டிற்சென்று நல்லவழிகளைத்தெரிந்துக்கொண்டுவருகின்றே
ன் அதுவரையில் இவ்விடத்திலேயே வசித்துக்கொண்டிருக்கவேண்
டுமென்று அரசனை வணங்கிவில்லையும்அம்பையும் கையிற்பிடித்துப்
பயமின்றிக் காட்டின்வழியாய் நடந்து சமுத்திரத்தையடைந்தன.
பிறகு அவ்விடமிருந்து புறப்பட்டு வணங்களெல்லாம் சுற்றிப்பார்த்
துச் சிலகாலங்கழித்துத் தன்வரவை யெதிர்பார்த்திருக்கும் அரச
னிடம்வந்து வணங்கித் தான் காட்டிற்கண்ட விசேடங்களைச்சொல்
லுகின்றனன். நான் இவ்வனத்தில் நெடுந்தூரஞ்சென்று நீர்நடத்தற்
குரிய மார்க்கங்களைத் தேடிப்போகும்போது ஒரு விசேடத்தையுங்
காணவில்லை: அதற்குத்தெற்கில்செல்லும்போதுநெடுந்தூரத்தில்ஓர்
நதியைக்கண்டேன். அந்தக்கரையில் விஸ்தாரணமான தில்வவன
மென்றுஓர்வனமிருக்கின்றது. அதனடுவே மலர்ந்தசுவர்ன தாமரை
மலரையுடைய ஒரு தடாகமிருக்கின்றது அதன்தென்கரையில்புலி
யினதுகைகளையுங் கால்களையுமுடைய ஒருமனிதன் நித்திரையினால்
மயங்கினவன்போலிருக்கின்றனன். அவனைக்கண்டு பயந்து திரும்
பிவிட்டேன் என்று வேடன் சொல்லியதைக்கேட்ட சிம்மவர்மன்
உடனே சந்தோஷத்துடன் எழுந்து அவ்விடஞ் செல்ல உத்தேசி
த்து ஓ வனசரா! வியாக்கிர உருவந் தரித்துக்கொண்டிருக்கும்அவ
ரை எனக்குக் காண்பிக்கவேணுமென்று சொல்லி மாவடி நிழ
லில் வசிக்கும் மகேசனை வணங்கி வேடன் வழிகாட்டப் புறப்பட்
டுப் பலநாள் நடந்து தில்வனத்தை யடைந்தனன். அவ்விடத்திழு
ஹேமபத்மதடாகத்தின் சமீபத்திற் சித்திரத்தில் ஜ்வலிக்கின்ற அக்
கினிபோல தவஞ்செய்துக்கொண்டிருக்கும் முனியைக்கண்டு பய
ந்து அவருடைய சமீபத்திற் செல்லாமலும், அவ்விடம்விட்டு வில
காமலும் நின்று தவஞ்செய்துகொண்டிருக்கும் இவரை நாம்
யாரென்றுகேட்டால் சபித்துவிடுவார் என்றுநிச்சயித்துச்சிலநேரம்

அவ்விடத்தே யிருந்து சாந்தமுள்ள அம்முனிவரின் சரீத்தைப்பார்த்து ஆலோசிக்கின்றனன். இந்ததபசியின்சரீரம் மரவுரிதனைந்திருப்பதையும், புரசஞ்சமித்துக்கள் வாடாமல் பாலொழுக இருக்கிறதையும் குசப்புல்லுகள் பசுமையாய் விளங்குவதையும், எடுத்துவைத்த புஷ்பங்கள் மலர்ந்துகொண்டிருப்பதையும் ஜடாபாரங்கள் முத்துப்போன்ற ஜலபிந்துக்களை விடுவதையும் பார்த்தால் இப்பொழுதுதான் ஸ்நானஞ்செய்து தவஞ்செய்யத் தொடங்கினவர்போலக் காண்கின்றது. இவர் தவத்தைவிட்டு உடனே எழுந்திருப்பாரோ அல்லது நெடுநாட்செல்லுமோ என்று அலைந்த மனதோடுகூடி நான் என்னசெய்வேனென்று விசாரமடைந்து வணக்கத்தினும் பயத்தினுஞ் தபோநிதியாகிய அவரை நமஸ்கரித்தனன் அப்போது ஆனந்தமளிப்பதான தாண்டவத்தைத் தியானஞ்செய்வதிலிருந்து விலகி திரிகாலஞானத்தை வகித்து ஆலோசிக்கின்றனர். சூரியவம்சத்தில் வைவசுவத மனுமுதலசென்றுவரும்இக்காலத்தில் கௌடதேசத்தை அரசாண்டு வருகின்ற ஐந்தாவது மனுவாகிய லோககேந்திரன் என்னும்அரசனுக்குள்ள மூன்றுபுதல்வரின்ஜேஷ்டனாகிய சிம்மவர்மன் வந்திருக்கிறதாக அறிந்து தபோநிதியாகிய வியாக்கிரபாதர் கண்விழித்துத் தமது சந்நிதியில் பயந்து அஞ்சலிபந்தனஞ்செய்து நிற்கும் அரசனைப் பார்த்து ஹேசிம்மவர்மனே! க்ஷேமமா என்று கேட்டலும், மிகுந்த சந்தோஷசித்தனாய் அடிக்கடி நமஸ்கரித்து நிற்கும்பொழுது தமது திவ்விய அஸ்தத்தால்சிம்மவர்மனுடைய கையைப் பிடித்து தமது ஆசனத்திற்குச் சமீபத்தினுட்காரவைத்து ஓ சிம்மவர்மனே! நீஒருவனாகத்தனித்துஇப்பயங்கரமான காட்டில் எதற்காகவந்தனை அந்தக்காரணத்தைச் சொல்லவேண்டுமென்று வியாக்கிரபாத மகரிஷி கேட்கலுற்றனர்.

இருபத்தோராவது அத்தியாயம்-முற்றிற்று.

---

இருபத்திரண்டாவது அத்தியாயம்.

## சிம்மவர்மன் ஹிரண்ணிய வர்மனென்றும் பெயர்பெறுதலைக் கூறியது.

உடனே வியாக்கிரபாத மகரிஷியைப் பார்த்து, ஓமுனிசிரேஷ்டரே! கௌடதேசாதிபதியாகிய லோககேந்திரனென்னும் அரசனுக்குமூன்றுபுத்திரர்கள். அவர்களில் நான்முதன்மையானவன். என் தம்பிமார்கள் சூரர்களாயும், லக்ஷணவான்களாயும் இராச்சியத்தை வகிக்கத்தக்கவர்களாயு மிருக்கின்றார்கள். நான் பெரியோர்களின்

அனுக்கிரஹத்தால்பவபந்தத்தைநீக்கிப் பரமானந்தத்தைக்கொடுப் பதாகிய பரமசிவ சரணாரவிந்தத்தை யடையவேண்டுமென்று நினைத்து இராச்சியபாரமாகிய துக்கத்தைமனதுடன் வெறுத்துத்தவஞ் செய்யக்குறித்துத் தனித்தவனாய் இங்குவந்தனன் என்றுசொல்லிய சிம்மவர்மனுடைய வாக்கியத்தைக்கேட்டு வியாக்கிரபாத மகரிஷி துக்கத்தையும் ஆச்சரியத்தையும் அடைந்து சொல்லுகின்றனர். ஓ புத்திமானான சிம்மவர்மனே! நீயேபூபாரத்தை வகித்தற்குரியஜேஷ்டகுமாரன் உன் பிதாவோ மிகுந்த விருத்தர். இவ்வாறிருக்க, எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தவஞ்செய்யக்கருதிப் போந்தது யுத்தமல்லவே என்னலும், சுவாமி! நானோ அரசாளுதற்கு யோக்கியமில்லாதகுற்றமுள்ளவடிவத்தையடைந்திருக்கின்றேன், அதனால்இராச்சியத்தில் வசிப்பதில் இப்போது இச்சையில்லை. என்பிதா சுவர்க்கத்தை யடையினும் என் தம்பிமார்கள் பூபாரத்தை வகிக்கத்தக்கவர்கள். உலகத்தில் துன்பத்தைப் போக்குவிக்கும் மகரிஷியே! என்னை இரக்ஷிப்பதிற் கருணைசெய்யவேண்டும் என்னலும் ஓ இந்த அரசன் தனக்கு இருக்கும் சரீரக்குற்றத்தினால்இப்போது அரசாள மனமில்லை என்று சொன்னமையால் இவனுக்கு அக்குற்றம் நீங்கில் பாகுபலத்தால்அரசாளுவன். சிற்சபேசனுடையகிருபையிருந்தால் இவனுடைய சரீரக் குற்றங்கள் நீங்கிவிடும். சிவகைங்கர்யத்தையும் செய்யச் சக்தியுள்ளவனாவான் என்று சிவஞானத்திற்சிறந்த வியாக்கிரபாதர் சிலநேரம் யோசித்துச்சிம்மவர்மனே! இவ்விடத்தே இருமென்று சொல்லிவிட்டு எழுந்து சப்தசாஸ்திரத்தின் எல்லையைக் கண்ட பதஞ்சலியின் சமீபத்தையடைந்து சந்தோஷத்துடன் சிம்மவர்மனுடைய வரவை விவரமாய் அறிவிக்கவும், அச்சமயம் சிற்சபையில் ஆனந்தத்தாண்டவ தரிசனஞ் செய்யவேண்டிய காலமாதலால் பதஞ்சலிபகவானும் வியாக்கிரபாதருடன் சபைக்குவந்தனர். இவ்வாறிருக்கத் தனியேயிருக்கும் அரசன் மனந்தளர்ந்து மிகுந்த வருத்தமடைந்து ஒருவராலும் தள்ளற்கரிய விதியைஎவர்கள்தான் தன் புத்தியினாலும் மாற்றவல்லவர்கள், இவ்வனாந்திரத்தில் அருமையாய்க்கண்ட மகரிஷியும் எவ்விடமோசென்றனர் என்றுசோர்ந்து சோகமுற்று மரத்தடியிலிருந்தனன். சபைக்குச்சென்று ஆனந்தாமிர்தமுண்ட முனிசிரேஷ்டர்கள் சிம்மவர்மனுடைய வரவைப் பகவானுடைய சந்நிதியில் அறிவிக்கின் கோபிப்பரோபிரசாதிப்பரோ தெரியவில்லை. எவ்வாறிருப்பினும்நாதனிடத்து அறிவிப்பதே நலமென்று நிச்சயித்துக் கருணையுள்ள முனிவரிவரும் நமஸ்கரித்து வேதமந்திரங்களால் துதித்து அரசனுடைய வரவைவிண்ணப்பிக்

கத்தொடங்கினர். ஓ தேவதேவனே! ஐந்தாவது மனுவின் புத்திரனாகிய சிம்மவர்மனென்னும் ஒரு அரசன் தவஞ்செய்வதற்காக எங்கள் ஆசிரமத்தை யடைந்திருக்கின்றான், அதனுக்குத்தாண்டவ தரிசனமளித்து வடிவத்தின் குறையைத் தீர்த்துவைத்து இரக்ஷிக்க வேண்டுமென்று நமஸ்கரித்தார்கள். இதைத் திருச்செவிசாற்றிய கர்த்தன் முனிசிரேஷ்டர்களே! அவ்வரசனது வரவையும் அவனுக்காக நீங்கள்வந்ததினையும் நாமறிவோம். அவ்வரசனுக்கும் உங்களுக்கும் எது இஷ்டமோ அதை இப்பொழுதே அளிக்கின்றோம். அந்தச் சிம்மவர்மனை சிவகங்கை யென்னும்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வித்து எமது சமீபத்தில் அழைத்து வாருங்கள். அதன்பின் எனது சக்தியின் விசித்திரகதியை காணலாம் என்று திருவாய்மலர்ந்தருளலும், அதைக்கேட்ட வியாக்கிரபாதர் பதஞ்சலியுடன் சிம்மவர்மனிடத்தில் வரவும், சுபசகுனங்கண்டு மகிழ்ந்திருக்கும் சிம்மவர்மனைப் பார்த்து மகா பாக்கியசாலியானவுனக்கு அரிபிரமாதியர்க்கும் எங்கட்குங் கிடைப்பதற்கரிதாகிய ஆனந்தத் தாண்டவ தரிசனத்தைப் பகவான் அளிக்கப்போகின்றார். நீ சிவகங்கையென்னுந் தீர்த்தத்தில் சீக்கிரமாய் ஸ்நானஞ்செய்து ஆனந்தத்தாண்டவத்தாற்பிரகாசிக்கின்றபரமசிவசரணாரவிந்தத்தைத்தரிசனஞ்செய்பற்கரியதவத்தினாலெதைப்பெய்வையோஅப்பலத்தைப் பெறலாகும் என்றுகூறியதைக்கேட்ட சிம்மவர்மன்மிகுந்தமகிழ்ச்சியடைந்து உத்தமர்களின் சேர்க்கையால் விளைந்த பலனைப்புகழ்ந்து சிவகங்கையில் இறங்கி ஸ்நானஞ்செய்து எழுந்திருக்கையிற் சமுத்திரத்தில் உதிக்கின்ற பாலசூரியனைப்போல ஹிரணியமான சரீரத்துடன்விளங்குவதை முனிவர்களுங்கண்டு ஹிரண்ணியவர்மனெனப் பெயர்கொடுத்தனர்.

இருபத்திரண்டாவது அத்தியாயம்-முற்றிற்று.

---

இருபத்து மூன்றவதுஅத்தியாயம்.

## ஹிரண்ணியவர்மன் வியாக்கிரபாதருடன் சிதம்பரத்தில் வசித்ததைக் கூறியது.

கேட்டீர்களோ நைமிசாரண்ணிய வாசிகளான முனிசிரேஷ்டர்களே! பின்பு வியாக்கிரபாதர் ஹிரண்ணியவர்மனுக்குக் குறைவற்ற ஆனந்தத்திற்குக் காரணமாகிய திவ்விய பஞ்சாக்ஷர மகாமந்திரத்தை உபதேசித்து வேதங்களால் தேடற்கரியதும்யோகிகளாற் காணப்பட்டதாயும் இருக்கிற சிதம்பரசபையைக் காண்பித்தனர்.

உடனே கருணாநிதியாகிய பகவான் சச்சிதானந்த லக்ஷணமாகிய ஆனந்தத்தாண்டவதரிசனத்தைப் பாலித்தருளினர். புண்ணியசாலியான ஹிரண்ணியவர்மனும் மனோவாக்குக் கெட்டாததாண்டவத்தைத் தரிசித்துமேனிமுழுதும் மயிர்க்கூச்செரிந்து ஆனந்தநீர்ததும்பும் கண்களுடன் நடனபதியாகிய தேவனைத் தண்டம்போல நமஸ்கரித்தெழுந்து அஞ்சலிபந்தனத்துடன் ஸ்தோத்திரஞ்செய்து ஆனந்த பரவசனாய் அரிபிரமேந்திராதிகளாலும் காணற்கரிய நிர்த்தன விபவத்தைத் திருவருளால் தரிசித்தேன். சுவர்ணசபையிற் பதஞ்சலிவியாக்கிரபாதர்களுக்காக ஆனந்தத்தாண்டவஞ் செய்துவரும் தேவரீருடைய கயிங்கரியங்களைச் செய்வதில் நந்திதேவருக்கு ஆஞ்ஞை யளிப்பதுபோல எனக்கும் அருளல்வேண்டும் என்று அரசன் கேட்க, ஓ ஹிரண்ணியவர்மனே! உனது பக்தியினால் மிகுந்த சந்துஷ்டியடைந்தனம். நீ பதஞ்சலிவியாக்கிரபாதர்கள் மனதின்படி நடந்ததாலே எமக்குமிகுந்ததிருப்தியாமென்று அனுக்கிரகித்தலும் பரமேசுவரருடைய ஆஞ்ஞையைச் சிரசால் வகித்து நமஸ்கரித்து மலர்ந்த முகத்தோடு விளங்கும் அரசனை வியாக்கிரபாத மகரிஷி மூலஸ்தானத்திற்கு அழைத்துவந்து அவ்விடத்தும் தாண்டவதரிசனஞ்செய்துவைத்து ஓ அரசனே! நான் பூர்வத்தில் லிங்கரூபியாகிய இப்பரமேசுவரரைப் பூசித்த விசேடத்தால் ஆனந்தத்தாண்டவ தரிசனங் கிடைத்தது என்று சொல்லி மூலஸ்தானேசரை நமஸ்கரித்து அரசனையும் நமஸ்கரிக்கச்செய்து பின்பு தன்பேரால் விளங்கிவரும் திருப்புலீச்சுரத்தில்ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சிவபெருமானையும்பூசிக்கச்செய்து அதைவிடுத்து நாகபுரமென்னுபக்ஷேத்திரத்திற்சென்று பதஞ்சலியின் பாக்கியமாகிய தேவேசனைதொழச்செய்து, தன் ஆசிரமம்வந்து தனது பத்தினியின்பாதத்தை வணங்கச்செய்து,ஓ பிரியே! முற்காலத்தில் சீரம்வருந்த ஒருபுத்திரனைப் பெற்றனை இப்பொழுது ஓர் வருத்தமுமின்றி உனக்கு ஒருபுத்திரன் கிடைத்திருக்கின்றான் என்றுசொல்லி அரசனைப் புத்திரனாக ஒப்புவித்தனர். அரசனும் மிகுந்தகளிப்புடன் இவர்களே நமக்குத் தாயுந்தந்தையுமென்று வணங்கிநிற்க, பதிவிருதா சிரோமணியான ரிஷிபத்தினியும்முகமலர்ந்து வம்சசூடாமணியாகிய இப்புத்திரனை பரமசிவன் நமக்களித்தனரென்று சந்தோஷத்துடன் கிரகித்தனள் பிறகு களிப்புற்ற மனத்துடன் புத்திரோபசாத்தை யடைந்துவரும் மதுவடசத்தரசனாகிய ஹிரண்ணியவர்மனை வியாக்கிரபாதர்கிருபாதிருஷ்டியினால்பார்த்து க்ஷேத்திரமகாத்மியத்தையுபதேசிக்கத்தொடங்கினர். ஓஅரசனே! அம்பிகாபதியான சம்புவானவர் எங்கும் பரிபூ

ரணராய் நிறைந்திருப்பினும் ஒருவராலுங்காணப்படுகிறவர் அல்லர் அவ்விதமாயினும் இந்தக்ஷேத்திரத்தில் மிகுந்த கருணையுடன் பிராணிகளுடைய கர்மநேத்திரத்திற்காணும்படி நிர்த்தனஞ்செய்கின்றார் அன்றியும் பூலோகத்தில் பரமசிவன் முத்தியளிக்கும்படியான அளவிறந்த க்ஷேத்திரங்களைச் சிருஷ்டித்திருக்கின்றார் அவைகளுள் முத்தியைக் கொடுப்பதான அறுபத்தெட்டு ஸ்தானங்கள் பரமசிவ ஸான்னியத்திற்குஹேதுவென்ற பிரசித்திபடைந்திருக்கின்றன. அவைகளுள் ஆறுஸ்தானங்கள் முக்கியமானவை. அவற்றுள் புண்டரீகபுரம், காசி, கமலாலயம் இம்மூன்று மிகமேலானவையென்றுபெரியோர் கொள்கை இம்மூன்றுக்ஷேத்திரத்தில் எவர்கள் நித்தியவாசஞ்செய்து தவஞ்செய்து வருகின்றார்களோ அவர்கள் க்ஷேத்திரவாச மகிமையால் காலத்தினளவே முத்தியடைகின்றார்கள் இம்மூன்றினுள்ளே புண்டரீகபுரத்தில் தரிசிப்பதாலும் காசியில்இறப்பதாலும், கமலாலயத்திற் பிறப்பதாலும் சர்வான்மாக்களும்முத்தியடையும்விசேடத்தால் இவைகளின் மகிமை யாவரால் சொல்லமுடியும். அவைகளுள்ளும்இந்த க்ஷேத்திரம் மிகுந்தமகிமையையடைந்திருக்கின்றது நாம் ஒருக்காலும் கமலாலயத்திற் பிறக்கவில்லை. காசியிற்சரீரத்தை விடவுமில்லை. ஆனால் இங்கு வசிக்கின்றநாம்சபையில் நிர்த்தனம்புரிகின்ற பரமசிவ சரணாரவிந்த தரிசனத்தினால்முத்தர்களாகவேயிருக்கின்றோம். ஈதன்றிஎவர்கள் இத்தில்லவனத்தை எதிர்ச்சையாய்டைந்து தாண்டவத்தை ஒருக்கால் தரிசிக்கின்றார்களோ அவர்கள் முத்தர்களாக ஆகிவிடுகின்றார்கள் சிற்சபையின் சமீபத்திலே எக்காலத்திலும் வசிக்கின்றவர்களுக்கு முத்தியுண்டென்று சொல்லவும்வேண்டுமோ எவர்கள் இச்சிதம்பரக்ஷேத்திரத்தில் வசித்துநிர்த்தனத்தைத்தரிசித்து அனேகநாட்களைக்கழித்து பிறகு காசியைப்போல் முத்தியையளிக்காதென்று இப்பதியைவிடுத்து காசியையடைந்து அங்குஇறந்தால் சிதம்பரக்ஷேத்திரத்தை அவமதித்தவர்கள் இவர்களென்று அவர்களுக்குப் பரமேசுவரர் முத்தியைக்கொடார் இந்த க்ஷேத்திரத்தில் வசிக்கின்ற மனிதர்கள் உலகவியாபாரத்தில்இருந்தபோதிலும் பரமசிவத்திற்குச் சமான தேஜோவான்களாகிய ஜீவன்முக்தர்களாகக் காணப்படுகிறார்கள். நீ மனுவம்சத்திற் பிறந்ததுடன் இவ்வானந்தத்தாண்டவத்தையும் காணப்பெற்றமையால் இதைப்பார்க்கிலும் பெறுதற்கரிய பிரயோஜனம் என்னை?

இருபத்துமூன்றாவது அத்தியாயம்-முற்றிற்று.

## இருபத்துநான்காவது அத்தியாயம்.

## வசிஷ்டர் ஹிரண்யவர்மனை கௌடதேசத்திற்கு அழைத்துப்போதலைக் கூறியது.

ஓ ஹிரண்ணியவர்மனே! இந்த க்ஷேத்திர விசேடத்தைத்பற்றிப் பூர்வத்தில் பிருகுகுலத்தில் ஜனித்த சவுனகர் நந்திதேவர்முகமாய்க் கேட்டிருப்பதை யுனக்கு வுணர்த்துகின்றேன். சவுனகமகரிஷியானவர். நந்திதேவரைப்பார்த்து திருசந்தியா காலங்களிலும் பரமேசுவரர் பார்வதியோடு நிர்த்தனஞ்செய்கின்றதாகக்கேழ்விப்பட்டிருக்கின்றேன். அந்த இடம் சுவர்க்கமா? பூமியா? பர்வதமா? ஜலமா? வனமா? உபவனமா? ஸ்மசானமா? சூரியமண்டலமா? சந்திரபிம்பமா? இவற்றுள் எவ்விடத்தில் ஆனந்ததாண்டவ தெரிசனங்கிடைக்கும்என்று கேட்கவும், சவுனகரே! கைலாசபர்வதத்தில் பரமேசுவரர் தாண்டவஞ்செய்துவருகின்றார். அத்தாண்டவத்தைஉமாதேவியைத்தவிர மற்றெவருங்காணார்கள். புண்டரீகபுரத்தில் சிற்சபை நடுவில் நித்தியமூன ஆனந்தத் தாண்டவத்தை எல்லோருங்காணச்செய்கின்றார். அதைப்பார்க்க இச்சையிருக்குமேல் புண்டரீகஞ்செல்லல்வேண்டும். அவ்விடத்திருக்கும்சிவகங்கையைப்பார்க்கிலும் உத்தமதீர்த்தமும், அந்தச்சிதம்பரத்திற்கு மேலாகியக்ஷேத்திரமும், பஞ்சாக்ஷரத்திற்கு விசேடமான மந்திரமும், நடேசனுக்கு அதிகமான தெய்வமும் ஒரிடத்துமில்லை. இவைகளை த்தரிசித்து நேத்திரத்தால் உண்டாகும் பலனை அடைவாயாக என்றனர். உடனே சவுனகர் தில்லவனம்அடைந்து சிவகங்கையில்ஸ்நானஞ்செய்து ஆனந்தத்தாண்டவதரிசனஞ் செய்யவேண்டியதற்காக ஒருவருடந்தவஞ்செய்யும் காருண்ணிய விக்கிரகராகியபகவான் பிரசன்னமாகி அற்புதமான ஆனந்தத்தாண்டவதரிசனந் தந்தருளினர். சவுனகரும்ஆனந்தபரிதராய்க் கண்களில் நீர்பெருக ஸ்தோத்திரஞ்செய்து தானும் தாண்டவஞ் செய்துக்கொண்டிருக்கையில், பகவான் சவுனகரைப் பார்த்து, ஓ சவுனகா! நீ இருக்குவேதத்திற்கு அதிபதியாயிருந்து ஆகவலாயனசூத்திரத்தைச் செய்வாயாகஎன்று அனுக்கிரகித்தனர். அக்கட்டளையின்படியே ரிக்வேதத்திற்கு வேண்டியசாஸ்திரங்களைச் செய்தனர். அன்றியும், ஆயிரம் சாகையுள்ள சாமவேதத்திற் கதிபதியாய் ஜைமினிமகரிஷி இச்சிதம்பர வைபவத்தைக் கேட்டுச்சிஷ்டர்களுடன் தில்லவனம்வந்து சிவகங்கையில்ஸ்நானஞ்செய்து பக்தியுடன்தாண்டவ மூர்த்தியைப் பூசித்து நான்காவதுபாதத்தில் வேதம்பொருந்திய சுலோகங்களால் துதித்து காணபத்திய பதத்தை

யடைந்து சம்புவின் பின்பக்கத்திலிருந்து எப்போதும்ஆனந்தத்தாண்டவ தரிசனஞ்செய்து வருகின்றார். வசிஷ்டர் நாரதர் முதலிய மகரிஷிகள் பரோக்ஷ ஞானத்தைக் கொடுத்து முக்தியளிக்கும் மற்றைய க்ஷேத்திரங்களை விடுத்து சாமநேத்திரத்தால் தரிசித்தவுடன் முக்தியைக்கொடுக்கும் வல்லமையுள்ள தாண்டவ தரிசனஞ் செய்துக்கொண்டுஇவ்விடத்திலேயே வசித்துகொண்டிருக்கிறார்கள். நாங்களும்அடைதற்கரிய சித்திகளை யடையவேண்டி இங்கு வசிக்கின்றோம். முந்தி என்பிதாவான மத்தியந்தினர் என்னை இத்தில்வவனத்தில் தவஞ்செய்ய அனுப்பினர். அதுமுதல் இதுகாறுந் தவஞ்செய்துக்கொண்டு வருகையில் நான்கண்ட அற்புதங்களைச் சொல்லமுடியாது. எனக்குத் தவஞ்சித்தித்ததும், கலியாணமானதும், என்புத்திரன பாற்கடலைப்பெற்றதும், புத்திரனல் தேவகீநந்தனாகிய கிருஷ்ணன் சிவதீக்ஷைபெற்று சிவாகமங்களின் அர்த்தங்களை அறிந்ததும், பக்தியிலுயர்ந்த பதஞ்சலியின் சினேகமும் லபித்ததும், மகா துர்லபமாகிய ஆனந்தத் தாண்டவ தரிசனங் கிடைத்ததும் இந்தக்ஷேத்திரவாசத்தின் விசேடமேயன்றி வேறில்லை.

சிவதர்மத்தில் விருப்பமுள்ள ஹிரண்ணியவர்மனே! நீங்காத உனது சரீரக்குற்றம் சிவகங்கையில் ஸ்நானஞ் செய்தவுடன் நீங்கி சுவர்ணமயமாக ஆனதும்கிடைத்தற்கரிய ஆனந்தத்தாண்டவ தரிசனங்கிடைத்ததுமாகியவிசேடங்களை எத்தனையுகம்சொல்லினும்அது முடிவுபெறாது. இந்தப்பூமிக்குள் இந்தக்ஷேத்திரம் உத்தமம். க்ஷேத்திரத்தைப் பார்க்கிலும் சிவகங்காதீர்த்தமும், தீர்த்தத்தைப்பார்க்கிலும்சிதம்பரம்சபையும்,சபையைப்பார்க்கிலும் நடேசமூர்த்தியும், நடேசமூர்த்தியைப்பார்க்கிலும்சிவகங்காதீர்த்தமும்,தீர்த்தத்தைப் பார்க்கிலும் சிதம்பரம் சபையும், சபையைப்பார்க்கிலும் நடேசமூர்த்தியும், நடேசமூர்த்தியைப் பார்க்கிலும் பவக்கடலைத் தாண்டுவதற்குபாரதிபோன்ற குஞ்சிதசரணமும்உத்தமமாகும். மகாபாவியாயினும் உத்தமோத்தமமாகிய குஞ்சிதசரணத்தைத்தரிசித்தவன் மோக்ஷசுகத்தையடைகிறான். பக்தியாய்த்தரிசிப்பவரின்பலனைச்சொல்லவேண்டுமோஎன்று வியாக்கிரபாதர்சொல்லிவருகையில் ஆகாசத்திலிருந்து ஒரு தேஜோராசி இறங்கி வருவதைக் கண்டார்கள். அவ்வொளியைப்பார்க்கச் சக்தியற்றவர்களாய் இதுஎன்ன ஆச்சரியமென்றுசொல்லிக்கொண்டிருக்கையில் அந்ததேஜசுபூமியின்சமீபத்தில் வருகையில் ஹிரண்ணிய வர்மனுடைய குலபுரோகிதராகிய மகரிஷி வருகிறாரென்று அறிந்து வியாக்கிரபாதர் முதலிய ரிஷிகளும் ஹிரண்ணியவர்மனும்விழுந்து எதிர்கொண்டழைத்துஅர்க்கியபாத்யாதி

உபகாரஞ்செய்யவும் மிகுந்தசந்தோஷசித்தராயிருக்கையில் ஹிரண்ணியவர்மன் நமஸ்கரித்துக் கைகட்டிநிற்க, வசிஷ்டர் ஆசீர்வதித்து வியாக்கிரபாதர் முதலிய முனிவர்களது க்ஷேமங்களை விசாரித்துச் சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து சிதம்பரசபையை யடைந்து ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்து நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்து ஆனந்தபரவசராய் நிர்த்தனஞ்செய்து அவ்விடத்திலிருந்து வியாக்கிரபாதரின் ஆசிரமஞ்சென்று வியாக்கிரபாதரின் பூசையைக் கிரஹித்து ஒருநாள்வசித்து மறுநாட்காலையி லெழுந்து நித்தியகிரியைகளை முடித்து ஓராசனத்திருக்கையில் ஹிரண்ணியவர்மன் குலகுருவை வந்தித்துக் கைகூப்பி நிற்க, ஓ ஹிரண்ணிய வர்மனே! உன் பிதா மிகுந்த விருத்தாப்பியத்தை யடைந்தபடியாலும் உன் தம்பிமார்கள் பாலர்களா யிருப்பதினாலும் ராச்சியத்தை யாளுதற்கு நாயகனில்லாமலிருக்கின்றது. நீஇப்போது அந்தஇராச்சியத்தைஒப்புக்கொள்ளல்வேண்டும்என்று சொல்லவும், ஓசுவாமி! நான் இராச்சியாதிபோகங்களில் ஆசையில்லாதுவிடுத்த இத்தில்லவனத்திலேயே வசிக்கிறதென்று நிச்சயித்திருக்கின்றேன் என்னிடத்திற் கிருபைகூர்ந்து மன்சகோதரருக்குள் ஒருவனுக்குஇராச்சியத்தைக்கொடுத்தருளல்வேண்டும். அன்றியும் எனக்கு மாதுருபிதுருக்கள்இம்மகரிஷியும் இவரது பத்தினியுமாக இருத்தலால் இவர்களுடையபணிகளைச்செய்துக்கொண்டு நானித்தலத்தில் வசிக்கும்படி அனுக்கிரகித்தல்வேண்டும் என்று அரசன் கேட்டுக்கொள்ளலும், சமீபத்திலிருந்த வியாக்கிரபாதர் ஓ ஹிரண்ணியவர்மனே! எங்களிடத்தில் மாதுரு பிதுரு பக்தியும் இவ்விடத்திலேயே வசிக்கவேண்டுமென்கிற எண்ணமும் உனக்கு இருக்குமாயின் உனதுஇராச்சியஞ்சென்று பிதாவின் மனப்படி செங்கோலவகித்துச் சைன்னியங்களுடன்இவ்விடம்வந்து சேரவேண்டும், வரும்போது அந்தரவேதியில் பிரம்மா யாகஞ்செய்யுமிடஞ்சென்று அவ்விடத்திலிருக்கும் திருகஸகஸிர முனீசுவரர்களை ரதத்தின்பேரில் எற்றி மரியாதையுடன் விரைவில் அழைத்துவரவேண்டும் என்றுவியாக்கிரபாதர்சொல்லவும்,ஹிரண்ணியவர்மன் ஒருவாறு ஒப்பி நடேசரைத் தியானஞ்செய்து ஹேமசபையை யடைந்து பகவானைநமஸ்கரித்து ஆனந்தத்தாண்டவ தரிசனத்தைவிட்டுப் பிரியமனமில்லாது நிற்கையில், ஓ ஹிரண்ணியவர்மனே! நீ உனது நகரஞ்சென்று அரசை வசித்து இவ்விடம் வரும்போது எமது திருஸகஸிர முனீசுவரர்களை அழைத்துவரவேண்டுமென்று பரமேசுவரர் திருவாய்மலர்ந்தருளலும், அதை வணக்கத்துடன் அங்கீகரித்து பதஞ்சலிவியாக்கிரபாதர்களையும்பிரமதகணங்

களையும் மற்றுமுள்ள ரிஷிகளையும் நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

இத்தில்லவனத்தை நகரமாய்ஏற்படுத்தவேண்டுமென்கிறகருத்துடன் அடிக்கடி பார்த்து சிதம்பரத்தைப் பிரதக்ஷிணஞ்செய்துப் புறப்பட்டு வசிஷ்டருடன் தன்னுடைய நகரத்தை யடைந்தனன். உடனே அரண்மனையிற்சென்று மந்திரிகளை வரவழைத்து ஓமந்திரிகளே! நமது சதுரங்க சைன்னியங்களுடன் நீங்கள் புறப்பட்டென்னுடன் வாருங்கள் என்று ஆஞ்ஞாபித்து தன்னுடைய பந்துக்களையும், மித்திரர்களையும், சகோதரர்களையும் அழைத்துக்கொண்டு கோசங்களோடும், வாகனங்களோடும், ஆயுதங்களோடும் புறப்பட்டு அந்தர்வேதியென்னும் க்ஷேத்திரத்தை யடைந்து அங்கு வசித்துக்கொண்டிருக்கும் திருஸகஸிரமுனீசுவரர்களை நமஸ்கரித்துத் தில்லவனத்தில் வரவேண்டுமென்று பிரார்த்தித்து, அவர்களை இரதங்களிலேற்றிக்கொண்டு சிலநாட்களில் தில்லவனத்தை யடைந்து அவ்வனத்தை வணங்கி கணபதி, சுப்பிரமணியர், பதஞ்சலி வியாக்கிரபாதர்களோடு விளங்காநின்ற ஸ்ரீ சாம்ப பரமேசுவரரைத் தியானித்து நமஸ்கரித்து, சகோதரர் முதலிய தனது பரிவாரங்களுடன் சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து, சிற்சபையையடைந்து சிதானந்தமாகிய சிதம்பரத்தையும் தரிசித்து சகல பாவங்களையும்நிவர்த்திப்பதாகிய ஆனந்தத்தாண்டவத்தை யனுபவித்து அளவிறந்த ஸ்துதிகளைச்செய்து கண்குளிரப்பார்த்து மனங்கனியப்பாவித்து ஆனந்த மூர்ச்சையடைந்து மீண்டுந்தெளிந்து நடராஜமூர்த்தியை நமஸ்கரித்தனன். பிறகு அங்குநின்ற வலமாய் வெளிவந்து சந்தோஷசித்தரான வியாக்கிரபாத மகரிஷிக்குத் தான் அழைத்துவந்த மூவாயிர முனிவர்களையும் தனித்தனியே காண்பிக்கும்போது ஓர் முனிவர் குறைதலைக்கண்டு மனவருத்தமடைந்து முகம்வாடி முனிசிரேஷ்டர்களை அடிக்கடி எண்ணியெண்ணிக் கணக்கிடும்பொழுது மூவுலகங்களிலுங்கிடைத்தற்கரிய முனீசுவரர் ஒருவரைக்காணாது வருந்திநிற்கும்பொழுது கருணாநிதியாகிய பகவான் அசரீரிவாக்கினால் அருளுகின்றனர். ஹே ஹிரண்ணியவர்மனே! மூவாயிரமுனிவர்களுக்குள் ஒருவரைக் காணகிலேம் என்றுவருத்தமடைதல் வேண்டாம். சுத்தவம்சத்தில் ஜனித்தவர்களாயும் தேஜோவான்களாயும் இருக்கிற இவர்களுக்குள் நாம் ஒருவராயிருக்கின்றோம் என்றெழுந்த தெய்வவாக்கைக்கேட்ட அரசன் இம்முனிவர்கள் பரமசிவரூபிகளென்று அறிந்து அவ்விசாரத்தை விடுத்துச் சந்தோஷசித்தனாயிருந்தனன். பிறகு முனீசுவரர்கள் வியாக்கிரபாதரை நமஸ்கரித்து மணக்களிப்

புடன் சொல்லுகின்றனர். பிரம்மதேவர் எங்களை அந்தர்வேதிக்கு அழைத்துக்கொண்டு போனது எங்களுக்கு மிகுந்த க்ஷேமகரமாச்சுது. நாங்கள்சிதம்பரம்வந்து சேர்ந்தோம். இனிஎங்களை இச்சிதம்பரத்தை விட்டு பரமேசுவரர் எவ்விடத்துக்கும் அனுப்பமாட்டார் என்னலும் வியாக்கிரபாதர் நீங்கள் சொல்லியது உண்மையே என்றனர். பின்பு அரசன் ஹேமசபைக்கு மேற்குபக்கத்தில் முனீசுவரர்களையும் சேனைகளையும் வசிக்கும்படிச்செய்து தானும் ஆனந்ததரிசனம் பண்ணிக்கொண்டு வசித்தனன்.

இருபத்திநான்காவது அத்தியாயம்-முற்றிற்று.

---

## இருபத்தைந்தாவது அத்தியாயம்.

## வியாக்கிரபாதர் ஹிரண்ணியவர்மனுக்கு மகுடஞ்சூட்டி ஆலயப்பிரதிஷ்டை செய்வித்தலைக் கூறியது.

கேட்டீர்களோ நைமிசாரண்ணிய வாசிகளான மகரிஷிகளே! சிவபக்தியிற்சிறந்த ஹிரண்ணியவர்மன் சிவாலயப்பிரதிஷ்டைசெய்யவேண்டுமென்கிற பூரண ஆவாவுடன் வசித்துவருகையில் ஓர்நாள் வியாக்கிரபாதமகரிஷி ஹிரண்ணியவர்மன் வசிக்குமிடத்து வந்து அவ்விடத்திலிருக்குந் திருஸஹஸிர முனீசுவரர்களைப் பார்த்துச் சொல்லுகின்றனர். சத்தியசந்தனும்,மகாவீரனும், மனுகுலத்தில் உதித்தவனுமி ருக்கின்ற இவ்விரண்ணியவர்மனே இப்பூமி முழுதையும் ஆளவேண்டும். இவனது தம்பிமார்களாகிய இருவர்களும் யுவராஜாக்களாயிருந்து குறைவற்றசம்பத்தையுடையகௌடதேசத்தை ஆண்டுவரவேண்டும் என்றுரைத்தலும், அதைக்கேட்ட முனீந்திரர்கள் உடனேஹிரண்ணியவர்மனுக்கு விவாகஞ்செய்வித்து ஹேமசபையின்சமீபத்தில் பட்டாபிஷேகஞ்செய்வதற்காக தேவர்களெல்லோரும் வசிக்கும்படியான ஓர் விசித்திரமண்டபம்ஒன்று ஏற்படுத்தச்செய்து அதில் நவரத்தினமயமான சிங்காதனம் ஒன்றமைத்து மண்டபத்தை ரத்தினதீபங்களாலும், மனோகரமான மாலைகளாலும் காஞ்சனமயமான தோரணங்களாலும் அலங்கரித்து உத்தமதீர்த்தங்களாலும் நிறைக்கப்பட்ட சுவர்ணகலசங்களை ஸ்தாபித்து சுவர்ணமான புஷ்பங்களால் அர்ச்சித்து மங்களப்பொரிகளாலும், நெய்களாலும், சமித்துக்களாலும், குசங்களாலும் வேதிமத்தியை நிறைத்துப் பட்டாபிஷேகத்திற்கு முதல்நாள்நடத்தவேண்டிய விதிகளை நடத்தினார்கள். மறுநாள் உதயத்தில் திருஸஹஸிர முனீசுவரர்கள் நித்தியகர்மங்களை முடித்து நல்ல முகூர்த்தத்தில் அரசனுக்குப் பட்

டாபிஷேகஞ் செய்வித்து சுவர்ணமயமான மகுடத்தையும், ஹேம மாலையையும், ஜயத்தைக் கொடுக்கும்படி வீரவாளையும் தரிசிக்கச் செய்தார்கள். பிறகு ஹிரண்ணியவர்மன் ராச்சியத்தில் தனது முத்திரை வழங்கும்படி ஆக்ஞாபித்து மகுடத்தால் சேர்ப்பிக்கும் சிரத்தால் பிதாவைப்போன்ற வியாக்கிரபாத முனிவரை வணங்கினன். வியாக்கிரபாதரும் வணங்கி அரசனை வாரியணைத்து சாம்பிராச்சிய பதத்தில் வாழ்ந்திருப்பாயென்று ஆசீர்வதித்து அரசர்களுக்குக் கிடைத்தற்கரியவியாக்கிரதுவஜத்தையுங்கொடுத்து அவன்கையைப் பிடித்துச் சிதம்பரசபையிற் பிரவேசித்து நடராஜமூர்த்திக்கு அரசனால் புஷ்பாஞ்சலி செய்வித்து அரசனது சிரசில் பகவானுடைய குஞ்சித சரணத்தைச் சிலநேரந் தாபித்தருளினர் இதுகண்ட திரு ஸகஸிர முனீசுவரர்கள் தேவர்களுக்குங் கிடைப்பதற்கரிய இப்பதத்தை அரசனடைந்தனனென்று ஆனந்தித்தார்கள் அவ்வனுக்கிரக பாத்திரனான அரசன் அளவிறந்த மகிழ்ச்சியுடன் பகவானுடைய சந்நிதியில் அஞ்சலிபந்தனஞ்செய்து ஓ தேவதேவனே! எங்கள் வம்சத்திற்பிறந்த அரசர்களால் நீதிதவறாது சேர்த்துவைத்திருக்குந் தனங்களை எல்லாம் தேவரீர் பொருட்டு அர்ப்பணஞ் செய்துவிட்டேன். பிறகு என்னால் தர்மமாய்ச்சம்பாதிக்கப்படுகிற ஆறிலொரு பங்கில் ஐந்திலொருபங்கு தனத்தை என்ஜீவனோபாயத்திற்காகவும் மற்றைய நான்குபங்கை தேவரீர் சரணாரவிந்தத்திற்கே காணிக்கையாகவுஞ் செலுத்திவிடுகிறேன் என்னுடைய வம்சத்திற் பிறந்தவர்களாலும் சைன்னியங்களாலும் அறிந்தும் அறியாதும் தேவரீருக்குச் செய்யப்படுகிற அபராதங்களைப் பொறுத்துக் கருணாதிருஷ்டியால் அவர்களை நற்கதியிற்சேர்த்தல்வேண்டும் எனப்பிரார்த்தித்து நிற்க, அவ்வரசனை வியாக்கிரபாதமகரிஷி அழைத்து மூலஸ்தானேசரை வணங்கச்செய்து தமது ஆசிரமஞ்சென்றனர். பிறகு ஹிரண்ணியவர்மனும் பட்டத்து யானையின்பேரிலேறி சங்கம், காளகம் முதலிய வாத்தியங்கள் கோஷிக்கவும், நால்வகைச் சைனியங்கள் சூழ்ந்துவரவும், வந்திகள் ஸ்தோத்திரங்கள் செய்யவும், துவஜங்கள் ஆகாசத்தை மறைக்கவும், க்ஷேத்திரத்தைப் பிரதக்ஷிணம் வந்து தனது மாளிகையை அடைந்து பிதுர் பிதாமகாதிகள் அமர்ந்து அரசாண்ட சிம்மாசனத்தில் வீற்றிருந்தனன். பின்பு வீரர்களாகிய தனது சகோதரர்களை யழைத்து அரசசின்னங்கள் யாவுங்கொடுத்துச் சுவர்ணகும்ப ஜலங்களால் ராஜ்ஜிய பட்டாபிஷேகஞ்செய்து ஓ அநுஜர்களே! நீங்கள் சகல சைன்னியங்களோடும் நமது தேசஞ் சென்று முன்னோர்கள் எவ்விதம் ஆண்டார்களோ அவ்விதம் நீதி

தவறாது அரசாண்டு வரக்கடவீர்களென்று ஆஞ்ஞாபித்தனர். அவர்கள் அதை ஒப்புக்கொண்டு நடராஜபதியை வந்தித்துத் தமது தேசத்தை யடைந்தார்கள்.

பிறகு! ஹிரண்ணியவர்மன் வியாக்கிரபாதரைநமஸ்கரித்துசுவாமி! இந்தத் திவ்வியசிதம்பரக்ஷேத்திரத்திருப்பணிசெய்யும் திருஸகஸிர முனீசுவரர்களுக்குத் திருமாளிகையமைத்துவைக்கவும் அபேக்ஷிக்கின்றேன் அனுக்கிரகித்தல்வேண்டும் என்றுபிரார்த்திக்க, அப்படியே செய்குகவென்றுதிருவாய்மலர்ந்தருளினர். உடனே அரசன் விசுவகர்மாவை யழைத்துஇச்சிதம்பர க்ஷேத்திரத்தையும், திருஸகஸிர முனிவர்களின்மாளிகையையும் மனோக்கியமாகநிர்மாணஞ்செய்யவேண்டுமென்று ஆஞ்ஞாபித்தனன். உடனே விசுவகர்மாவும்அன்புடன் அங்கீகரித்து விசேஷ விஸ்தாரமானபஞ்சவர்ணங்களையும் உயர்ந்த தோரணங்களையும் உன்னத பிராகாரங்களையும், ஆகாயத்தை யளாவிய கோபுரங்களையும், அநேக மண்டபங்களையும், நவரத்தினமயமான தளவரிசைகளையும், ஆச்சரியகரமான சித்திரப்படங்களையும், உத்துங்கமான துவஜங்களையும், சுவர்ணப்பட்டங்கள்கட்டிய அட்டாளமண்டபங்களையும், வச்சிரங்கள்பதித்து சுவர்ணசாந்துக்கள் பூசிய சுவர்ணசுவர்களையும், பவழங்களாலமைந்த உயர்ந்தகொடுங்கைகளையும், பிரகாசிக்கின்ற நீரோட்டமுள்ள வச்சிரஸ்தூபிகளையும், இந்திரநீல வேதிகளையும், மாணிக்கஸ்தம்பங்களையும், முத்துப்பந்தல்களையும், இந்திரநீலக் கற்களாலகட்டப்பட்ட பிராகாரங்களையும் நிர்மாணஞ்செய்தனன். இவ்விதம் நிர்மாணிக்கப்பட்ட சிதம்பர க்ஷேத்திரமானது ஏககாலத்தில் கோடிசூரிய சந்திரர்கள் உதித்தது போலவும், இதுவரையில் காணப்படாத் ஆச்சரியகரமாயும், வைகுண்ட சுவர்க்கங்களைப் பரிகசிப்பதாயும், நினைக்கவும்சொல்லவும்முடியாத விசித்திரங்களையுடையதாயும்விளங்கின. அன்றியும்உப்பரிகைகளோடு கூடியதாய் சுவர்ணகலசங்கள் அமைந்ததாய் துவாரதோரணங்கள் உடையதாய் வீதிகளோடும் பிரகாரங்களோடும் விளங்குவதாய் உள்ள ஆசிரமங்களைத் திருஸகஸிரமுனீசுவரர்களுக்குஅற்புதமாக விசுவகர்மாவைக்கொண்டு அமைத்தனன் பிறகு ஹிரண்ணிய வர்ம சக்கிரவர்த்தி புண்ணியமான திதியில்ஸ்திரக்ஷேத்திரத்தில்வாஸ்துகாந்தி முதலியதுகள் நடத்தி விஸ்தாரமானஆசிரமங்களில்திருஸகஸிர முனீசுவரர்களைக்கிருகப்பிரவேசஞ்செய்துவைத்தனன். பின்பு லோகானுக்கிரக காரணரான நடேசமூர்த்திக்குத் திருமஞ்சன முதலாகிய உத்சவக்கிரமத்தை வேதாகமப்பிரகாரஞ்செய்வதற்குப் பதஞ்சலி முனிவரால் ஏற்படுத்தி தேவோத்ஸவ விதாயகமானபூஜா

சூத்திரத்தை உத்தம லக்ஷணமமைந்த யானையின்பேரில் அலங்காரமாகவைத்து சகல வாத்தியங்களுடன் பட்டினப்பிரவேசஞ்செய்து சபாப்பிரவேசஞ்செய்து வைத்துத் திருஸஹஸ்ரமுனீசுவரர்கள்மிகுந்த சிரத்தையுடன் பூஜாசூத்திரத்தைப் படித்துஅதிற்சொல்லியபடி மாதோற்சவங்களையும், ரிதுக்களில்செய்தற்குரிய உற்சவங்களையும், நக்ஷத்திரோற்சவங்களையும், நித்தியோற்சவங்களையும்உசிதமாய்நிச்சயித்து ஹிரண்ணியவர்மச் சக்கிரவர்த்திக்கு அறிவித்தனர்கள்.

அதைக்கேட்ட அரசனும்முனிவர்கள்சொல்லியபடிசெய்வதென்று நிச்சயஞ்செய்தனன். பிறகு பார்த்திபவருடத்தில்ஆனிமாதத்தில் பூரநக்ஷத்திரத்தில்பகவானுக்கு ரதோற்சவஞ்செய்யநிச்சயித்துத் திருஸஹஸ்ர முனிவர்களைக்கொண்டு தேவர்களையழைத்தல், துவஜாரோகண முதலிய தேவயாகக் கிரியாயோக்கியமான இருபத்தேழு நாளைய மகோற்சவங்களையுஞ் சங்கற்பிக்கச் செய்தனன். பிறகு தேவர்களும், தேவஸ்திரீகளும்,ரிஷிகளும்,மனிதர்களும், மகிபூஸுரர்களும் உற்சவதரிசனத்திற்காகவந்தனர்கள். அரசன் கோபுரங்களை விருஷபத்துவஜங்களால் அலங்கரித்து வீதிகள்தோறும்மகரதோரணங்கள் கட்டி சுவர்ணகும்பங்கள் வைத்து எங்கும்மகோற்சவம் வழங்கும்படிச்செய்தனன்.

இதைக்கண்ட அநேக ஜனங்கள் நிர்த்தனஞ்செய்தார்கள். பிறகுஅரசன் நடராஜமூர்த்திக்கு ஒவ்வொரு ரத்தினங்களாற் செய்த பூஷணங்களையும், உற்சவயோக்கியமான உயர்ந்த சிங்காதனம், இரத்தின தண்டம், சுவேதசத்திரம், அநேக விருஷபத்துவஜங்கள், முதலிய உபகரணங்களையும்ஏற்படுத்தி ஹோற்சவம் நடந்துவருகையில், பகவான் பூரநக்ஷத்திரத்தில் வீதியில் எழுந்தருளும் ரதோற்சவவைபவத்தைக்கண்டு தேவர்கள் ரிஷிகள் முனிதர்கள்முதலியவர்களெல்லாம் ஆனந்த விசேடத்தால்தன்யர்களாய் லயித்திருந்தனர்கள். பின்பு ஆடிமாசத்தில்முன்செய்த மகோற்சவத்தில்ஏற்றங்குறைவுகளிருப்பின் அதை பகவான் க்ஷமித்தல்வேண்டிதெப்போற்சவத்தையும், ஆவணிமாதத்தில் யாகதீக்ஷை செய்தவுடன் புஷ்பவிமானத்தில் வைத்துப் பவித்திரோற்சவத்தையும், பாத்திரபதோற்சவத்தையும், ஐப்பசி மாதத்தில் பூரநக்ஷத்திரத்தில் திருக்கலியாண மகோற்சவத்தையும், கார்த்திகைமாதத்தில் தீபோற்சவத்தையும். மார்கழிமாதத்தில் ஆருத்திரையோடு கூடிய சுபதினத்தில் அகஸ்தியர், புலஸ்தியர், விசுவாமித்திரர், பராசரர், வாமதேவர், வசிஷ்டர், ஜயமுனி, பாரத்துவாஜர், பிருகு, கண்ணுவர், காசியபர், மற்றுமுள்ள ரிஷிக

னும்தில்லவனத்தை யடைந்து,திருஸகஸ்ரமுனீசுவரர்களோடுகூடி சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து க்ஷேத்திரத்தைமூன்று பிரதக்ஷிணஞ்செய்து சபேசரை நமஸ்கரித்து பரமானந்த சாகரத்தில் மூழ்கியவர்களாய் கோலவுருவங்காண்டு கோவிந்தனும், அம்ஸவடிவெடுத்து அயனும், அடிமுடி தேடியும் காணவொண்ணாத நடராஜ தெய்வமே! உம்மை நமஸ்கரிக்கின்றோம். விசுவரூபனே! காலவைரியே! சூலபாணியே! ஆக்கி அளித்துத் துடைக்கும் காரணமே! கருணைபுரிய வுருவாய்க்கொண்ட கற்பகமே! உம்மை வந்திக்கின்றோமென்று பலவாறு ஸ்தோத்திரஞ்செய்து அஷ்டாங்கத்துடன் நமஸ்கரித்து அளவிறந்த பனேபீடங்களைப்பெற்று அவரவர்கள் சென்றார்கள். ஆதலால் ஒருவராலுஞ் சொல்லிமுடியாத அந்தப் புண்ணிய தினத்தில் பகவானுக்கு மகோற்சவத்தைச் செய்யக்கடவை என்று வியக்கிரபாதர் அரசனை நோக்கிக் கூறலும், அரசன் திருஸகஸ்ர முனீசுவரர்களுக்கு அறிவிக்க, அவர்களு மிருந்தஅன்புடன் புண்ணியபத்தினங் கிடைத்ததென்றுபுண்ணிய தீர்த்தங்களைக்கொண்டு அமலராகிய நடேசருக்கு வேதமந்திரங்களால் அபிஷேக மகோர்ச்சவத்தைச் செய்து கிருதமாலபுஷ்பங்களால் அலங்கரித்து நைவேத்திய முதலிய உபசாரங்கள்செய்து பதஞ்சலி வியாக்கிரபாதர் ஹிரண்ணியவர்மன் இவர்களுடன் தரிசித்தார்கள்.

அருபத்தைந்தாவது அத்தியாயம்-முற்றிற்று.

---

### இருபத்தாறவது அத்தியாயம்.

## ஹிரண்ணியவர்மன் நடேசமூர்த்திக்கு உற்சவாதிகள் நடத்தலைக் கூறியது.

கேட்டீர்களோ நைமிசாரண்ய வாசிகளான முனிவர்களே! புஷ்யமாதஉற்சவவிதியைவியாக்கிரபாதர்ஹிரண்ணியவர்மனுக்குச் சொல்லியதை நாம்உங்கட்குச் சொல்லுகின்றோம். புஷ்பமாதத்தில் புஷ்யநக்ஷத்திரத்தோடு கூடிய தினத்தில் சுபலக்கினத்தில் எவர்கள் மகாநைவேத்தியஞ் செய்கிறார்களோ அவர்கள் சாஸ்வதமான மோக்ஷத்தைப்பெருகிறார்கள் என்றுரைத்த வியாககிரபாதர்வசனத்தைக்கேட்ட அரசன், திருஸகசிரமுனீசுவரரைக்கொண்டு அந்தபுஷ்யநக்ஷத்திரத்தில் கைலாசபர்வதத்திற் கொப்பாகிய அன்னக்குவியலையும், பக்ஷிணபோஜனங்களையும், லேகியசோஷியங்களையும், வெய்யலாலும் அக்கினியாலும் பக்குவமான போஜன வஸ்துக்களையும், அனேகவிதமான அப்பங்களையும், பருப்புக்களையும், மா, பலா, வாழை முதலிய பலவர்க்கங்களையும், மகாநைவேத்தியமாக பகவானுக்கு அர்பணஞ்செய்தனன். இதைக்கண்ட சகலமான முனிவர்களும் பூபதியினுடையபக்தியைக் கொண்டாடினார்கள். வியாக்கிரபாதரும் சந்தோஷித்தராய்வேந்தனைப்பார்த்துநடேசமூர்த்தியின்உற்சவத்

தின் இன்னுமொரு விசேடத்தைச்சொல்லுகிறேன். ஆனிமாதத்தில் பூர நக்ஷத்திர புண்ணியதினத்தில், தேவர்கள், முனிவர்கள், சித்தவித்யாதரர்கள், யக்ஷராக்ஷஸர்கள், மனிதர்கள் முதலிய எல்லோருங் கூடி பக்தியுடன் தில்லவனத்தையடைந்து சிவகங்கையில் ஸ்நானஞ் செய்து சிற்சபையையடைந்து, தேவதேவராயும், நிர்மலராயும், நிஷ்கிரியராயும், நித்தியராயும், நிஷ்களங்கராயும், மாயாதீதராயும், மகாதீதராயும், தரித்திருக்கும் சந்திரனால் திக்குகளைப்பிரகாசிக்கப்படுத்துகிறவராயும், நெற்றிக்கண்ணால்முப்புரத்தை எரித்தவராயும், கருணைக்கடலின் அலைகள் தவிழுங் கடாக்ஷ வீக்ஷண்யத்தை யுடையவராயும், புன்னகையால் மனோகரமாகியமுகசந்திர மண்டலத்தால்விளங்குகிறவராயும், நாகேந்திரங்களைக் குண்டலங்களாகத்தரித்தவராயும், வியாக்கிர சர்மதாரராயும், பார்வதி வல்லபராயும், நாகயஞ்ஞோபவீதராயும், அழகு பொருந்திய பாதச்சிலம்பின் ஒலியால் நிறைந்த திக்குகளை உடைத்தானவராயும், வலதுகாலால் அபஸ்மாரத்தைமிதித்து அனுக்கிரக ரூபமான வாமசரணத்தைத்தூக்கிநடித்தவராயும் விளங்காநின்ற நடராஜமூர்த்தியைத் தரிசித்து ஆனந்த வெள்ளப்பெருகத் துதித்துப் பன்முறை வந்தித்துச் சரணாரவிந்தத்தைச் சிந்தித்து அவரவர்கள் வாசஸ்தலஞ் சென்றார்கள். ஆதலால் அப்புண்ணியதினம் வருகிற வருடத்தில்சமீபித்திருப்பதினால்உற்சவத்திற்குரியபெரியரதம் முதலியவைகளைச் சீக்கிரமாய் அமைத்தல் வேண்டும் மனுகுலதிலகனே என்று வியாக்கிரபாதர் உரைத்தலும், அவ்வண்ணமே செய்வித்து மிதுனமாசம் வந்தவுடன் மிகுந்த அன்புடன் நடேசர் சந்நிதியில் கார்த்திகை நக்ஷத்திரத்தில்துவஜாரோகணஞ் செய்யவேண்டி தேவதாஹ்வானஞ்செய்து விருஷபம்எழுதிய துவஜபடத்தைப் பட்டினபிரவேசஞ்செய்வித்து ஆகமவிதிப்படி துவிஜாரோகணஞ்செய்தார்கள். மறுநாள் இரவில் மிருதங்கம், பேரி, துந்துபி முதலிய அநேக வாத்தியங்கள் கோஷிக்கவும். மறுதினத்தில் தேவர்கள்ரிஷிகள் முதலானவர்களும் தங்கள் தங்கள்பத்தினிகளுடன் நடேசருடைய தரிசனத்திற்குவந்தனர்கள். பூலோகத்தில் மத்தியார்ச்சுனம், மாயூரம், திருவெண்காடு, வேதாரண்ணியம், திருவாரூர், பஞ்சனதம், காஞ்சீபுரம், அருணாசலம்முதலிய உத்தமக்ஷேத்திரங்களால் விளங்கும் பரமசிவ கலாபேத மடைந்த சிவமூர்த்தங்களெல்லாஞ் சிற்சபேசரின் தரிசனத்திற்குவரவும், உற்சவத்திற்காக யாகதீக்ஷை முதலியவிதிகளைச்செய்து ஒன்பதாவது தினத்தில் பூர நக்ஷத்திரத்தில் நடேசமூர்த்தியை அதிவிசித்திரமான சுவர்ணமய ரதத்தில் ஆரோகணஞ்செய்வித்து ஜனங்களால் பற்பலவிதமாக அலங்கரிக்கப்பட்ட வீதியில் அநேக வாத்தியங்கள் முழங்க, வேதங்கள் கோஷிக்க, பக்தர்கள் ஜயசப்தங்கள்கூற, தேவர்கள் களிக்க, முனிவர்கள் துதிக்க, பிரதக்ஷிணஞ்செய்வித்துசிற்சபாப்பிரவேசம்பண்ணுவித்தனன். இந்த உற்சவ வைபவத்தைக்கண்டு களித்த வியாக்கிரபாதர் மன்னனைநோக்கி, ஹிரண்ணியவர்மனே! இதுவரையில் உ

[illegible]வம் பூர்த்தியாய்விட்டது. இனியாவர்க்கும் ஸ்நானமாத்திரத்தில் முக்தியளிக்குந் தீர்த்தஸ்நான மகோற்சவத்தைச் செய்வித்தல்வேண்டுமென்றருளலும், ஓநாதனே! எவ்விடத்தில்எந்தத்தீர்த்தத்தில் தீர்த்தாடனமகோற்சவத்தைச் செய்யல்வேண்டுமென்று கேட்டலும்,வியாக்கிரபாதர் அநுக்கிரகிக்கின்றனர் இந்தப்பண்டரீகபுரத்திற்கு வடகிழக்கில் ஸ்நானஞ்செய்பவர்களின் பாவங்களைப்போக்க விளங்குஞ் சமுத்திரத்தில் தீர்த்தாடனஞ் செய்வித்தல் வேண்டும். இதன் விசேஷத்தை அறிவிக்கும் பூர்வீகசரித்திரமொன்றிருக்கின்றது அதை யுரைக்கின்றேன் தீர்த்தங்களுக்கெல்லாம் அதிபதியாகிய வருணதேவன் பகைவர்களை மாய்க்கும் வல்லமைபூண்ட ஓர் அசுரன்னூறாண்டு கடோயுத்தஞ்செய்து வருகையில், ஓர் பிராம்பண சிரேஷ்டர் இவர்களின் யுத்தத்தைச் சமாதானஞ் செய்யவேண்டி இரவில்தனித்துவருணனிடஞ்சென்றார். அப்போது தன்னிடம்வரும் அந்தணரை இரவாதலால் பகுத்துணராது அசுரேந்திரன் இவ்வடிவுகொண்டு வருகின்றானென்று நினைத்துப் பீதியினால்தனதுவருணபாசத்தைஏவலும் பா[illegible]த்தாற் கட்டுண்டு அந்தணர்ஆவியிழந்தனர். உடனேவருணதேவன்[illegible]ரிதாகிய பிரம்மஹத்தியினாற்பீடிக்கப்பட்டுத் தெய்வதேஜசு இழந்த[illegible]கை ஆயினன். உடனே ஜலாதிபதியான வருணன் பாவியானவுடனே சப்தசமுத்திரங்களுஞ் சோஷித்துவிட்டன. கடல்கள் வற்றவும் உலகத்தில் மழையில்லாது ஜீவகோடிகள் மிகுந்ததாபங்களை அடைந்தன. இதைக்கண்ட இந்[illegible]தி தேவர்கள் மிகுந்தவியாகுலசித்தர்களாய் வருணனுடைய பாபத்தைநிவர்த்திக்கவேண்டித் தில்லவனம்வந்து சபேசனையடைந்து சாஷ்டாங்கமாய்நமஸ்கரித்து சந்திரனைச் சடையில்தரித்தவனே! கிருபாரசம்பொருந்தியகடாக்ஷமுடையவனே! நெற்றிக்கண்ணால் காமனையெரித்தவனே! பாற்கடலிலெழுந்த விஷத்தைத் தரித்தவனே! யானையின்தோலையுரித்தவனே! திரிபுரத்தை எரிக்கச் சிரித்தவனே! கனகசபையை நிர்த்தனஞ்செய்யதரித்தவனே! என்று ஸ்தோத்திரஞ்செய்து வருணனுடைய பாவத்தைத் தீர்த்தருளல்வேண்டுமென்று வேண்டிநிற்றலும்,பகவான் அசரீரியாய் ஓ தேவர்களே! நாம்மாசிமாதத்தில் மகநக்ஷத்திரத்தில் [illegible]த்தலத்திற்கு ஈசான்னியதிக்கிலுள்ள சமுத்திரத்தில் வருணனுடையபிரமஹத்தியைதீர்த்துவைக்கிறோமென்று அனுக்கிரகித்தலும், ஆனந்தரச பூரணமான திருவாக்கைக் கேட்டுச் சந்தோஷசித்தர்களாய் தேவர்கள் தத்தம் இடம் சென்றார்கள். வருணன அப்புண்ணியகாலம் வரும்பொழுது சமுத்திரதீரஞ்சென்று இனிநம்முடைய பாவம் சுருங்கிவிடுமென்று நினைத்திருக்கையில் மகநக்ஷத்திரத்தினத்தில் பரமேஸ்வரர் பார்வதிசமேதராய் விருஷபாரூடராய்ச் சிவகணங்கள்சூழ பிரசன்னமாகி வருணனைச்சாகரத்தில் ஸ்நானஞ்செய்வித்தலும் பாவங்கள் நீங்கிப் பரிசுத்தமடைந்தனன். உடனே பகவானை நமஸ்கரித்து நாதனே! இனிநான் இவ்விதமான பாவங்களைப் [illegible]யினும் அதைஇத்தீர்த்தத்திலேயேதீர்த்தருளல்வேண்டும். அன்

றியும் உலகங்களில் ஜீவகோடி[illegible] செய்யும்பாவங்களையும் இப்புண்ணியதீர்த்த ஸ்நானத்தினம் நீக்கியருளல் வேண்டுமென்று வரங்கேட்டனும். அவ்விதமே! ஆகுகவென்று அனுக்கிரகித்து மறைந்தருளினர். ஆதலால் ஓபூபாலனே! அப்புண்ணியதீர்த்தத்தில்உத்திரநக்ஷத்திரத்தில் தீர்த்தாடன மகோற்சவத்தை நடத்தல்வேண்டுமென்றுரைத்தலும், ஹிரண்ணியவர்மன் சபாநாதரை தீர்த்தயாத்திரோற்சவத்திற்காக எழுந்தருளச்செய்துவரும்போது ஸ்நானஞ்செய்யவேண்டித் தேவர்களும், முனிவர்களும், சித்தர்களும், யக்ஷராக்ஷஸர்களும், மனிதர்களும் மிகுந்த பிரேமையுள்ளவர்களாய் சமுத்திரதீரமடைந்து சுவர்ணங்களையும், முத்துரத்தினங்களையும், பவழங்களையும் சமுத்திரராஜனுக் குபசாரமாகக்கொடுத்து நடேசர் சந்நிதியில் பாவங்கள்தீர ஸ்நானஞ்செய்து மிகுந்த சந்தோஷத்துடன் அவர்களிடம் சென்றனர்! இவ்வித மகோற்சவத்தை நடத்தி பகவானைசிற்சபையிற்பிரவேசஞ்செய்வித்து சாஸ்திரங்களாகிய பயோநிதியின் கரையைக் கண்டவர்களாயும் பிரகஸ்பதிக்குச் சமானமானவர்களாயுமிருக்கின்ற திருஸஹஸ்ர முனீசுவரர்களாலும், பணிகுலசிரேஷ்டரான பதஞ்சலிபகவானாலும், வியாக்கிரபாத மகாரிஷியினாலும், பிரதிதினமும் அர்ச்சிக்கப்பட்ட அனந்தநடராஜமூர்த்தியை ஹிரண்யவர்ம மகாராஜன் சந்தோஷசித்தனாய் தரிசனஞ்செய்து வாழ்ந்திருந்தனர்.

கேட்டீர்களோ நைமிசாரண்ய வாசிகளான மகரிஷிகளே! மகிமைதங்கிய இப்புண்ணிய மகாத்மியத்தை எவர்கள்படிக்கின்றார்களோ, எவர்கள் கேட்கின்றார்களோ, எவர்கள் கேட்டு ஆனந்திக்கின்றார்களோ, எவர்கள் எழுதுகிறார்களோ அவர்களுக்கு சிற்சபேசன் அபீஷ்டபலன்களையும் முத்திகளையும் அளிக்கின்றனர் என்று சூதமகாமுனி அருளலும், மகரிஷிகளெல்லோரும் ஆனந்தபரிதர்களாய் சூதாசாரியரை உபசரித்து விடைபெற்றுக்கொண்டு சிதம்பரக்ஷேத்திரமடைந்து சிவகங்கையில் ஸ்நாநஞ்செய்து சிற்சபாநாதரைத் தரிசித்துப் பூரணதிருப்தியடைந்து மிகுந்த களிப்புடன் நித்யவாசஞ்செய்து சுகித்திருந்தனர். சுபம்.

இருபத்தாறுவது அத்தியாயம்-முற்றிற்று.

சிதம்பரமகாத்மியம் முற்றிற்று.

18|065